வெளியீடு 23-10-98

Issued 23-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 6, 1998 – தொகுதி 43 – எண் 2

**Monday the 6th April, 1998 – Volume 43 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

**[Price Rs. 3.00**

419/99

# 6-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **வரவு-செலவுத் திட்டம், *1998-99*, பொது விவாதம்**--தொடர்ச்சி | 135-262 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 135-142 |
| *திரு. ஆர். சொக்கர் | 142-153 |
| *திரு. மு. க. ஸ்டாலின் | 153-161 |
| *திரு. லா. சந்தானம் | 161-169 |
| *திரு. ஐ. கணேசன் | 169-180 |
| *திரு. கே. சுப்பராயன் | 181-198 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 199-225 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 227-262 |
| 2. **அறிவிப்பு**-- | |
| காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கக் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் | 262-263 |
| **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**-- | 263 |

D
12'', 31'N 98
N98·43·2

218454.

C

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 23, ஈஸ்வர, திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 ஏப்ரல் 6, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

*சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

### 1. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் தொடர்வார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற இந்த நேரத்தில், இன்றைக்கு என்னுடைய தொகுதியைக் குறித்து சில வேண்டுகோள்களோடு என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். வேலூர் மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தின் அச்சாணியாக

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 ஏப்ரல் 6

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல்லாண்டுகளாக இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். தற்போது அந்தத் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், சிக்கல்கள், அந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தையே நிலைகுலையச் செய்து இருக்கின்றன என்பதை இந்த அரசு நன்கு அறியும். அதனால்தான், தேர்தலுக்கு முன்பே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபோது இந்தப் பிரச்சினையை அக்கறையோடு விசாரித்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே முத்தரப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி அதன் வாயிலாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அதன் தொடர்பாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதற்காக நாங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆனால், இந்த கழிவுநீர்ப் பிரச்சினை என்பது, பல மாவட்டங்களிலே அதிலும் குறிப்பாக கோயம்புத்தூர், திருப்பூர் பகுதிகளிலே, சேலம் மாவட்டத்திலே, மேட்டுப்பாளையம் பகுதியிலே எல்லாம் மிக பூதாகரமாக உருவெடுத்து இருக்கிறது. இருந்தாலும், வேலூர் மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை வெறும் சுற்றுப்புறச் சூழல் கெடுகின்ற பிரச்சினையாக மட்டுமல்லாமல், சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையே தாழ்த்துகிற பிரச்சினையாகவும், வயிற்றுப் பிரச்சினையாகவும் இன்றைக்கு உருவெடுத்து இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளில் சிலர் முதலாளிகளாக இருக்கிறார்கள். ஆனால், பலர் தொழிலாளிகளாக இருக்கிறார்கள். இன்றைக்கு தொழிலாளிகளாக இருக்கக்கூடிய, சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், இந்தத் தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்பட்டு இருக்கின்ற காரணத்தினால், வேலைகள் நடைபெறுகிற தொழிற்சாலைகளிலும் முழுமையாக வேலைகள் நடைபெறாத காரணத்தினால், மிகவும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

*முற்பகல் 9-35*

இத்தொழிற்சாலைகளுக்கான கழிவுநீர் நிலையங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்தத் துறையில் தொழிற்சாலைகள் செய்து இருக்கிற சாதனை மிக்க பிரமிக்கத்தக்கது என்று சொன்னால் மிகையாகாது. எதிர்பாராத முறையில், குறுகிய



1998 ஏப்ரல் 6] [திரு. ம. அப்துல் லத்தீப்]

காலத்தில் பல கழிவுநீர் நிலையங்கள் இப்போது உருவம் பெற்று இருக்கின்றன. ஆனால், பல இடங்களில் கழிவுநீர் நிலையங்கள் ஏற்படுத்துவதிலும்கூட சிக்கல்கள் உருவாகி இருக்கின்றன. உதாரணமாக என்னுடைய வாணியம்பாடி தொகுதியில் பாலாற்றுக்கு மேற்கே கழிவுநீர் நிலையங்கள் பல ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால் பாலாற்றுக்குக் கிழக்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கான, கழிவுநீர் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. சில இடங்களிலே அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்கள் இடம் தரமாட்டோம் என்கிறார்கள். சொந்த நிலத்திலே கழிவுநீர் நிலையங்கள் ஏற்படுத்தக்கூடத் தடங்கல்களை ஏற்படுத்துகிறார்கள். அப்படித் தடங்கல்களை ஏற்படுத்துகிற காரணத்தினால் மற்ற இடங்களிலே கழிவுநீர் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலும் அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு அதற்கு நிறைவாகக் கிடைப்பதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே, எந்தவிதமான பிரச்சினைகளும் உருவாகாமல், கிராம மக்கள் ஓர் இடத்திலே வேண்டாம் என்றால் மற்றொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்திலே அந்த நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் முயற்சிகளை மேற்கொண்டாலும் அதை சுமூகமாகத் தீர்த்து வைப்பதிலே அதிகாரிகள் இணைந்து செயல்படவில்லை. போதிய ஒத்துழைப்பு தரவில்லையென்பது எங்களுக்கு மிகுந்த ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் கடந்த 3 ஆண்டுகளாக கிழக்குப் பகுதியிலே தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. கழிவுநீர் நிலையங்களை அமைக்க இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏதாவது பிரச்சினை உருவாகுமோ என்ற எண்ணத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதியோடு அதைச் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்தால் அதற்கு அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால் இன்றைக்கு அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டேயிருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே களவுகள் நடைபெறுவதற்கு இந்நிலைகூட ஒரு காரணம் என்று போலீஸ் துறையினர் கூறுகிறார்கள். வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளிலே இப்போது அதிகமாக திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. வீடு புகுந்து திருடுகிறார்கள்,

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 ஏப்ரல் 6

கொள்ளையடிக்கிறார்கள், அவர்கள் பிடிபட்டும் போகிறார்கள். அப்படிப் பிடிபட்டிருக்கின்றவர்களுக்காகப் பேச வேண்டிய கட்டாயம் எனக்கேகூட சில நேரங்களில் ஏற்படுகிறது. ஏனென்றால் திருடுபவர்களும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். பொருளாதாரத்திற்கு இன்றைக்கு மிகப் பெரிய ஊனம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலையிலே தயவுசெய்து நான் தெரிவித்துக்கொள்வது, வேலூர் மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தை மீண்டும் தலைநிமிர்ந்து நிற்க வைக்கக்கூடிய பொறுப்பு இந்த அரசிற்கு உண்டு. இதிலே யாரோ ஒருசிலர்தான் பாதிக்கப்பட்டவர்கள் என்ற சாதாரண எண்ணத்தை மாற்றிக்கொண்டாக வேண்டும். தொழிற்சாலைகளை நடத்தக்கூடிய அதிபர்களில் ஒரு சிலர் வேண்டுமானால் ஒரு சாராரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள்தான் இதிலே பெரும்பாலும் வேலை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து மறந்துவிட வேண்டாம். எனவே இதற்கு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி ஆலங்காயத்திலே கடந்த காலத்தில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் ஒரு வேலைவாய்ப்பு நிலையத்தை அங்கே கொண்டு வந்திருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்திலேதான் அது நடந்தது என்பதற்கு விளக்கம் தேவையில்லை. ஆனால் முன்பு சம்புவராயர் மாவட்டம் உருவாகிய போது மாவட்டத் தலைநகரம் திருவண்ணாமலையாக இருந்தது. அங்கே ஒரு வேலைவாய்ப்பு நிலையத்தை ஏற்படுத்துவதில் எனக்கேகூட மகிழ்ச்சிதான். நான்கூட அதை வற்புறுத்துவேன். ஆனால் அதற்காக ஆலங்காயத்திலே இருக்கிற வேலைவாய்ப்பு நிலையத்தை மாற்றி திருவண்ணாமலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது ஒரு தனி மாவட்டம். எனவே அங்கே ஒரு தனி வேலைவாய்ப்பு நிலையத்தை ஏற்படுத்துவதுதான் சாலச்சிறந்ததாக இருந்திருக்கும். ஆனால் என்னுடைய தொகுதியிலே, அதுவும் ஜவ்வாது மலைப் பகுதியிலேயிருந்த வேலைவாய்ப்பு நிலையத்தை என்ன காரணத்தினாலோ மாற்றிவிட்டார்கள். எனவே அங்கே மக்கள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் வேலூருக்குப் போக வேண்டும். எனவே, தயவுசெய்து எங்களிடத்திலேயிருந்து



1998 ஏப்ரல் 6] [திரு. ம. அப்துல் லத்தீப்]

எடுத்து வேறொரு இடத்திற்குக் கொடுத்த அந்த வேலைவாய்ப்பு நிலையத்தை அருள்கூர்ந்து ஆலங்காயத்திலே மீண்டும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக தொடர்புடைய அமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய விண்ணப்பத்தை வைக்கின்றேன்.

அதைப்போலவே, ஜவ்வாது மலைப்பகுதி முழுவதும் இருக்கிற மக்கள் பத்திரங்களைப் பதிவு செய்ய வேண்டுமானால் வாணியம்பாடிக்கு வர வேண்டும், அல்லது திருப்பத்தூருக்குப் போக வேண்டும். அந்தப் பகுதியில் சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லை. கொஞ்சம் அந்தப் பக்கம் கனிவுப் பார்வையைச் செலுத்த வேண்டுமென்று நான்கூட வற்புறுத்திக் கொண்டிருக்கிறேன். எனவே, பத்திரங்களைப் பதிவு செய்ய வாணியம்பாடி, திருப்பத்தூருக்குப் போவது பல நேரங்களிலே இயலாத காரியமாக அமைந்து விடுகிறது. மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இப்போதுகூட நான் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிக் கொள்வது, கட்டடத்தைத் தயாராக வைத்திருக்கிறேன். உங்களைக் கேட்காமலேயே- அந்தச் சிரமத்தைக் கொடுக்கக்கூடாது என்பதற்காக- பேரூராட்சி மன்றத்திற்குப் பக்கத்திலே, ஒரு புதிய கட்டடத்தைக் கட்டி, அதில் துணை சார்-பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத் தயாராக வைத்திருக்கிறேன்; ஏக்கத்தோடு காத்திருக்கிறேன். எதிர்பார்ப்புகள் நிறைய இருக்கின்றன. எனவே இந்த ஏக்கத்தைப் போக்கும் வகையில் ஒரு சார்-பதிவாளர்- அவர்கள் சார்பாக இந்த சார்-பதிவாளரைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். தயவுசெய்து சார்-பதிவாளர்- அலுவலகத்தை அங்கே உடனடியாக இந்த ஆண்டே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் மிகுந்த வற்புறுத்தலோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மிகவும் அன்போடு வேண்டுகிறேன். இன்னும் 5 நிமிடங்களில் நீங்கள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** உங்கள் அன்புக்கு நன்றி. எனக்குத் தெரியும், இன்றைக்குச் சிக்கல்கள் இருக்கின்றன. பலபேர் பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலும் இருக்கிறது. இந்த உணர்வோடுதான் நான் பேசிக்

கொண்டிருக்கிறேன். அதனால்தான் தொகுதிப் பிரச்சினையை முதலிலேயே தொட்டுப் பேசிவிட்டேன்.

என் தொகுதி சார்பாக இன்னொன்றை கேட்க விரும்புகிறேன். வாணியம்பாடியில் சில தொழிற்சாலைகள் தனியார்களால் நடத்தப்படுகின்றன. அந்தத் தொகுதி முழுவதும், ஜவ்வாது மலைப் பகுதி முழுவதும் பயன்பெற ஒரு தொழிற்சாலையையாவது அரசாங்கத்தின் சார்பாக ஏற்படுத்த வேண்டுமென்று அன்றிலிருந்து இன்றுதொட்டு நான் வற்புறுத்தியே வருகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, சந்தன, தேயிலைத் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, ஏற்கெனவே அதற்கு நிர்வாக அங்கீகாரமும் கொடுக்கப்பட்டு, நிதிநிலை அறிக்கையிலும் சேர்க்கப்பட்டு--மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பார்க்கலாம் என்று சொன்னார்கள்--அதற்குப் பிறகு, ஆட்சி மாறிய நேரத்தில், அந்தத் திட்டமே சின்னாபின்னப்படுத்தப்பட்டு, ஒரு சிறிய பகுதி தெற்குப்பட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 25 இலட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டம் வகுத்து, அங்கே தொழிற்சாலையை ஏற்படுத்தினார்கள். பிறகு அது நிறுத்தப்பட்டது. இப்போது நம்முடைய உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் தொடர்ந்து அதற்கு வேண்டுகோள் விடுத்து, அது நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். உண்மை நிலை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அது நடக்கட்டும். எவ்வளவு வேண்டுமானாலும் நீங்கள் அதை விரிவுபடுத்திச் செய்யலாம். எங்கள் பகுதியில் வேறு எந்த வேலையும் கிடையாது. பலபேர் அங்கே சந்தனத் திருட்டு செய்வதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்கு வேறு வேலையில்லை. சந்தனக் கட்டைகளைத் தொடர்ந்து திருடுகிறார்கள். அதனால் கைதாகிறார்கள், பிரச்சினைகள் எழுகின்றன என்று சொன்னால், தயவுசெய்து, நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது, அருள்கூர்ந்து அங்கு ஒரு தொழிற்சாலையை என்ன தொழிற்சாலை சாத்தியமோ--தொழிற் துறையை நிர்வகித்துக் கொண்டிருக்கிறீர்கள்--அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் விரிவான திட்டத்தோடு ஏற்கெனவே நீங்கள் ஒப்புதல் அளித்திருக்கிற இடத்திலே சந்தன மரத் தொழிலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் தாங்களே முடிவு செய்யுங்கள்; நான் குறுக்கிட விரும்பவில்லை.

நான் அன்றைக்குப் பேசும்போது, தமிழகத்தின் நிலைமையை, இந்தியாவினுடைய நிலைமையைப் பற்றிச் சொன்னேன். இன்றைக்கு





மிக வேடிக்கையான நிலைமை நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. நேற்றைக்கு அமைச்சர்களாக ஆனவர்கள் எல்லாம் இன்றைக்குத் தொடர்ந்து நாட்டிலே ஒரு பெரும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பி.ஜே.பி. அமைச்சரவையிலே இடம் பெற்றுள்ள அமைச்சர் பெருமக்களிலே பலர்-- அவர்கள் அமைச்சர்களாக ஆகிவிட்டார்கள், நாம் வாழ்த்து தெரிவித்தோம்--மாநில அரசுகளைக் கலைக்க வேண்டும் என்பதிலே முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறர்கள்; அதுபற்றி வெளிப்படையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே ஒரு ஸ்திரமற்ற தன்மையை உருவாக்குவதற்கான, அவர்களுடைய இந்தப் பணி ஒரு தேசியக் குற்றமாகவே கருதப்பட வேண்டும். அந்த வகையிலே இன்றைக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

இன்றைய பத்திரிகையிலே பார்த்தால், பி.ஜே.பி.யின் தோழமைக் கட்சிகளிலே ஒன்றான சமதாக் கட்சி, 45 நாட்கள் கெடு வைத்திருக்கிறது. 45 நாட்களுக்குள் பீகார் அரசாங்கத்தை, ரப்ரி தேவி அரசாங்கத்தைக் கலைக்காவிட்டால் நடப்பதே வேறு என்ற தோரணையிலே பிரதமர் அவர்களுக்குப் பயமுறுத்தல், எச்சரிக்கை செய்து இருக்கிறார்கள். அதைப்போலவே இன்றைக்கு வேறு மாநிலங்களிலே, இவர்கள் எதிர்க்கட்சிகளாக ஆண்டு கொண்டிருக்கிற மாநிலங்களிலே, குறிப்பாக தமிழ்நாட்டிலே தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறார்கள். அப்படியென்றால், மராட்டியத்தைக் கலைக்கலாமா? ராஜஸ்தானைக் கலைக்கலாமா? இங்கு ஆட்சி கலைக்கப்பட வேண்டுமானால், அந்த ஆட்சிகளும் கலைக்கப்படத்தான் வேண்டுமல்லவா? ஒரு பிரதமர், தன்னுடைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அமைச்சர்களால் பயமுறுத்தப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு, கெடு விதிக்கப்பட்டால், இந்தச் சூழ்நிலையில் வேறு காரியங்களில் கவனம் செலுத்த முடியாமல், மாநில ஆட்சிகளைக் கலைப்பதா, கூடாதா நாட்டுக்கு அமைச்சர்களாக இருக்கக்கூடியவர்கள் எச்சரிக்கை விடுகிறார்களே என்பதைப் பற்றிய கவலையில்--ஒரு பிரதமர்--இருந்து கொண்டிருக்கிறார் என்றால், மத்தியில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற ஆட்சி ஸ்திரமான ஆட்சியா ஒரு Stable Government-ஆ- என்பதைத்தான் நாடு இன்றைக்கு ஒரு கேள்வியாக எழுப்பிக் கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) விரைவில் முடித்துக் கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 6

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள். 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எங்களைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று கருதுகிறோம். ஆனால் மத்திய ஆட்சியிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் மாநில அரசுகளைக் கலைக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து, நாட்டிலே ஒரு அரசியல் சிக்கலை உருவாக்குவதன் வாயிலாக வெகு விரைவில் பி.ஜே.பி. அரசாங்கத்தையே கலைப்பதற்கு அவர்களே ராஜபாட்டை அமைத்துத் தருவார்களோ என்று நாங்கள் சந்தேகிக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று கருதுகின்ற நாம், தமிழ்நாட்டிலேயோ அல்லது மற்ற இடங்களிலேயோ அரசமைப்புச் சட்டத்திற்கு மாறாக, முரண்பாடாக, அதற்கு விரோதமாகப் பேசி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பலமுள்ள அரசுகளை எல்லாம் கலைக்க வேண்டும் என்று நினைத்தால், வெகு விரைவிலே அவர்கள் எந்தக் காரணத்தால், இப்படிப் பேசுவதற்கு துணிவு பெற்றிருக்கிறார்களோ, அந்தக் காரணம் அவர்களிடத்திலேயிருந்து விடுபட்டுப் போகும். பாவம், பி.ஜே.பி. தலைவர், அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களே அதற்குரிய தண்டனையைப் பெறுவார்களோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அவருடைய சகாக்களின் பொறுப்பு. நம் அனைவருடைய பொறுப்பு. அதற்கு வேறுவிதமாக நடந்தால், நாடு தாங்காது, அவர்களை மன்னிக்காது. அரசியல் ரீதியாக அவர்கள், அதற்குரிய தண்டனையைப் பெற்றுத்தான் தீர வேண்டும் என்று எச்சரிக்கை செய்து, என்னுடைய இந்தப் பேச்சை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ சமர்ப்பிக்கப்படும்போது, ஆளும் கட்சியினர் அதனை முழுமையாக வரவேற்பதும், எதிர்க்கட்சியினர் அதனை முழுமையாக எதிர்ப்பதும், எங்களைப் போன்ற தோழமைக்



1998 ஏப்ரல் 6] [திரு. ஆர். சொக்கர்]

கட்சிகளிலே இருப்பவர்கள் எல்லாம் ஆதரிப்பதுபோல் எதிர்ப்பதும், எதிர்ப்பது போல் ஆதரிப்பதும் வழக்கமான சம்பிரதாயங்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், நம் தமிழகத்தின் பட்ஜெட் மட்டுமல்ல, மத்திய அரசினுடைய பட்ஜெட்டும், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களிலுள்ள பட்ஜெட்டும் எந்த அடிப்படையிலே அமையவேண்டும் என்று நான் கனவு காண்கின்ற பட்ஜெட்டாக எதை நினைக்கின்றேனோ, அதைப் பற்றி என்னுடைய நிதர்சன விமர்சனத்தை இங்கே வாதமாக வைக்க விரும்புகிறேன்.

'இந்த ஆண்டு ஒரு சிக்கலான ஆண்டு. எப்படி என்றால், வருவாய்க் கணக்கிலே, செலவினத்திலே எதிர்பாராத செலவாக ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரையின்படி, அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகமாகக் கொடுக்கவேண்டிய வகையில் சுமார் 1230 கோடி ரூபாய் நம் எதிர்பாராத செலவினத்தில் அதிகரித்து இருக்கின்றது. இது தவிர்க்க முடியாதது. வருவாயைப் பார்ப்போமானால், நாட்டிலே பரவலாக இருக்கக்கூடிய ஒரு பொருளாதாரச் சிக்கலின் காரணமாக, தேக்க நிலையின் காரணமாக, வரி வருமானங்களிலிருந்து வரக்கூடிய வருவாயானது நாம் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை. ஆகவே, இந்த இடைவெளியை ஒரு சர்க்கஸிலே கம்பியைக் கட்டிக் கொண்டு, அதில் ஒற்றைச் சக்கர சைக்கிளிலே ஒரு சர்க்கஸ் கலைஞன் எப்படி பேலன்ஸ் செய்து செல்வாரோ, அந்த அளவிற்கு நம்முடைய கலைஞரும், பேலன்ஸ் செய்து இருக்கின்றார்கள் என்றே நான் கருதுகிறேன்.

இதில் இன்னொரு சமயம் பார்த்தால், மேஜிக் நிபுணர் வித்தையைக் காட்டும்போது, காலியாக ஒரு தொப்பியைக் காட்டிவிட்டு, அந்தத் தொப்பியிலிருந்து முயல் குட்டிகளை எடுத்தவண்ணமாக இருப்பார். அதைப்போன்ற ஒரு மேஜிக் வித்தையும் இங்கே செய்யப்பட்டு இருக்கின்றது. வருவாய்க் கணக்கிலே 3,000 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொல்லிவிட்டு, ஒரு வீட்டிலே தாயும் தந்தையும் தங்களுடைய பல குழந்தைகளுக்கு அவர்களுடைய தேவையை அறிந்து, இருப்பதை எப்படிப் பிரித்துக் கொடுப்பார்களோ அதைப் போல, முதல்வர் அவர்களும் காலியாக இருந்த பட்ஜெட்டிலேயிருந்து பல்வேறு துறைகளுக்குத் தேவையான அளவிற்கு வாரி வழங்கி, அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று இருக்கின்றார். இதுதான் மேஜிக் வித்தை. (மேசையைத் தட்டும் ஒலி) பற்றாக்குறை பட்ஜெட் என்று சொல்லிவிட்டு,

[திரு. ஆர். சொக்கர்] [1998 ஏப்ரல் 6

இருப்பதை எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்பதுதான் காலி தொப்பியிலிருந்து முயல் எடுக்கும் வித்தை. இது எப்படி நிகழ்கின்றது என்பதைத் தெரிந்து கொள்வதுதான் பட்ஜெட் விமர்சனம். கொஞ்சம் ஆர்வமும், கொஞ்சம் பொறுமையும் இருந்தால், முதல்வர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையோடு நமக்கு பெரிய பெரிய புத்தகங்களாக அறையில் வந்து கொடுத்தார்களே, அதிலிருந்து இந்த விவரங்களை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியும். அதைப் புரிந்து கொள்வது மிக மிக அவசியம் என்று கருதுகிறேன். நிதிநிலை அறிக்கை வருவாய்க் கணக்கில் ரூ. 3,000 கோடி பற்றாக்குறையாக இருந்தாலும்கூட அது இறுதியிலே ரூ. 877 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது அல்லவா. அது பரவாயில்லை என்று பலர் சொல்லக்கூடிய விவரங்களை நாம் கேட்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் அப்படி திருப்தி கொள்வது சரியான பொருளாதார அணுகுமுறை அல்ல என்ற என்னுடைய பணிவான கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

பட்ஜெட் மெமோரண்டம் என்ற ஒரு புத்தகம் உண்டு. நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் பார்ட்-I-ல் 7-வது பக்கத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 3,000 கோடி வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையாக இருந்தது எப்படி ரூ. 877 கோடியாக இறுதியில் குறைகிறது என்பதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், பட்ஜெட்டிலே மொத்தம் 3 கணக்குகள் உள்ளன. ஒன்று கன்சாலிடேட்டட் ஃபண்ட்; இரண்டாவது கன்டின்ஜென்சி ஃபண்ட்; மூன்றாவதாக பப்ளிக் அக்கௌண்ட். இந்த மூன்றில் இரண்டாவதாகச் சொன்ன கன்டின்ஜென்சி ஃபண்டில் பட்ஜெட்டிலே வரவு-செலவு குறிக்கப்பட்டிருக்காது. கன்சாலிடேட்டட் ஃபண்டைப் பொறுத்தவரையில் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அதனுடைய வரவு-செலவுக் கணக்கை இந்த அவையிலே தாக்கல் செய்து விவாதமின்றி ஏற்போர் 'ஆம்' என்க என்று சொல்வார் சபாநாயகர். 'ஆம் என்போம் நாம். அது நிறைவேற்றப்பட்டுவிடும். ஆகவே பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் இரண்டு கணக்குகள்தான் நமக்கு பிரதானமானது. ஒன்று கன்சாலிடேட்டட் ஃபண்ட், இன்னொன்று பப்ளிக் அக்கௌண்ட். இந்த கன்சாலிடேட்டட் ஃபண்டில் இரண்டு கணக்குகள் உண்டு. அந்த இரண்டு கணக்குகள் என்னவென்றால்,



1998 ஏப்ரல் 6] [திரு. ஆர். சொக்கர்]

ஒன்று ரெவின்யூ அக்கௌண்ட்; இன்னொன்று கேப்பிடல் அக்கௌண்ட். மூன்றாவதாக இருப்பது பப்ளிக் அக்கௌண்ட். இந்த மூன்று பிரிவுகளையும் நம் முன்னால் கற்பனை செய்து வைத்துக் கொள்வோம். அது ரெவின்யூ அக்கௌண்ட், இது கேப்பிடல் அக்கௌண்ட், இது பப்ளிக் அக்கௌண்ட். ரெவின்யூ அக்கௌண்ட் என்று சொல்வது அதில் வருவாய் செலவு உண்டு, கேப்பிடல் அக்கௌண்டில் வருவாய் செலவு உண்டு. பப்ளிக் அக்கௌண்டிலும் வருவாய் செலவு உண்டு. ரெவின்யூ அக்கௌண்டில் வரக்கூடிய வருவாய் எல்லாம் பிரதானமான வருவாயிலிருந்து வரக்கூடிய வருவாய். நம் மாநிலத்திலிருந்து வரக்கூடிய வருவாயில் விற்பனை வரியின் மூலமாக 6,500 கோடி ரூபாயும், அதற்கடுத்தபடியாக ஸ்டேட் எக்சைஸ்-ஆயத் தீர்வை--மதுபானங்களின்மீது விதிக்கக்கூடிய ஆயத்தீர்வையின் மூலமாக சுமார் ரூ. 1,500 கோடியும், அதற்குப்பிறகு ரிஜிஸ்ட்ரேஷன் மூலமாக சுமார் ரூ. 600 கோடியும், அதற்குப் பிறகு மோட்டார் வாகனங்களின் மூலமாக சுமார் ரூ. 500 கோடியும் இதர வரிகளின் மூலமாக மொத்தம் ரூ. 10,000 கோடியும் வரியிலிருந்து வருகின்றது. 'நான்-டாக்ஸ் ரெவின்யூ' என்று சொல்லி, இன்னும் ரூ. 1,000 கோடி வருகிறது. மத்தியத் தொகுப்பிலிருந்து 'கிராண்ட் இன் எய்டு' என்று சொல்லி, அதிலிருந்து ரூ. 1,000 கோடி வருகிறது. மத்தியத் தொகுப்பிலிருந்து நம் மாநிலத்திலிருந்து வரி செலுத்தக்கூடிய பங்குத் தொகையாக இன்னும் ரூ. 3,000 கோடி வருகிறது. ஆக ரூ. 15,000 கோடி ரெவின்யூவிலிருந்து வரக்கூடிய வரவுதான் நம்முடைய சொந்த வரவு. அந்த சொந்த வரவிலிருந்துதான் இந்த அரசாங்கத்தை நிர்வகிக்கக்கூடிய அனைத்துச் செலவுகளையும் நாம் செய்ய வேண்டும். அந்தச் செலவுகள்-அரசு ஊழியர்களுக்கு சம்பளம், எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜஸ், இன்னும் இதர, தவிர்க்க இயலாத செலவுகள்--நான் அத்தியாவசியமான செலவுகள் என்று சொல்லவில்லை--தவிர்க்க இயலாத செலவுகள் என்ற வார்த்தையை கவனித்தே பயன்படுத்துகின்றேன். அது என்னவென்பதை கொஞ்ச நேரம் கழித்துப் பார்ப்போம்.

அடுத்து, கேப்பிடல் அக்கௌண்ட். கேப்பிடல் அக்கௌண்ட் என்று சொல்வது முழுமையாக கடன் சம்பந்தப்பட்ட அக்கௌண்ட். அந்தக் கேப்பிடல் அக்கௌண்டில் கடன் வாங்குகிறோம், கடன் கொடுக்கிறோம். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் வருவாய்க் கணக்கில் ரூ. 18,000 கோடி செலவாகியிருக்கிறது. ரூ. 15,000 கோடி

[திரு. ஆர். சொக்கர்] [1998 ஏப்ரல் 6

வருமானம் வந்திருக்கிறது. ஆகவே அங்கு துண்டு விழுந்தது ரூ. 3,000 கோடி. அடுத்து மூலதனச் செலவு என்று சொல்வதில் நாம் உபரியாக கடன் வாங்கியது இந்த ஆண்டு ரூ. 2,500 கோடி. மூலதனம் செய்வதற்காக, முதலீடு செய்வதற்காக வாங்கப்பட்ட அந்தக் கடனில் ரூ. 1,800 கோடி மட்டும்தான் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. வாங்கிய கடனில் ரூ. 712 கோடியை நாம் தனியாக வைத்துக் கொண்டுள்ளோம்.

அடுத்தபடியாக, பப்ளிக் அக்கௌண்ட். இந்த பப்ளிக் அக்கௌண்ட் என்று சொல்வது பொதுமக்களின் சிறுசேமிப்பு மூலமாக கொடுக்கக்கூடிய நிதி, கவர்ன்மெண்ட் ஊழியர்களுடைய பிராவிடென்ட் பண்டு மூலமாக மற்றும் கோர்ட் போன்ற விவரங்களுக்கு டெபாசிட்டாக கொடுக்கக்கூடிய நிதி, பொது மக்கள் செய்யக்கூடிய அந்த டெபாசிட் பணம்தான் பப்ளிக் அக்கௌண்ட் என்று சொல்வது. அந்த பப்ளிக் அக்கௌண்டில் உபரியாக ரூ. 1,400 கோடி இருக்கின்றது. ஆக பப்ளிக் அக்கௌண்டில் உபரி ரூ. 1,400 கோடி. கடன் வாங்கியதில் முதலீடு முழுமையாகச் செய்யாமல். அதில் மிச்சப்படுத்தியது ரூ.712 கோடி. இந்த இரண்டும் சேர்ந்து அந்த ரூ.3,000 கோடி வருவாய்ப் பற்றாக்குறையை சரிக்கட்டி முடிவில் ரூ.877 கோடி நிகரப் பற்றாக்குறை என்று இங்கே கூறப்பட்டிருக்கிறது. இப்போது மூலதனச் செலவு. வருவாய்ச் செலவு என்றால் என்ன என்பதற்காக ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது எங்கள் ஊரிலே ஆஸ்பத்திரி கட்டவேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்று சொன்னால், ஆஸ்பத்திரி கட்டுவது என்பது மூலதனச் செலவு. கட்டிய பிறகு டாக்டர்கள், நர்ஸ் மற்றும் மருந்து வாங்குவதற்காக செலவு செய்யக்கூடியது வருவாய்ச் செலவு, ரெவின்யூ எக்ஸ்பென்டிச்சர். குடிதண்ணீர்த் திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் சொல்கிறோம். கிணறு தோண்டுதல், பம்ப் செட் போடுவது, மின்சார மோட்டாரைப் போடுவது இவை மூலதனச் செலவு. பிறகு, அதைப் பராமரிப்பதற்கான சம்பளச் செலவு, மின் மோட்டாரை இயக்குவதற்கான செலவு போன்றவை பராமரிப்புச் செலவுகள், ரெவின்யூ எக்ஸ்பென்டிச்சர். இந்த மூலதனச் செலவிலிருந்து பணத்தை எடுத்து ரெவின்யூ எக்ஸ்பென்டிச்சராக நாம் செலவு செய்து கொண்டே போனால், கண்டிப்பாக ஒரு காலத்தில் மூலதனச் செலவு செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.



1998 ஏப்ரல் 6]

முற்பகல் 9-55

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமர்பிக்கப்பட்டிருக்கின்ற பட்ஜெட்டின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, கொள்கை ரீதியான விமர்சனங்களை முன்வைப்பார் என்று எதிர்பார்த்தால், பட்ஜெட் போடுவது என்றால் என்ன என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வகுப்பு நடத்துவதுபோல் அவரது பேச்சு அமைந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, வகுப்பு நடத்துவதை விட்டுவிட்டு, பட்ஜெட்டில் உள்ள சாராம்சங்கள் என்ன, அதைப் பற்றி தமிழ் மாநில காங்கிரஸ் என்ன கருதுகிறது என்ற விவரங்களுக்குள்ளே போவது பொருத்தம் என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், கொஞ்சம் இருங்கள். உறுப்பினர்களுக்குப் பேச்சுரிமை இருக்கிறது. நீங்கள் அதிலே குறுக்கே புகுந்துகொண்டு, அவர் என்னவோ பேசுகிறார் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. விமர்சனத்தை எதிர்க்கட்சித் தலைவர் பண்ணுவார்கள். இவர் பட்ஜெட் எப்படிப் போடுவது என்று எங்களுக்கெல்லாம் சொல்லித் தருகிறார். (சிரிப்பு) அதனால், அதில் தடையில்லை. திரு. சொக்கர் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பேச ஆரம்பிக்கும்போதே நான் கனவு காண்கின்ற பட்ஜெட் என்று சொல்லித்தான் ஆரம்பித்தேன். இன்னும் முழுமையாக முடிப்பதற்குமுன் அவர் கொஞ்சம் அவசரப்படாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவருக்கு பதில் சொல்வதாக நினைத்து நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளாதீர்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, இந்த வருவாய்க் கணக்கிலே வரக்கூடிய 15,000 கோடி ரூபாயில், வருவாய்க் கணக்கிலே என்னென்ன செலவினங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், தவிர்க்க இயலாத செலவினங்கள். இன்று அரசு ஊழியர்களுக்குச் சம்பளப் பணம், கிராஜுவிடி, ஏற்கெனவே கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகைகள் எல்லாம் சேர்ந்து

[திரு. ஆர். சொக்கர்] [1998 ஏப்ரல் 6

10,327 கோடி ரூபாய் வருகின்றது. மத்தியத் தொகுப்பிலேயிருந்து அரிசியை அதிக விலையிலே வாங்கி இங்குள்ள ஏழையெளிய மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் ரூ. 1,000 கோடி செலவாகின்றது. ஏழைக் குழந்தைகள் ஒரு வேளையாவது நல்ல உணவைச் சாப்பிட வேண்டும் என்ற அடிப்படையிலே மிகச் சிறந்த திட்டமாக நடத்தப்படுகின்ற மதிய உணவுத் திட்டத்திற்கு ரூ.460 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது. ஏழை விவசாயிகள் இலவசமாகவாவது மின்சாரத்தைப் பெற்று விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பித்திருக்கின்ற திட்டத்திற்கு ரூ. 1,500 கோடி ரூபாய்ச் செலவில், வருவாய்க் கணக்கில் ரூ. 250 கோடி கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், முதியோர் ஓய்வூதியம் போன்ற செலவினங்களுக்காக ரூ. 160 கோடி செலவாகிறது. இலவச பஸ் பாசுக்காக ரூ. 60 கோடி, கைத்தறி மானிய வகையிலே ரூ. 60 கோடி; திருமண உதவித் திட்டத்திற்காக ரூ. 60 கோடி. ஆக ரூ. 2,055 கோடி. இந்தச் செலவினங்கள் தவிர்க்க முடியாத செலவினங்களாக மாறிவிடுகின்றன. இதுவும் போக இன்னும் ஓவர் ஹெட்ஸ். கவர்ன்மெண்ட் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இருக்கும். அந்த ஓவர் ஹெட்ஸ், டெலிபோன் பில்ஸ், இ.பி. சார்ஜஸ், போன்றவைகளையெல்லாம் சேர்க்கும்போது, மொத்தம் ரூ. 18,000 கோடி வருவாய்க் கணக்கிலே செலவாக இருந்துவிடுகின்றது. இதுவும் போக, மூலதனக் கணக்கிலிருந்து போக்குவரத்துத் துறையில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை சரிக் கட்டுவதற்காக, அந்த நஷ்டம் 480 கோடி ரூபாய் வரையிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மூலதனக் கணக்கிலேயிருந்து, ரூ. 250 கோடி எடுத்து ஈக்குவிட்டி பங்குகள் வாங்க, இன்னும் ரூ. 250 கோடியை மின்சார வாரியத்திற்கு ஈடுகட்டுவதற்காக மூலதன கணக்கிலே எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். வருவாய்க் கணக்கிலே ஏற்படக்கூடிய இந்தப் பற்றாக்குறை கண்டிப்பாக குறைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். ஆனால், கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 12,000 கோடி ரூபாய் வருமானத்தில் 1,700 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருந்தது. இது 14 சதவிகிதம். ஆனால், இந்த ஆண்டு, 15,000 கோடி ரூபாய் வருமானத்தில் 3,000 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது 20



1998 ஏப்ரல் 6] [திரு. ஆர். சொக்கர்]

விழுக்காடு. கடந்த ஆண்டு வருவாய்க் கணக்கிலே ஏற்படக்கூடிய பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் சொன்னபிறகும் இந்த ஆண்டு அது 14%லிருந்து 20% ஆக உயர்ந்திருக்கிறது என்பதையும் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

முற்பகல் 10-00

ஆனால் நான் ஏற்கெனவே சொன்னபடி இந்த ஆண்டு இருக்கக்கூடிய சிக்கலான காரணங்களினால் இதைச் சரிக்கட்ட முடியாமல் போயிருக்கலாம். ஆனால் என்னுடைய வேண்டுகோள் எல்லாம் வரக்கூடிய ஆண்டிலாவது இந்த வருவாய்க் கணக்கிலே உள்ள பற்றாக்குறையை, இந்த ஆண்டு இருக்கக்கூடிய 20% என்பதை வரக்கூடிய ஆண்டிலே நீங்கள் 15 சதவிகிதமாகவாவது குறைக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரசை நிர்வாகம் செய்யக்கூடிய சம்பளச் செலவு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கே நாம் கடன் வாங்கியும் பொது மக்களுடைய நிதியிலிருந்தும்தான் எடுத்துச் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்ற இந்தியாவில் உள்ள நிலை-தமிழக அரசில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள நிலை-ஒரு ஆரோக்கியமான பொருளாதார நிலைக்கு அடையாளம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு கடன் வாங்கலாம். அதில் தவறு அல்ல. ஆனால் வாங்குகின்ற கடனை எப்படி, எதற்காகச் செலவழிக்கின்றோம் என்பதுதான் முக்கியம். உதாரணமாக ஒரு வீட்டை எடுத்துக்கொள்வோம். ஒருவர் கடனை வாங்கி ஒரு பெட்டிக் கடையை வைத்து அந்த பெட்டிக் கடையில் வருகிற லாபத்தின் மூலமாக கடனைத் திருப்பிக் கட்டி அதற்குப்பிறகு அந்தப் பெட்டிக் கடையின் மூலமாக வீட்டிற்கு நிரந்தர வருமானம் வருவதற்காக கடன் வாங்கலாம். அல்லது வீட்டிலே நன்றாகப் படிக்கக்கூடிய குழந்தைகள் இருக்கின்றார்கள். அவர்களை மருத்துவக் கல்லூரியிலோ அல்லது பொறியியல் கல்லூரியிலோ சேர்ப்பதற்காக கடனை வாங்கி அவரை டாக்டராகவோ, என்ஜினியராகவோ ஆக்கிவிட்டோம் என்றால் அவர்கள் படித்து முடித்து வந்த பிறகு வாங்கிய கடனை திருப்பி அடைக்க முடியும். அதற்குப் பதிலாக அந்தக் குடும்பத்திலே ஒரு தாத்தா இருந்தார் 100 வருடத்திற்கு முன்னாடி; குடும்பத்திற்காக

ரொம்பவும் நல்லது செய்தவர்; அதனால் 1 இலட்சம் ரூபாய் கடனை வாங்கி வீட்டிற்கு முன்னாடியே அந்தத் தாத்தாவிற்கு ஒரு சிலையை வைத்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமை எல்லாம் பொங்கல் இண்டி வருவோர்களுக்கெல்லாம் போட்டுக் கொண்டிருந்தோம் என்று சொன்னால் வாங்கிய கடனை திருப்பி அடைக்கவும் முடியாது; அந்த வட்டிச் சுமையாலும் கடன் சுமையாலும் பிள்ளைகளையும் படிக்க வைக்க முடியாமல் அந்தக் குடும்பம் தன்னுடைய வீட்டையே விற்கக்கூடிய நிலைக்கு வந்துவிடும் என்ற ஒரு கருத்தையும் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று தென் கொரியா, இந்தோனேஷியா ஆகிய இரண்டு நாடுகளும் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க முடியாமல் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு அவர்கள் பட்டினியால் வாடக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே பட்ஜெட் என்பது எந்த திசையை நோக்கிச் சொல்ல வேண்டும் என்பதை ஒரு அடிப்படை பொருளாதாரக் கொள்கையாக, ஒரு நிரந்தரக் கொள்கையாக உருவாக்க அனைத்து அரசியல் கட்சிகளும் அமர்ந்து பேசக்கூடிய இக்கட்டான சூழ்நிலையில், நெருக்கடியான சூழ்நிலையில்தான் நம்முடைய பொருளாதார நிலை இருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். தென் மாநிலங்களிலே ஜாதிக் கலவரம் ஏற்பட்டபோது எப்படி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும், பெரியோர்களையும் கூப்பிட்டுப் பேசி ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி அந்தப் பிரச்சினைக்கு முதல்வர் முற்றுப்புள்ளி வைத்தாரோ அதேபோல பொருளாதார வல்லுநர்களையெல்லாம் ஒன்றுகூட்டி பேசி, இனி பொருளாதாரக் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி அந்தப் பொதுக் கருத்தின் மூலமாக கான்ஸ்டிடியூஷனல் அமெண்ட்மெண்ட் கொண்டு வந்து பட்ஜெட் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு ஃபினான்ஷியல் டிஸிப்ளின் பாரத நாட்டிலே மத்திய அரசுக்கும் வேண்டும்; அனைத்து மாநில அரசுகளுக்கும் வேண்டும் என்ற கருத்தினையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்தபடியாக பொதுவான சில பிரச்சினைகள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆர். சொக்கர்:** தலைவர் அவர்களே, கண்டிப்பாக முடித்துவிடுவேன். அடுத்து ஷாக்கிங் நியூஸ். மின்சாரம். மின்சாரத் தேவை ஆண்டு ஒன்றிற்கு 6%-லிருந்து 10% வரை அதிகரித்துச் செல்கின்றது. ஜெயலலிதா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே ஒரு மெகாவாட் மின்சார உற்பத்திகூட, அதிகமாக உற்பத்தித் திறனைக் கூட்டக்கூடிய ஒரு முயற்சிகூட எடுக்கப்படவில்லை. 1993 ஆம் ஆண்டிலே பாரதப் பிரதமராக இருந்த நரசிம்ம ராவ் அவர்கள் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், தனியார் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யச் சொல்லலாம் என்று. தமிழ்நாட்டிலும் பலர் துவங்க வேகமாக வந்தார்கள். அவர்களிடம் ஏதோ எதிர்பார்த்த காரணத்தினால் வந்த வேகத்தைவிட அவர்கள் வேகமாகச் சென்றுவிட்டார்கள். ஆகவே அவர்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்காமல் இருக்கக்கூடிய அந்தச் சுமையானது இப்போது இருக்கக்கூடிய அரசின் மீது விழுந்திருக்கிறது என்பதை நாங்கள் உணர்கின்றோம். ஆனால் இருக்கக்கூடிய மின்சாரத்தை விநியோகம் செய்வதில் துக்ளக் தர்பாரைவிட மோசமான குழப்பம் மின் வாரியத்திலே நடக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். I am sorry to state that the chaotic situation that is prevailing in the distribution of available power is due to the lethargic attitude and the total mismanagement of the T.N.E.B. என்பதை நான் என்னுடைய வருத்தமான கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

இதை solve செய்வதற்கு ஒரே வழி எச்.டி. உபயோகிப்பவர்களுக்கு பிளாட்டாக 25 சதவிகிதம் கட் என்று அறிவித்துவிட்டால் அவர்கள் அதை வரவேற்கிறார்கள். ஒரு நாளில் பிரச்சினை சரியாகப் போய்விடும். செய்யப் போகிறீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. எங்களுக்கு இருக்கக்கூடியது எல்லாம் 25 சதவீதம் கரண்ட் கட் என்று அனவுன்ஸ் செய்து விட்டால் மீதி இருக்கக்கூடிய 75 சதவிகிதம் கரண்ட் ஒழுங்கான முறையில் வோல்டேஜ் ப்லக்சுவேஷன் இல்லாமல் கொடுத்தால் அதன் மூலமாக அனைத்து வீடுகளுக்கும், அனைத்து சிறு தொழிற்சாலைகளுக்கும்,

விவசாயிகளுக்கும் சிரமம் இல்லாமல், வோல்டேஜ் வித்தியாசம் இல்லாமல் கண்டிப்பாக கரண்ட் கிடைக்கும். தயவுசெய்து அதை நீங்கள் பரிசீலனைசெய்ய வேண்டும். அதில் என்னமோ ரெவின்யூ குறைகிறது, குறைகிறது என்று சொல்கிறார்கள். அதெல்லாம் கிடையாது. 2 பிளஸ் 2=4 என்று சொல்வார்கள், ஆனால் இந்தக் கணக்கிலே அப்படி வராது. 2 பிளஸ் 2 = 3 என்று தான் வரும். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, குஜராத் மாநிலத்திலே....

**HON. SPEAKER:** Please finish your speech in one minute.

**திரு. ஆர். சொக்கர்:** தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்து விடுகிறேன். குஜராத் மாநிலத்திலே நர்மதா Valley-யிலிருந்து தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டத்திற்காக பட்ஜெட்டில் 1400 கோடி ரூபாயை அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் இந்த ஆண்டு. இன்னும் வரக்கூடிய 5 ஆண்டுகளிலே 14 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்போகிறார்கள். இதேபோல் பெரிய திட்டங்களைத் தீட்டி மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி போன்ற நதிகளின் இணைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தென் மாநிலங்களுடைய அனைத்து முதலமைச்சர்களையும் ஒன்று கூட்டி பேசி, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று இதுபோன்ற நிரந்தர பெரிய திட்டங்களை நீங்கள் உருவாக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக மத்தியிலே புதிய அரசு ஏற்பட்டிருக்கிறது. அதனோடு இந்த அரசும் நல்ல அணுகுமுறையைக் கையாண்டு தமிழக மக்களுடைய நலன் கருதி கடந்த ஐக்கிய முன்னணி அரசிடமிருந்து எப்படி பல சலுகைகளை இந்த அரசு பெற்றதோ அதுபோல தொடர்ந்து இந்த அரசிடமிருந்தும் பெற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களைப் பொறுத்தவரையில் தன்னை மிரட்டிப் பார்த்த சண்டி ராணியைக்கூட மண்டியிட வைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். அவர் என்றும் ஜனநாயக விரோதப் போக்கினை கையாள மாட்டார் என்று நம்புகிறேன்.





பாரதிய ஜனதாக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் திரு. இல. கணேசன் அவர்கள் சமீபத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். பாரதிய ஜனதா ஆட்சிக்கு கர்ப்பத்திலேயே பெரிய அம்மை தாக்கி விட்டது. அந்தத் தாக்குதலிலிருந்து மீண்டு வந்துவிட்டார். ஒரு தடவை அம்மை தாக்கி விட்டால் இனி பெரிய அம்மையோ, சின்ன அம்மையோ இதை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். அதைப்போல கடந்த காலத்தில் தமிழகத்தில் பெரிய அம்மை, சின்ன அம்மை சேர்ந்து தாக்கியது. இனி அந்த அம்மைகள் மீண்டும் தாக்கிவிடாமல் தமிழக மக்கள் என்றும் விழிப்புணர்வோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. க. ஸ்டாலின்.

***திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நன்றி தெரிவித்து பேசக்கூடிய வாய்ப்பு தந்த தங்களுக்கு நான் முதலில் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே சென்னைவாழ் மக்களுக்காக பல்வேறு திட்டங்களையும், நிதி ஆதாரங்களையும் தந்தமைக்கு சென்னை மாநகர மக்களுடைய முதல் பிரதிநிதி என்ற முறையிலே இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அரசமைப்புச் சட்ட 74-வது திருத்தத்தின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உயிர் கொடுத்து, அதிகாரம் கொடுத்து, நிதி ஆதாரத்தையும் கொடுத்து வரலாற்றிலே இடம் பெற்றுள்ளார் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள். முக்கியமாக ஆண்டுதோறும் செப்டம்பர், அக்டோபர் திங்களில் பெய்யக்கூடிய பெரிய மழையின் காரணமாக சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு தண்ணீர் தேங்கி விடுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களை மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களிலும், மாநகராட்சிக் கட்டடங்களிலும் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, உணவு அளித்து, நிவாரணம் அளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்குத் தீர்வு

[திரு. மு. க. ஸ்டாலின்] [1998 ஏப்ரல் 6

காணும் வகையில் சென்னையில் உள்ள பங்கிங்காம் கால்வாய், கூவம் நதி, அடையாறு போன்ற நீர்வழிகளைத் தூர் எடுத்து சுத்தப்படுத்துதல், கழிவுகள் கலவாது தடுத்தல், சுற்றுப்புறத்தை அழகுபடுத்தல், நீர்வழிப் போக்குவரத்து மீட்டமைத்தல், மனமகிழ் வசதிகளை உண்டாக்குதல், போன்ற பணிகளை மேற்கொண்டு, இவற்றின் பயன்பாட்டைப் பெருக்கிட பெரும் திட்டம் ஒன்றை உருவாக்கியிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

சென்னையில் உள்ள இந்த ஆறுகளையும் சுத்தப்படுத்தி, அதன் இரு கரைகளையும் அழகுபடுத்தி அலங்காரப் படகுகளை விடுவோம் என்று சொன்னால், சென்னையைச் "சிங்காரச் சென்னை"யாக்கும் திட்டம் மிக விரைவிலே வெற்றி பெற்றிட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திற்கு மிக அதிக அளவில் நிதி தேவைப்படும் என்பதை நான் உணராமல் இல்லை. அதனால், ஆற்றினுடைய கரைகளில் மனமகிழ் வசதிகளை ஏற்படுத்தி, உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் பல்வேறு திட்டங்களைச் செய்திட முடியும். நல்ல உணவு ரெஸ்டாரண்டுகளை அமைப்பதற்கு அனுமதி தரலாம். அதைத் தொடர்ந்து ஆற்றிலே படகுப் பயணம் விட தனியாருக்கு அனுமதி தரலாம். இதன் மூலமாக நிதி பெருக வாய்ப்பு உண்டு. எனவே, இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்தித் தருமாறு நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

அடுத்து, சென்னையிலே மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதைத் தடுப்பதற்காக 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் பல்வேறு வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் முடிவுற்றுவிடும் என்று சொன்னால் ஆண்டுதோறும் மழை நேரங்களில், சென்னை மக்கள் பாதிக்கப்படுகிற நேரத்தில் அவர்களுக்குத் தேவையான நிவாரண வசதிகளைச் செய்ய வேண்டிய அவசியம் நிச்சயம் இருக்காது என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே, பக்கம் 4-5-இல் "உள்ளாட்சி மன்றங்கள்" என்ற தலைப்பில், சென்னை நீங்கலாகப் பிற மாநகராட்சிகளுக்கு 25 கோடி ரூபாயும், நகராட்சிகளுக்கு 10 கோடி ரூபாயும்,



1998 ஏப்ரல் 6] [திரு. மு. க. ஸ்டாலின்]

பேரூராட்சிகளுக்கு 25 கோடி ரூபாயும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே, சென்னை மாநகராட்சி பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே, முதல்வரவர்கள் தன்னுடைய பதிலுரையில், சென்னை மாநகராட்சியினுடைய நிதி ஒதுக்கம் பற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 366 கோடி ரூபாய்ச் செலவில் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் வரும் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், சென்னையைச் சுற்றியிருக்கக் கூடிய முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் 212 கோடி ரூபாய் அளவில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் மூலம கடன் பெற்று இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இது மகிழ்ச்சிக்கு உரியது, பாராட்டுக்குரியது.

அதைத் தொடர்ந்து, லஸ் முதல் வேளச்சேரி வரை சென்னை விரைவு ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணி ரூபாய் 605 கோடி செலவிலே, வரும் ஆண்டில் தொடங்கும் என்று நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கான ஒதுக்கீடு பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எனவே, முதல்வரவர்கள் தன்னுடைய பதிலுரையில் அதையும் குறிப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரின் வளர்ந்துவரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையம், தனியார் முதலீட்டுடன், ஒரு கூட்டு முயற்சியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனையும் விரைவுபடுத்தி, சென்னைவாழ் மக்களுடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெரும் வணிக மற்றும் நிதி மையம் உருவாக்கப் போவதாக நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதனுடைய பணிகளைப் பற்றியும், செயல்பாடுகளைப் பற்றியும் குறிப்பிடவில்லை. அதையும் விளக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. க. ஸ்டாலின்] [1998 ஏப்ரல் 6

கழக அரசினுடைய கண்டுபிடிப்பான, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அதற்காக அரசின் சார்பில் சிறப்பு நிதியாக 52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. மொத்தம் 33,282 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக அரசின் சார்பில் 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்தை அரசின் சார்பில் நிறைவேற்றுகிற நேரத்தில் கிராமப் பகுதிகளை மாத்திரம் தேர்ந்தெடுத்து பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இத்திட்டத்தை நகர்ப்புறப் பகுதிகளுக்கும் கொஞ்சம் விரிவுபடுத்தி நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசை வீடுகள் அடிக்கடி தீப்பிடிக்காத வகையில், அதற்கு மாற்றாக, தீப்பிடிக்காத ஆஸ்பெஸ்டாஸ் கூரை வீடுகள் போட்டுத் தருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இது பாராட்டுக்குரியது; மகிழ்ச்சிக்குரியது. ஆனால், அதேநேரத்திலே, என்னுடைய பணிவான வேண்டுகோள் ஒன்றை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக 1970-ஆம் ஆண்டு, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான், குடிசை மாற்று வாரியம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டன. ஆனால், குடிசைகள் ஒழிந்தனவா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை. குடியிருப்புகளில் குடியிருக்கக் கூடியவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அக்குடியிருப்புகளை வாடகைக்குவிட்ட பிறகு அல்லது விற்ற பிறகு, அங்கிருந்து அவர்கள் காலி செய்து கொண்டு, அருகிலேயே புதிதாகக் குடிசை போட்டுக் கொண்டு அங்கேயே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதுபோன்ற ஒரு நிலைமை ஆஸ்பெஸ்டாஸ் போடக் கூடிய நேரத்தில் நிச்சயமாக வரக்கூடாது. அதனால், அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி கண்காணிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-15

பெண்கள் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் மூவலூர் இராமாமிர்த அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம். எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கக்கூடிய



1998 ஏப்ரல் 6] [திரு. மு. க. ஸ்டாலின்]

பெண்களுக்கு இந்தத் திருமண உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்தநேரத்திலே, என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள். பெண்கள் படிப்பதை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் 10 ஆம் வகுப்பு வரை படித்திருக்கக்கூடிய பெண்களுக்கு 12 ஆயிரம் ரூபாய் தரவேண்டும். ஏற்கெனவே நீங்கள் எட்டாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் தந்து கொண்டிருக்கிறீர்கள். வேண்டுமானால் அதைக் கொஞ்சம் குறைத்து எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கக்கூடிய பெண்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் என வழங்கினால், பெண்களைப் படிக்க வைக்க ஊக்கப்படுத்தக்கூடியதாக நிச்சயமாக இது அமையும் என்று நான் என்னுடைய கருத்தாக வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அரசு ஊழியர்களுக்கான ஊதியத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். அதுபோல உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கக்கூடிய பணியாளர்களுக்கும் நாம் உயர்த்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இருக்கின்ற நிதியாதாரம் அதற்கே சரியாகப் போய்விடுகிறது. எனவே, இந்த நிலையில் அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு என தனியாக ஒரு மானியத்தை வழங்கிட வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைத் தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய 8 சதவிகிதம் என்ற அந்த விழுக்காட்டை 9 விழுக்காடாக உயர்த்தித்தர வேண்டுமென்று நான் வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் 302 கிலோ மீட்டர் பேருந்து சாலைகளும், 1899 கிலோ மீட்டர் உட்புற சாலைகளும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அந்தச் சாலைகளை புதியதாகப் போடுவதாக இருந்தாலும் அல்லது பழுதடைந்திருக்கக்கூடிய சாலைகளைச் சீர் செய்வதாக இருந்தாலும், சென்னை மாநகராட்சிதான் அதற்குச் செலவு செய்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த வருடம் சாலைக்காக மட்டும் 55 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். வரக்கூடிய ஆண்டில் 55 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறோம். சென்னை நகரின் வாகன வரி--எம்.வி.டேக்ஸ், மோட்டார் வெகிக்கில்ஸ் டேக்ஸ் என்று சொல்கிறோமே--அந்த வரியிலிருந்து அரசு மாநகராட்சியின் பராமரிப்புக்காக குறைந்தது 75 சதவிகிதமாவது வழங்கிட

வேண்டுமென்று நான் என்னுடைய கோரிக்கையாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென் சென்னையில் தாம்பரம், சைதாப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர், வேளச்சேரி போன்ற பகுதிகளில் தனியே குடிநீர் சுத்திகரிப்பு நிலையம். அதேபோல, விநியோக நிலையம் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று ஏற்கெனவே இதே அவையிலே பேசியிருக்கிறேன். தென் சென்னை மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நம்முடைய அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசுகின்ற நேரத்தில் எடுத்து வைத்த கோரிக்கை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தந்துகொண்டிருக்கக்கூடிய 25 இலட்சம் ரூபாயை, இந்த நிதிநிலை அறிக்கையிலே 5 இலட்சம் ரூபாய் உயர்த்தி, 30 இலட்சம் ரூபாயாக தர உத்தரவிட்டிருக்கிறீர்கள். நான் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புவது, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே, நாங்கள் ஒவ்வொரு வார்டு உறுப்பினருக்கும் 3 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்து கொண்டிருக்கிறோம். ஆக, ஒரு தொகுதிக்கு 12 வட்டம் என்று சொன்னால், 36 இலட்சம் ரூபாயை மாநகராட்சியிலே நாங்கள் தந்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆற்றிலிருந்து, நதியிலிருந்து வரக்கூடிய தண்ணீர் கடலில்தான் கடைசியில் போய்ச் சேருகிறது. அதுபோல, என்னதான் திட்டங்களை நாம் தந்துகொண்டிருந்தாலும், அது மக்களிடத்திலேதான் போய்ச் சேருகிறது.

**திரு. ஆர். சொக்கர்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கை ஒரு அடி பாய்ந்தால் குட்டி 10 அடி பாயும் என்பது போல் இருக்கின்றது.

**திரு. மு. க. ஸ்டாலின்:** தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும். எனவே, அரசு நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கக்கூடிய அந்த நிதியை உயர்த்தித்தர வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு என்பது நம்முடைய முதல்வருக்கு தெளிவாகத் தெரியும். எனவே, நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.





எனவே, இப்படிப்பட்ட சிறப்புக்குரிய நிதிநிலை அறிக்கையை அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்; வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மத்தியிலே பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சி அமைந்திருக்கிறது. அந்தக் கூட்டணி ஆட்சியைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களைக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் மனதார வாழ்த்தியிருக்கிறார்கள். ஆக, அந்த ஆட்சி நிலையான ஆட்சியாக அமையவேண்டுமென்று மக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-20*

திரு. வாஜ்பாய் அவர்கள் தன்னுடைய நெஞ்சிலே வைத்து பூஜித்துக்கொண்டிருக்கக்கூடியவர் யார் என்று கேட்டால் ராமர். அது அனைவருக்கும் தெரியும். அந்த ராமர் மீது அளவுகடந்த பற்றையும், பக்தியையும், பாசத்தையும் கொண்டிருப்பவர் திரு. வாஜ்பாய் அவர்கள். எனவே, திரு. வாஜ்பாய் அவர்களுடைய கடவுளாக இருக்கக்கூடிய ராமரே தன்னுடைய மனைவி சீதையின் மீது சந்தேகம் வந்தபோது, அக்னிப்பிரவேசத்திற்குப் பிறகுதான் தன்னுடைய மனைவி சீதையை ஏற்றுக்கொண்டார் என்று இராமாயணம் கூறிக் கொண்டிருக்கிறது. அதேபோல், ஊழல் குற்றச்சாட்டிலே சிக்கி, நீதிமன்றத்திற்குப் போய்க்கொண்டிருக்கக் கூடியவர்கள் எல்லாம் இன்றைக்கு மத்தியிலே அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அவர்களுக்கு எப்போது அக்னிப் பிரவேசம் என்று இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் பெயர் சொல்லிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் பொதுவாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இதிலே குறுக்கிட வேண்டிய அவசியமில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் இந்த அரசு கையாலாகாத

[திரு. மு. க. ஸ்டாலின்] [1998 ஏப்ரல் 6

அரசு என்று எடுத்துச் சொன்னார்கள். உண்மைதான். கையாலாகாத அரசுதான். அரசுப் பொறுப்பிலேயிருக்கும்போது அரசாங்கச் சொத்தைக் குறைந்த விலைக்கு விற்று, அதன் மூலமாக பிழைப்பு நடத்தத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாதம் ஒரு ரூபாய் ஊதியம்; ஆனால் ஐந்து ஆண்டுகளில் சேர்த்ததோ 66 கோடி ரூபாய்ச் சொத்து. ஆக இப்படிச் சொத்துக்களைச் சேர்க்கத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).

தனக்கு எதிராக ஒரு வழக்கறிஞர் வாதிட முன்வந்தால், அடியாட்களை ஆட்டோ ரிக்ஷாவிலே அனுப்பி கொலை பாதகச் செயல்களைச் செய்யத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகைச் சுதந்திரத்தையே காலில் போட்டு மிதித்து ஜனநாயகத்தைப் படுகுழிக்குத் தள்ளத்தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

தன் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், தர்ம அடி கொடுக்கத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பேச விடாமல் அடியாட்களை வைத்து தூக்கி வெளியே போடத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).

முதலமைச்சர் வெளியே வருகிறார் என்று சொன்னால் சாலையைக் காலி செய்யத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

வளர்ப்பு மகன் திருமணத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யத் தெரியாத கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).

சுடுகாட்டுக் கூரையிலே ஊழல்; இலவச வேஷ்டி சேலையிலே ஊழல். இப்படி ஊழல் செய்யத் தெரியாத ஒரு கையாலாகாத அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).



1998 ஏப்ரல் 6] [திரு. மு. க. ஸ்டாலின்]

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இன்னும்கூட, அதே ஆணவத்தோடு இந்த அரசினுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொல்கிறார்கள். இதே வார்த்தையை, இதே அவையிலே அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து திரு. விநாயகம் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். 'Your days are numbered' என்று சொன்னார்கள். உடனே அறிஞர் அண்ணா அவர்கள், 'My steps are measured' என்று சொன்னார்கள். என்னுடைய அடிகள் அளவோடு எடுத்து வைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட முறையில் நம்முடைய மரியாதைக்குரிய அம்மையார் அவர்கள் அதே கருத்தோடு நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆம், நாட்கள் எண்ணப்படுகின்றன. எதற்காகத் தெரியுமா? கோடி கோடியாக மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து, இன்றைக்கு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய அந்த வழக்குகளின் முடிவுகள் வருவதற்கு நாட்கள் எண்ணப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).அந்த முடிவுகளின்படி அம்மையார் அவர்கள் உள்ளே போவதற்குரிய நாட்கள் எண்ணப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இங்கு மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பெரும்பான்மை பெற்ற உறுப்பினர்களால் நடைபெறக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி.ஆனால் இந்த ஆட்சியினுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொன்னால், 13 வாக்குகளை மட்டுமே அதிகமாகப் பெற்ற மத்தியிலுள்ள அவர்களுடைய கூட்டணி ஆட்சியினுடைய நாட்களை யார் எண்ணுவது? (மேசையைத் தட்டும் ஒலி). ஆணவத்தால் அழிந்தவர்கள் எத்தனையோ பேர் என்பதை மாத்திரம் எடுத்துரைத்து என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 10-25*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, நமது மாண்புமிகு தமிழக

[திரு. லா. சந்தானம்] [1998 ஏப்ரல் 6

முதல்வர் அவர்கள் அளித்திருக்கின்ற இந்த 10வது நிதிநிலை அறிக்கையானது--1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையானது--ஏழை எளிய மக்களுக்கு தேனிலே ஊறிய செந்தமிழாக, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியை ஏற்றுகின்ற உதயசூரியனாக அமைந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களுக்கு வரிச் சலுகை அளித்து, ஏழை, எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற எண்ணெய் வித்துக்கள், மசாலா போன்றவைகளுக்கெல்லாம் வரிவிலக்கு அளித்து, அப்படி வரி விலக்கு அளித்ததோடு, எந்தப் பொருளுக்கும் வரியை அதிகமாகக் கூட்டி மக்களுக்கு வரிப் பளுவை ஏற்றாத அளவுக்கு ஒரு இனிமையான நிதிநிலை அறிக்கையை நமது முதல்வர் அவர்கள் இங்கே வழங்கியிருக்கிறார்கள்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏதோ தாங்கள் பெரிதாகச் சாதித்துவிட்டதாக எண்ணிக்கொண்டு, இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கின்றவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்டிருக்கின்ற நிலையானது, நமது கூட்டணி இயக்கங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற ஒரு சிறிய சரிவுதான். அதோடு எச்சரிக்கையும்கூட. உலக சரித்திரத்தில் பெரிய பெரிய சாதனையாளர்களெல்லாம் இன்றைக்கு வீழ்ச்சியடைந்து இருக்கின்றார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் அவர்களிடத்தில் இருந்த தன்னம்பிக்கைதான். "All the mightiers in the history of the world are betrayed by their own confidents" என்று சொல்வார்கள். நம்மிடமுள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான் இவ்வளவு பலத்தை நாம் பெற்றிருக்கிறோம். நம்மை யாரும் அசைத்துவிட முடியாது என்கின்ற நம்பிக்கையின் காரணமாக, கடந்த தேர்தலில் நமது தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் பல இலட்சக்கணக்கான வாக்குகளை ஒவ்வொரு தொகுதியிலும் அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற காரணத்தால், நம்மை யாரும் அசைத்துவிட முடியாது, அதற்கு ஏதுவாக கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக நடந்து கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில் எந்தவிதத் தவறும் இல்லை, ஊழலும் இல்லை. நீதியான, நேர்மையான, ஒழுக்கமான நல்லாட்சி நடந்து கொண்டிருக்கின்ற



1998 ஏப்ரல் 6] [திரு. லா. சந்தானம்]

காரணத்தால், நமக்கு இந்தத் தேர்தலில் அச்சமில்லை என்கின்ற நிலையோடு நாம் இருந்துவிட்டோம். அந்தக் காலத்தில் பள்ளிகளில் படித்திருக்கிறோம். முயலுக்கும் ஆமைக்கும் ஓட்டப் பந்தயம் வைத்தபோது, அதில் தன்னை ஆமையால் வெல்ல முடியாது என்ற எண்ணத்தோடு முயல் தூங்கிவிட்டது. மெதுவாக நகர்ந்த ஆமை முந்திவிட்டது என்கின்ற கதை போலத்தான் நாம் சற்று சோர்வாக இருந்துவிட்ட காரணத்தால், அவர்கள் முந்திக் கொண்டார்கள். ஆனால் இப்பொழுது நாம் விழித்துக் கொண்டுவிட்டோம். அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து இவ்வளவு அருதிப்பெரும்பான்மையுள்ள ஒரு அரசைக் கலைத்துவிட்டு நீங்கள் மீண்டும் ஆட்சிப் பீடத்தில் ஏறலாம் என்று நினைத்து, ஏதாவது இடையூறு விளைவிக்க நினைத்தால், அது நிச்சயமாக பகல் கனவாக, கானல் நீராகத்தான் முடியும் என்பதை நான் எச்சரிக்கையாகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு வரிச் சலுகைகளை அளித்திருந்தாலும்கூட, அவைகளெல்லாம் முறையாக மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை நமது அரசு விழிப்போடு கண்காணிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. முதியோர்களுடைய ஓய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கின்ற நாம், அந்த ஓய்வூதியங்களெல்லாம் முறையாக உரியவர்களைச் சென்றடைகின்றனவா என்கின்ற நிலையைப் பார்த்துக் கொள்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். நாங்களெல்லாம் கிராமங்களுக்குச் செல்கின்ற நேரத்தில் அங்கிருக்கின்ற முதியோர்களெல்லாம் ஒவ்வொரு மாதமும் அவைகளெல்லாம் முறையாகக் கிடைப்பதில்லை, ஓரிரு மாதங்கள்கூட காலதாமதம் ஆகின்றது என்று சொல்கிறார்கள். எனவே, அவைகளெல்லாம் முறையாகக் கிடைப்பதற்கு, உரியவர்களைச் சென்றடைவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, கிராம மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் கிராமப்புற வளர்ச்சிக்காக சாலை வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்றவற்றிற்கு சிறப்பு நிதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 10-30

விவசாயிகளுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு குளங்களையும், ஆறுகளையும் தூர் வாருகின்ற திட்டம் கடந்த 15 ஆண்டுகளாகச் செய்யப்படாததை எல்லாம் கடந்த ஆண்டிலே செய்து, மீண்டும் இந்த ஆண்டும் அப்பணி தொடர்வதாகக் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது. விவசாயிகள் இயற்கையை நம்பி தங்களுடைய தொழிலைச் செய்கிறார்கள். சில நேரங்களில் வறட்சியின் காரணமாக அவர்களின் பயிர்கள் வாடுகின்றன. அதிகமாக மழை பெய்தாலும்கூட பயிர்கள் சேதமடைகின்றன. சென்ற ஆண்டு அதிகமாகப் பெய்து, வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் கிடைக்கவில்லை. இப்படியெல்லாம் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய அத்தனை கட்சிகளுடைய உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும், தம்பி திருநாவுக்கரசும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நேற்றுகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாய அணியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இந்த அரசு ஏதாவது செய்தாக வேண்டும். அவர்கள் கூட்டுறவு வங்கிகளிலே வாங்கியிருக்கின்ற கடன்களை, தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பெற்றிருக்கின்ற கடன்களையெல்லாம் இன்றைக்கிருக்கின்ற நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக முழுவதுமாக தள்ளுபடி செய்ய முடியாவிட்டாலும்கூட, அவர்களுடைய வட்டி, அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து என்பது கிராமங்களிலே மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. கடந்த ஆண்டிலே ஒவ்வொரு தொகுதிக்கும் நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இரண்டு பேருந்துகளைக் கொடுத்தார்கள். அத்திட்டம் இந்த ஆண்டு தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதுபோல நமது உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கின்ற நேரத்திலே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எப்படியிருக்கிறது என்று சொன்னால், 'கண்ணிலன், பெற்றிழந்தான் என உழன்றான்' எனக் கம்பர் குறிப்பிட்டதைப் போல, கண்ணொளி திட்டத்தைத் தந்த





கலைஞர் அவர்கள், பார்வையற்ற ஒருவனுக்கு பார்வையைத் தந்து, மீண்டும் அதை எடுத்துக் கொண்டால் அவன் என்ன துயரத்திற்கு ஆளாவானோ, அதுபோன்று இந்தத் திட்டத்தைக் கடந்த ஆண்டு அறிவித்து இந்த ஆண்டு எடுத்துவிட்டால் நாங்களெல்லாம் துயரப்படுவோம். அந்தப் பகுதி மக்களுக்காக, அவர்கள் பயன்படுத்துவதற்காக இந்தப் பேருந்துகள் உள்ளன. எனவே அந்தத் திட்டத்தை இந்த ஆண்டும் தொடர வேண்டும். அந்தந்தத் தொகுதிகளுக்கு வழங்குகிற பேருந்து வசதிகளை வழங்க வேண்டும்.

நீர்ப்பாசன ஆதாரத்தைப் பொறுத்தளவிலே என்னுடைய பகுதியிலே பெரியார் அணை என்பது மிக முக்கியமான ஒன்று. மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி ஆகிய 4, 5 மாவட்டங்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு ஆதாரப்பூர்வமாக விளங்குகின்ற பெரியார் அணையினுடைய மட்டத்தை 152 அடியாக உயர்த்தித் தரவேண்டுமென்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், முக்கியப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், Central Water Commission-னுடன் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நீர்வளத் துறை அமைச்சரோடு பேசிக் கொண்டிருக்கின்ற இந்தநேரத்தில், சென்ற வாரம் கேரள சட்ட மன்றத்திலே இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டபோது, தமிழகத்திற்கு நாங்கள் அணையின் மட்டத்தை 152 அடி வரை உயர்த்திக் கொடுக்க மாட்டோம் என்று பேசியிருக்கிறார்கள். எனவே நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் விழிப்பாக இருந்து, அந்த அணையின் மட்டத்தை 152 அடியாக உயர்த்தித் தருவதற்கான முயற்சியில் உறுதியாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

அதோடு, இந்த ஆண்டு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏறத்தாழ 600 கோடிக்கு மேலே நிதியொதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைககு நமது நாட்டினுடைய பொருளாதார சூழ்நிலையைப் பார்க்கும்போது கல்விக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் சென்று கற்கின்ற மாணவர்கள், ஏதோ தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; தங்களுடைய பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்

[திரு. லா. சந்தானம்] [1998 ஏப்ரல் 6

என்பதற்காக மட்டும் செல்கின்ற நிலை இல்லை. தங்களுடைய பொருளாதாரச் சூழ்நிலையிலே, அவர்கள் படித்துவிட்டு அதன் மூலமாக அரசுப்பணியினை ஏற்று, அதாவது ஒரு வேலைவாய்ப்பினைப் பெற்று, தங்களுடைய குடும்பங்களை நடத்துகின்ற சூழ்நிலையிலேதான் இன்றைக்கு ஏறத்தாழ 90 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் இருக்கின்றார்கள். இந்த நிலையிலே கல்விக்காக இவ்வளவு நிதியை ஒதுக்கிக் கொடுத்து, கல்வியை வளர்க்கின்ற இந்த அரசு, அவர்களுடைய வேலைவாய்ப்பிலும் சற்று அக்கறை எடுத்துக் கொண்டு, வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கு ஏதாவது வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் கொடுத்திருந்தாலும்கூட, அங்கே பணிபுரிகின்ற மக்கள் நலப் பணியாளர்கள், எழுத்தர்கள், சத்துணவு அமைப்பாளர்கள் போன்றவர்களெல்லாம் மிகக் குறைந்த ஊதியத்தைப்பெற்று வருகின்றார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ரூ. 500/- என்பது, ஏறக்குறைய 5, 6 நாட்களுக்குக்கூட அவர்களுடைய குடும்பங்களை நடத்த முடியாத அளவிற்கான ஒரு தொகை என்கின்ற காரணத்தினால்,--சென்ற இரண்டொரு வாரங்களுக்கு முன்னால் சத்துணவு ஊழியர்களெல்லாம் சென்னைக்கு வந்து பெரியதொரு ஊர்வலத்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள்--அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு பரிசீலிக்க வேண்டும். இன்றைக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கின்ற கருணையுள்ளம் கொண்ட இந்த அரசு, அந்தப் பணியாளர்களுக்கும் ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, குடும்ப அட்டை, பொது விநியோகம் என்பது ஒரு அரசினுடைய நலத் திட்டங்களுக்கு மிகமிக அவசியமானது. ஒரு அரசுக்கு நல்ல பெயரை ஈட்டித் தருவதே இந்தப் பொது விநியோக முறைதான். இன்று நாம் இரு வண்ணங்களிலே கார்டுகள் வழங்க இருக்கிறோம். கடந்த ஆட்சிக் காலத்திலே இந்தக் கார்டுகளெல்லாம் முறையாக வழங்கப்படாமல் வியாபாரிகளிடத்திலேதான் குடும்ப



1998 ஏப்ரல் 6] [திரு. லா. சந்தானம்]

அட்டைகள் நிறைந்திருந்தன. இலட்சோப இலட்சம் போலிக் கார்டுகள் இருந்தன. உரியவர்களுக்கு அந்தக் குடிமைப் பொருட்கள் போய்ச் சேரவில்லை. அவர்களிடத்திலே கார்டுகள் இல்லை. அந்த நிலை இப்போதும் ஏற்பட்டுவிடாமல் இருக்க, நமது அரசாங்கம் அட்டைகளை வழங்குகின்ற நேரத்தில், முறையாகக் கணக்கு எடுத்து, உரியவர்களுக்கு, ஏழையெளியவர்களுக்கு அந்த அட்டைகள் போய்ச் சேருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த சுதந்திரப் பொன்விழா ஆண்டிலே, நமது தலைவர் கலைஞர் அவர்கள், எங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, மாநகர் சென்னையிலே நேதாஜிக்கு சிலை எடுத்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். அம்பேத்கருக்கு மணிமண்டபம் அமைக்க இருக்கிறார்கள்; வரவேற்கிறேன். பூலித்தேவனுக்கு நினைவிடம் ஏற்படுத்த இருக்கிறார்கள்; பாராட்டுகிறோம். அதுபோல, இந்த நாட்டிற்கு தன்னையே அற்பணித்த எங்களது தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு, அவர் தன் கடைசி காலத்தில் வாழ்ந்த இடமாகிய திருநகரில், அவர் குடியிருந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு தேவர் திருமகன் அவர்களுடை[illegible]ம்கூட இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். எங்களது இயக்கத்தின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்று இருந்த ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மொக்கையன் என்பவர், இந்தச் சட்டமன்றத்திலே பாடிக் காட்டினார்கள். அத்தனை பேர்களுடைய படங்களும் இருக்கின்றனவே, என்னுடைய தலைவன் படம் ஏனோ இல்லை என்று பாடிக் காட்டியவுடனே, அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் அப்படத்தை வைத்தார்கள். அதுபோல, இன்றைக்கும் டாக்டர் பாலசுந்தரம் என்பவர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர். அவர் சென்ற 89-வது தேவர் பிறந்த நாள் விழாவிலே ஒரு விளம்பரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவர் அவர்கள் எப்படிப்பட்டவர்கள்; இந்த நாட்டிற்கு அவர் ஆற்றிய தொண்டுகள் என்ன என்பதை அவர் சொல்லியிருக்கிறார். தேவர் திருமகன் ஒரு அரிசன ஊழியன் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1938-ஆம் ஆண்டு, மதுரை தியாகி வைத்தியநாதன் அவர்கள்,

அரிசனங்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பிரவேசம் செய்தபோது, தேவர் திருமகன், அரிசனங்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, அவர்கள் எனது சகோதரர்கள் என முழக்கமிட்டு, அவர்களை ஆலயப் பிரவேசம் செய்து வைத்தவர் அந்த மகான். அந்த மகான் சேலம் சென்றால், ஓர் ஆதிதிராவிடன் வீட்டிலேதான் சாப்பிடுவது, தங்குவது. அவருடைய சமையல்காரன் ஆதிதிராவிடனே என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஓர் விளம்பரமாகவே கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தேசியத் தலைவருக்கு, அவர் வாழ்ந்த திருநகரிலே, அவர் வாழ்ந்து மறைந்த அந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

அடுத்து, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை கொடுத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியான சோழவந்தானிலே மிகுந்த ஜன நெரிசல் உள்ளது. அதற்கு ஒரு புறவழிச் சாலை வேண்டும். சோழவந்தான் நகர், வளர்ந்து வருகிற நகர். அதற்கு ஒரு புறவழிச் சாலை தேவை என்று அவர்களிடத்திலே கோரிக்கை கொடுத்திருக்கிறேன். அதேபோல, ஒரு தீயணைப்பு நிலையம் அலங்காநல்லூரிலே வேண்டுமென்றும் கொடுத்திருக்கிறேன். மேலும், ஒரு சுற்றுலா மையம் வேண்டும் என்றும் கொடுத்திருக்கிறேன். இன்றைக்குக் கூட, இவ்வளவு கடுமையான வறட்சியிலும்கூட, தாடகநாச்சியார் அருவியிலே தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. நேற்றுகூட புரட்சிப் பேச்சாளர் திரு. லியோனி என்பவர், பட்டிமன்றம் நடத்துபவர்; அவர் அந்த நீர்வீழ்ச்சிக்குச் சென்று குளித்துவிட்டு வந்து, என்னிடத்திலே சொன்னார்; 'மிக அருமையான இடம் இதை நிச்சயமாக நீங்கள் ஒரு சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும்' என்று சொன்னார். நானும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு, அதிகாரிகளை அனுப்பி அந்த இடத்தைப் பார்வையிட்டபோது, இன்றைக்கு மதுரையிலே சுற்றுலா இடங்களே இல்லை என்றும் தெரிவித்தேன். எங்களிடத்திலே இருந்த வைகை அணை போன்றவைகள், கொடைக்கானல் போன்றவைகள் எல்லாம் திண்டுக்கல், தேனி மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டன. ஆகவே, எங்களுடைய மதுரை மாவட்டத்திற்கு அது ஓர் அரிய வாய்ப்பான இடம் என்கின்ற காரணத்தினால், அதற்கு ஏற்கெனவே 55 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்தும் வைத்திருக்கிறீர்கள்; ஆகவே, இந்த நிதியை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டு, நல்ல வாய்ப்பு அளித்த தங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

***திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி-1 என்ற முறையிலே, என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றிகலந்த வணக்கத்தை முதலிலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நான் நன்றி சொல்ல வேண்டும். டாக்டர் ஐயா அவர்களுடைய சார்பாகவும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சார்பாகவும், இலட்சோப இலட்ச வன்னியகுல மக்களின் சார்பாகவும், கோடானுகோடி மக்கள் சார்பாகவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் 30-5-96 அன்று இதே சட்டமன்றத்திலே பேசும்போது-- நான் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தச் சட்ட மன்றத்திலே வந்து முதன்முறையாகப் பேசியது 30-5-96-- அப்போது நான் சொன்னேன். 'கலிங்கத்துப் போரை அறியாமல், அசோகன் புத்த மதத்தைப் பின்பற்றியது அறிய முடியாது; அதேபோல, எங்களுடைய இனமானக் கண்மணிகள் இட ஒதுக்கீட்டுப் போராளிகளை அறியாமல், பாட்டாளி மக்கள் கட்சியை அறிய முடியாது' என்று 30-5-96-லே சொன்னேன். திண்டிவனத்திலே அந்தத் தெரு ஓரத்திலே, இலட்சோப இலட்சம் இளம் உள்ளங்கள், அந்த வன்னிய சமுதாய மக்கள் உட்கார்ந்து, "எங்களுக்கு உண்டான அந்த இட ஒதுக்கீட்டைக் கொடுங்கள்" என்று போராடிய நேரத்திலே, போலீஸாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி, முப்பது பேருக்கு மேலாக இறந்தார்கள்; அவர்களுக்கு இந்த அரசு நன்றிக் கடனாக ஏதாவது செய்ய வேண்டும்; இதை அந்தச் சமுதாய மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்' என்று 30-5-96-லே நான் கேட்டேன். அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் 1998-வது ஆண்டிலே ஒரு இலட்சம் ரூபாய் அளித்திருப்பதை உளமார, மனமார

[திரு. ஐ. கணேசன்] [1998 ஏப்ரல் 6

ஐயா அவர்களின் சார்பாகவும், என் சார்பாகவும், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அன்பான வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு அவர்களுடைய கல்வித் தகுதியை அறிந்து அரசு வேலை கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

அதேபோல, 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டவர்கள் மற்றும் தமிழைக்காக்க வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்தை எதிர்த்த அந்த மொழிப் போராட்ட வீரர்கள் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பென்ஷன் வழங்குவதைப்போல, இந்த இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 30 பேர்தான் இருக்கும் என்று நினைக்கிறேன், அவர்களுக்கும் இந்த குடும்பப் பென்ஷனை நமது முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த மக்களின் சார்பாகவும், 107 சமுதாய மக்களின் சார்பாகவும் பணிவோடு, நன்றிகலந்த வணக்கத்தோடு முதல்வர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பற்றி நமது முதல்வர் அவர்களும், இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மொத்த வருவாய்ச் செலவு 18,048.04 கோடி, ஆனால் வரவு 15,039.46 கோடி, பற்றாக்குறை 3,008 கோடி ரூபாயாக இருக்கும் என்றும், அதில் புதிய வரிகள் 340 கோடி ரூபாய் உள்பட இதர வருமானம் 2,471.91 கோடி ரூபாய் என்றும் மீதி இறுதிப் பற்றாக்குறை 536.67 கோடி ரூபாய் என்றும் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே இவ்வளவு பெரிய தொகையான 18,000 கோடி ரூபாயிலே கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு மட்டும் 9,000 கோடி ரூபாயைச் சம்பளமாக வழங்குகிறோம். அதுவும் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டிலே அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கக்கூடிய அதே சம்பள



1998 ஏப்ரல் 6] [திரு. ஐ. கணேசன்]

விகிதம் சென்ற ஆண்டிலிருந்து கொடுக்கப்படும் என்று இவ்வளவு பற்றாக்குறை நேரத்திலும் முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 9,000 கோடி ரூபாயை அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே அவர்கள் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் ஒரேயொரு குறைபாட்டையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள் 39.5 சதவிகிதம். இந்தியாவை எடுத்துக்கொண்டால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் 40 சதவிகிதம் பேர். அதைவிட தமிழ்நாடு 0.5 சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்பது பெருமைப்பட வேண்டிய விஷயம்தான். இருப்பினும், வண்டி இழுக்கக்கூடிய தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் போன்ற ஆயிரமாயிரம் தொழிலாளர்களிடமிருந்து நாம் வரியாகப் பெற்று அந்தப் பணத்தை 13 இலட்சம் ஊழியர்களுக்கு நாம் பாதியாகப் பிரித்து கொடுத்துவிடுகிறோம். பயன் பெறுபவர்கள் 13 இலட்சம் ஊழியர்கள்; வரி கொடுப்பவர்கள் 6 கோடி மக்கள். அந்த 6 கோடி மக்களிடமிருந்து வரியை வாங்கி 13 இலட்சம் ஊழியர்களுக்கு பாதியாகப் பிரித்துக் கொடுக்கிறோம். அதுமட்டுமா, அவர்களுக்கு மருத்துவச் செலவு, சாலை வசதி, மின்விளக்கு வசதி, பஸ் வசதி அத்தனையும் மீதி பாதி ரூபாயிலிருந்து செய்யப்படுகிறது. அதிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அப்படியிருந்தும் முதல்வர் அவர்களே, எத்தனை அலுவலகத்திலே அந்த ஏழையெளியவர்களுடைய கணவன் இறந்துவிட்டால் அதற்கான சான்றிதழைப் பெற அலுவலகம் சென்று, கொடுங்கள் என்று கேட்கிற நேரத்திலே அவர்களிடமிருந்து எவ்வளவு கொடூரமான முறையிலே லஞ்சமாக பணம் பறிக்கிறார்கள் ஒருசில அதிகாரிகள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, என்னுடைய சேலம் மாவட்டத்திலே பண வசதி சற்று அதிகம். இங்கே இருக்கக்கூடிய விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். சேலம் மாவட்டத்திலே அரசு ஊழியர்கள் ஒருசிலர் சொந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதாவது, 8 ஆயிரம், 10 ஆயிரம், 12 ஆயிரம் என்று அரசாங்கப் பணத்தை கைநிறைய சம்பளமாகப் பெறும் அவர்கள் எப்படி அரசு வேலையிலே கவனம் செலுத்த முடியும்? இதையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் மிக நுணுக்கமாகக் கவனித்துச் செயல்பட

வேண்டும். ஏழை எளிய பாட்டாளி மக்கள் நெற்றி வியர்வை சிந்தி, பாடுபட்டுப் பெறும் பணத்தை வரியாகக் கொடுக்கிறார்கள். அந்த வரியை சம்பளமாக வாங்கக்கூடிய அரசு அதிகாரிகள் சொந்தத் தொழிலில் ஈடுபட்டு அரசாங்கத் தொழிலிலே கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் கண்டுபிடித்து அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா அரசாங்க அதிகாரிகளும் அவ்வாறு செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒருசில அரசாங்க அதிகாரிகள் அவ்வாறு செய்கிறார்கள். அவர்கள் மீது நீங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

அடுத்ததாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதே அவையில் நான் அன்று சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். நம்முடைய இன்றைய முதல்வர் அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். குழந்தைகள் மையம் 1-7-1982-லே ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிக்கூட சத்துணவுத் திட்டம் 9-2-1983-லே ஆரம்பிக்கப்பட்டது. இன்று அந்தச் சத்துணவுத் திட்டம் படிப்படியாக வளர்ந்து 464 கோடி ரூபாய் அளவுக்கு நடத்தப்படுகிறது. அதுவும் வாரம் ஒரு முட்டை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தில் 73.41 இலட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக, நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது ஒன்றே ஒன்றுதான். சத்துணவு அமைப்பாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் 606 ரூபாய்தான். அங்கே சமையல் செய்யக்கூடிய சமையல்கார அம்மையாருக்குக் கொடுக்கப்படுவது 270 ரூபாய். இது தவிர அடிஷனலாகப் போடக்கூடிய இரண்டாவது சமையல்கார அம்மையாருக்குக் கொடுக்கப்படுவது 230 ரூபாய். நான் கேட்கிறேன், இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்த முடியுமா? தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் திருடினால் யாருடைய வயிற்றிலே அடிக்கப்படும். ஏழை எளிய குழந்தைகளினுடைய வயிற்றில்தானே அடிக்கப்படும். ஆகவே, சத்துணவு அமைப்பாளர்களுக்குக் குறைந்தது 1,000 ரூபாய், 1,500 ரூபாய் வரை சம்பளமாக வழங்க வேண்டுமென்று





உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையான, சத்துணவு அமைப்பாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்; 15 ஆண்டுக்காலம் பணிபுரிந்த சத்துணவு அமைப்பாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கவேண்டும்; சம்பளத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு அளிக்க வேண்டும், இரண்டு சமையல்கார அம்மையார்களுக்கும் சம ஊதியம் வழங்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விலைவாசி உயர்வுக்கு ஏற்றபடி சத்துணவுக்கான தொகை உயர்த்தப்பட வேண்டும். இன்றைக்கு ஒரு மாணவனுக்கு 18 பைசா வீதம் செலவிடப்படுகிறது. காய்கறிக்கு 9 பைசா, விறகிற்கு 5½ பைசா, மளிகைக்கு 3 பைசா, அரசாங்கம் அளிக்கக்கூடிய உப்புக்கு ½ பைசா என்று மொத்தம் 18 பைசாக்கள் மட்டும்தான் சத்துணவு பெறும் ஒரு குழந்தைக்காக அளிக்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. இதை குறைந்தது 30 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சத்துணவு அளிக்கக்கூடிய அத்தனை இடங்களிலும் குடிநீர் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

அடுத்து, நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இங்கே பேசியபோது ஒரு தெளிவான கருத்தினை எடுத்துச் சொன்னேன். அன்று தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர்கள் நலிந்த நிலையிலே இருந்த நேரத்தில் பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கடல் அறிஞர் அண்ணா அவர்களும், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களும் நெசவாளர்களின் துணிகளை தோளிலே போட்டுக்கொண்டு விற்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதுகூட ஒன்றைச் சொன்னார்கள். நான் புரட்சித் தலைவரிடத்திலே 5,000 ரூபாய்க்கு அன்றைக்கு துணியை விற்றேன் என்றும், ஒரு லட்சம் ரூபாய்க்கு ஒரு நாள் அந்தத் துணியை விற்று, இந்தக் கைத்தறியை வளர்ப்பேன் என்றும் சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் இந்தக் கைத்தறியானது இன்றைக்கு நலிந்து கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவையில் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் கைத்தறியும் விசைத்தறியும் இரண்டுமே நலிந்து கொண்டிருக்கின்றன. இந்த அவையில் இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இங்கே, இப்போது கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இல்லை. இருந்தாலும் நான் பணிவன்போடு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். அன்று அமைச்சர் சொல்லும்போது சொன்னார் "40 கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டோம். 10 நாட்களுக்கு முன்னால் 30 கோடி ரூபாய் கொடுத்துவிட்டோம்" என்று இந்த அவையில் சொன்னார்கள். ஆனால், என்னிடத்திலே வரக்கூடிய அத்தனை விண்ணப்பங்களையும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உங்கள் மூலமாக அனுப்பி வைக்கிறேன். 1994-95 மற்றும் 1995-96லே மட்டும் கிட்டத்தட்ட 38 கோடி ரூபாய் கைத்தறிச் சங்கங்களுக்கு இந்த அரசாங்கம் பணம் கொடுக்கவில்லையென்று கைத்தறி சொசைட்டியைச் சேர்ந்த அத்தனை சங்கங்களும் விண்ணப்பம் கொடுத்திருக்கின்றன. அதுமட்டுமல்ல. என்னுடைய எடப்பாடி தொகுதியிலே மட்டும் கிட்டத்தட்ட 70 லட்சம் ரூபாய் வரை கைத்தறிச் சங்கத்திலே கடனாக இருக்கின்றது. அந்தச் சங்கங்கள் இதற்கு வட்டி கட்ட முடியாமல், அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்க முடியாமல் எவ்வளவு அல்லல்படுகிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, செயற்கை இழை நூல் மற்றும் செயற்கை இழைகளுக்கு விற்பனை வரி சென்ற ஆண்டு 8 பைசாவாக இருந்ததை 2 பைசாவாகக் குறைத்தார்கள். இந்த ஆண்டு 2 பைசாவாக இருந்ததை 8 பைசாவாக உயர்த்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய எடப்பாடி தொகுதியில், கே.கே. நகர், எலம்பள்ளி, ஜலகண்டாபுரம், குமாரப்பாளையம் ஆகிய பகுதிகளிலே கைத்தறிச் சங்கங்கள் மூலமாக நார்பட்டைத்தான் நெய்து விற்பனை செய்கிறார்கள். ஏழை எளியவர்கள் உபயோகப்படுத்தக் கூடிய அந்த நார்ப்பட்டுக்கு 8 பைசாவாக இருக்கும் அந்த வரியை, இரக்க குணம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் அந்த ஏழைகளின்பால் பற்று வைத்து மீண்டும் 2 பைசாவாகக் குறைக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தது, இந்தத் தமிழ்நாட்டிற்கே மிகச் சங்கடத்தை விளைவித்திருக்கின்ற ஒன்று, அத்தனை பேரும் பேசக்கூடிய ஒன்று, அதுதான் மின்சாரம். மின்சாரத்தைப்பற்றி பேசும்போது அமைச்சரைப் பார்க்கவே எனக்குச் சற்று சங்கடமாக இருக்கிறது. அவரும் என்னவோபோல இருக்கிறார். இது நாட்டினுடைய நிலை. இதற்கு என்ன செய்வது என்று புரியவில்லை. என்னுடைய பகுதியிலே பம்பு செட்டுகள் எல்லாம் குறைந்த மின் அழுத்தத்தினால் தானாகவே எரிந்து விடுகின்றன. விவசாயிகளுடைய வயிற்றெரிச்சல் நம்முடைய அரசின் மீது வந்து விடக்கூடாது. பவர்-லூமில் அரைத்துண்டு கூட நெய்ய முடியாமல் உடனடியாக கரெண்ட் ஆஃப் ஆகிவிடுகின்றது. அவர்கள் வெளியே சென்று விடுகிறார்கள். தொழில் அப்படியே பாதிக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு வேளை மின் வெட்டு என்று சொன்ன அன்றிலிருந்து ஒரு நாளைக்கு 40, 50 தடவைகள் மின்வெட்டு வருகிறது. அவர் சொன்னதற்கும் அதிகாரிகள் செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்திருப்பார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லாமல் இருந்திருந்தாலும்கூட பரவாயில்லை. இரண்டு அல்லது மூன்று தடவைதான் கரெண்ட் கட்டானது என்று சொல்லக்கூடிய நிலை இன்று வந்துவிட்டது. அமைச்சர் அவர்கள் ஒன்றே ஒன்றை மட்டும் எனக்குத் தெளிவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது, நம்முடைய தமிழ்நாட்டிற்கு மொத்த மின்சாரம் எவ்வளவு தேவை? அதிலே தமிழ்நாட்டில் புனல் மின்சாரம் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது? அதைப்போல அனல் மின்சாரம் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது? இன்னும் நமக்குத் தேவையான மின்சாரம் எவ்வளவு? இதை உற்பத்தி செய்ய இந்த அரசு எந்த முறையிலே காரியங்களைச் செய்து வருகின்றது? இதுதான் இந்த நாட்டு மக்களுடைய தேவை. (மணியடிக்கப்பெற்றது). இதை உற்பத்தி செய்ய இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன என்பதை இந்த நாட்டு மக்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதற்கான பதிலையும் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் ஐந்து நிமிடங்களில் பேச்சை முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கே இன்னும் வரவில்லை. இரண்டே இரண்டு விஷயங்கள்தான். அதைச் சொல்லிவிடுகிறேன்.

[1998 ஏப்ரல் 6

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி, தமிழ்நாடு மீதும், மின்சாரத் துறை மீதும் ஒரு பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார்த்து, பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுகின்றபோது, உண்மையிலேயே எனக்கும் இதிலே அக்கறை இருக்கின்ற காரணத்தினால், ஒரு விளக்கத்தை நான் கொடுக்க விரும்புகிறேன்.

இன்றைய சூழ்நிலையிலே நமக்கு நீர் மின்சாரம், அனல் மின்சாரம், மற்றும் மத்திய அரசு மூலம் கிடைக்கக்கூடிய அனைத்தும் சேர்த்து 4600 மெகாவாட் வரை கிடைக்கிறது. நம்முடைய தேவை 4900 மெகாவாட் மின்சாரம் ஆகும். 300 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இன்றைய சூழ்நிலையில், அதிலேயும் மராட்டியத்திலிருந்து நாம் கேட்ட 200 மெகாவாட் மின்சாரத்திற்குப் பதிலாக அவர்கள் 100 மெகாவாட் மின்சாரம்தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். சில நேரங்களிலே அவர்களுக்கும் பிரச்சினை ஏற்படுகின்றது. மின் உற்பத்தி நிலையங்கள் பழுதாகின்றபோது, அவர்கள் நமக்குக் கொடுப்பதும் நின்றுபோய் விடுகிறது. இருந்தாலும், இன்னும் 100 மெகாவாட் மின்சாரம் கிடைத்தால், நம்முடைய நிகரப் பற்றாக்குறை 200 மெகாவாட்டாக இருக்கும். அதை எப்படியாவது நிவர்த்தி செய்ய முடியுமா என்று மத்திய மின்துறை அமைச்சரோடு பேசியபோது, அவர், கிழக்கு மாநிலங்களிலிருந்து நமக்கு மின்சாரம் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால், நாம் அந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், வேறு ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில், ஒவ்வொரு வாரமும், தமிழகத்திலே ஞாயிற்றுக்கிழமைகளிலே, எச்.டி. சப்ளை மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளுக்கு விடுமுறை கொடுத்து விடுகிறோம். அதன் மூலம் ஞாயிற்றுக்கிழமைகளிலே 700 மெகாவாட் மின்சாரம் செலவு இல்லாமலே இருந்து வந்தது. அந்தப் பகிர்ந்து, விடுமுறை நாட்களை சுழற்சி முறையின் மூலமாக கொடுப்பதன் மூலம் ஒரு நாளைக்கு 100 மெகாவாட் மின்சாரம் நமக்குக் மீதமாகும் என்று முதலமைச்சர் அவர்களும், மற்றும் அதிகாரிகளும் கலந்து





பேசி, இதன் தொடர்பாகத்தான் இரண்டு தினங்களுக்கு முன்னாலே இந்த அவையிலே நான் அறிவித்தேன். அதை நாளை முதல் அமல்படுத்த இருக்கின்றோம். அப்படி சுழற்சி முறையில் தொழிற்சாலைகளுக்கு விடுமுறை கொடுப்பதன் மூலம் ஒரு நாளைக்கு 100 மெகாவாட் மின்சாரம் நமக்கு மிச்சப்படும். அதுபோக, இறுதிப் பற்றாக்குறை 100 மெகாவாட் மின்சாரம் நமக்குத் தேவைப்படும். அதற்காக, தொழிற்சாலைகளிலே யார் யார் ஜெனரேட்டர்கள் வைத்திருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் நீங்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துங்கள் என்று சொன்னபோது, அவர்கள் சில சலுகைகளைக் கேட்டார்கள். அந்தச் சலுகைகளையும் இந்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அவர்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துவதன் மூலம் 100 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அவைகள் எல்லாம் நாளை முதற்கொண்டுதான் நாட்டிலே அமலுக்கு வரும். இன்னும் ஓரிரு நாட்களிலே நாம் நிலைமையைப் பார்த்துக்கொண்டு--மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் துணிந்து 25 சதவிகிதம் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டை அறிவித்து விடுங்கள். எச்.டி. சப்ளைக்கு அந்த மின்சார வெட்டினை அறிவித்து விடுங்கள். நிலைமை சரியாகி விடும் என்று சொன்னார்கள்--அரசு ஏற்கெனவே எடுத்த நடவடிக்கையின் மூலமாக ஒருவார காலம் கழித்து இன்னமும் பிரச்சினை இருக்குமானால் அதுபற்றி அரசாங்கம் நிச்சயமாக மறுபரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கக்கூடாது; மின்சார வெட்டினைப் போக்குவதற்கு இந்த அரசு அக்கறையோடு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிற அதேநேரத்தில், இந்தப் பிரச்சினையைச் சிலர் அரசியலாக்கவும் முயற்சிக்கிறார்கள்; போராட்டங்களை நடத்தவும் முயற்சிக்கிறார்கள்; மக்களைத் தூண்டி விடவும் முயற்சிக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நான் வேண்டுகோள் வைக்கின்றேன். நாட்டின் நன்மையைக் கருதி, இந்த மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில், அனைவருக்கும், முழுமையாக, குறைபாடின்றி மின்சாரம் அளிக்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே விளக்கமாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[1998 ஏப்ரல் 6

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். திரு. கணேசன் பேசி முடிக்கட்டும். அவருக்கே நேரம் குறைவாக இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். திரு. கணேசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு விஷயம். குடும்ப அட்டைகளுக்கு வர்ணம் கொடுப்பது என்பது என்னைப் போன்றவர்களுக்கு அர்த்தமற்றதாகத் தெரிகிறது. பள்ளிகளிலே, குழந்தைகளுடைய மனதிலே ஏற்றத்தாழ்வு வரக்கூடாது என்பதற்காகத்தான் சீருடை அணிவிக்கிறோம்.

அதைப்போல சமுதாயத்தில் வாழக்கூடியவர்களிடையே பணக்காரன், ஏழை என்ற வர்ண பேதங்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த வர்ண பேதங்களைத் தவிர்க்க, குடும்ப அட்டையில் 'ஏ' மற்றும் 'பி' அல்லது 'அ' மற்றும் 'ஆ' என்று போட்டு குடும்ப அட்டையை வழங்கி, உணவுப் பொருள் விநியோகம் செய்ய முடியாதா? இந்த வர்ண பேதங்கள் தேவையா என்பதை தயவுசெய்து நம்முடைய முதல்வர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 20 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 24 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 10 நிமிடம் குறுக்கிட்டுப் பேசினார்கள். (குறுக்கீடு) 2 நிமிடம் பேசினார்கள். சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.



1998 ஏப்ரல் 6]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இலவச வேட்டி சேலை என்பது எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் கொண்டு வரப்பட்டது. அப்போதெல்லாம் கிராமங்களில் இருக்கக்கூடிய அத்தனை ஏழைகளுக்கும் கிடைத்து வந்தன. இலவச வேட்டி சேலை வழங்குவதற்காக 100 கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தும் அனைத்துக் கிராமங்களில் உள்ள ஏழைகளுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு நிச்சயமாகக் கிடைக்கவில்லை. நான் சட்டமன்றத்திலே, கேள்வி நேரத்தின்போது நம்முடைய முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்திற்கு 5, 10 வேட்டி சேலைகூட கிடைக்கவில்லை. அந்தப் பகுதி மக்கள் எல்லாம் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். தயவுசெய்து இந்த இலவச வேட்டி, சேலை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அத்தனை பேருக்கும் கிடைக்க முதல்வர் அவர்கள் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இல்லை; இருந்திருந்தால் ஈரோடு சந்தையிலே இலவச வேட்டி சேலைகள் எப்படி விற்கப்படுகின்றன என்பதைச் சொல்லியிருப்பேன். நான் அதை கண்கூடாகக் கண்டவன். நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்பார்கள் என்றால் நிச்சயமாக அவர்களிடத்தில் தனியாகச் சொல்கிறேன். இலவச வேட்டி சேலைகள் ஈரோடு சந்தையில் பிற மாநிலங்களுக்கு ஆயிரம் ஆயிரமாக விற்கப்படுகின்றன என்பதை மட்டும் நான் இந்த மாமன்றத்திலே, முழுப் பொறுப்பேற்று சொல்லிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு, கடன்களை ரத்து செய்யமுடியாவிட்டாலும், வட்டியையாவது ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக ரூ. 300-லிருந்து 400 வரை உயர்த்தியிருப்பதை, ஒரு நாளைக்கு 20 ரூபாய் என்ற கணக்கிலாவது வைத்து 600 ரூபாயாக உயர்த்தி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 30 இலட்ச ரூபாய் அளித்திருக்கிறார்கள் நம்முடைய முதல்வர் அவர்கள். வண்டி பாரம்

[திரு. ஐ. கணேசன்] [1998 ஏப்ரல் 6

நிலத்திலே என்று கிராமத்திலே சொல்வார்கள். நாம் உள்ளாட்சிகளுக்கு எத்தனையோ கோடி ரூபாய்கள் ஒதுக்குகிறோம். 1,000 கோடி ரூபாய், 2,000 கோடி ரூபாய் என்று சொல்கிறோம். அதிலே ஒரு சிறிய அளவு, ரொம்ப சிறிய அளவு, கடுகு மாதிரி, 20 இலட்சம் சேர்த்து, 50 இலட்ச ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய எடப்பாடி தொகுதியில், தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. இந்த அவையில் நான் வந்த நாள் முதலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். குடிநீர்ப் பிரச்சினை மிக அதிகமாக இருக்கிறது. காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக 1982-லே எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், இந்த அவையின் அனுமதி பெற்று, எடப்பாடிக்கு 10½ கோடி ரூபாய் அளவில் திட்டம் கொண்டு வந்தார்கள். அது எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். இப்போது 20 கோடி ரூபாயைத் தாண்டி அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, 'உங்களுடைய தொகுதிக்குத் தண்ணீர் முழுமையாகக் கிடைக்கும்' என்று சொன்னார்கள். ஆனால் அப்போது போட்டு புதைக்கப்பட்ட பைப்பிலிருந்து ஒரு அடிகூட எக்ஸ்டன்ட் செய்யவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் அதிகாரிகள் சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

அதைப்போல, எடப்பாடி டவுன், ஊருக்குள் நுழையும்போது ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் மிக மிக மோசமாக இருக்கிறது. இடிந்து கொஞ்சம்கொஞ்சமாக கொட்டுகிறது. அந்தப் பாலத்தை புதுப்பித்தால்தான் ஊருக்குள்ளேயே போக முடியும். ஆகையினால் அந்தப் பாலத்தை புதுப்பிக்க வேண்டும். இதற்கு 1 கோடி ரூபாய் செலவாகும் என்றும், செயல்படுத்த முடியாது என்றும் சொல்லி அரசு அதிகாரிகள் திருப்பிவிட்டார்கள். இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய எடப்பாடி தொகுதியில் கிட்டத்தட்ட 4 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். எனவே, அங்கே ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.



1998 ஏப்ரல் 6]

முற்பகல் 11-10

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டு இருக்கின்ற 1996-97 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கிளாரிபிகேஷன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிஷத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் மின்வெட்டு குறித்து பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கூறினார்கள். மின்வெட்டைப் பொறுத்தவரையில் மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் ஒரு பேட்டியிலே கூறி இருக்கிறார்கள். கிழக்கு மாகாணங்களில் இருந்து கொடுக்கப்படுகிற மின்சாரம் தமிழகத்திற்குச் சீரான முறையில் கொடுக்கப்படாததற்குக் காரணம், சென்ற ஆண்டு மத்திய அரசால், கெப்பாசிட்டர்கள் நிறுவப்படச் சொல்லி 20 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்த கெப்பாசிட்டர்களை இந்த அரசு சரியான முறையில் வைக்காததுதான் காரணம் என்று கூறுகிறார்களே, அந்த கெப்பாசிட்டர்கள் விஷயத்திலே மத்திய அரசு கொடுத்த 20 கோடி ரூபாயை மாநில அரசு சரியாகப் பயன்படுத்தி இருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும், அதைச் சரியாகப் பயன்படுத்தி, மின்சாரத் தேவையை சரியாகச் சீர் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான தகவலைத் தருகிறார். மத்திய அமைச்சர் சொல்லி இருப்பது, கெப்பாசிட்டர்களைப் பொறுத்தவரையில், ஆந்திர மாநிலத்தில் எல்லா

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 ஏப்ரல் 6

இடங்களிலும் கெப்பாசிட்டர்கள் பொருத்தப்படவில்லை; இரண்டாவது, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை; **Asian Development Bank** என்ற வங்கி மூலமாக ஒவ்வொரு மாநில அரசும் கடனாக வாங்கி கெப்பாசிட்டர்கள் நிறுவுவது என்று முடிவு செய்தோம். அதிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே 1400 கெப்பாசிட்டர்களில் 1030 கெப்பாசிட்டர்களை நாம் ஏற்கெனவே 33 கே.வி.ஏ. உள்ள டிரான்ஸ்பார்மர்களிலே பொருத்திவிட்டோம்; 110 கே.வி.ஏ. டிரான்ஸ்பார்மர்களிலே இன்னும் கிட்டத்தட்ட 400 கெப்பாசிட்டர்களைப் பொருத்த வேண்டும். அதை சப்ளை செய்ய வேண்டியது மத்திய அரசாங்கத்தின் 'பெல்' நிறுவனம்தான். அதற்கு 6 மாதங்களுக்கு முன்னாலேயே நம்முடைய அரசாங்கம் ஆணை பிறப்பித்தும், 400 கெப்பாசிட்டர்களை அவர்கள் இன்னும் நம்முடைய அரசாங்கத்திற்குக் கொடுக்கவில்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

நம்மைப் பொறுத்தவரையில் மின்சாரம் கொடுத்தால் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால், அவர் மராட்டிய மாநிலம் வரையிலே மின்சாரம் வருகிறது; அங்கிருந்து தமிழகத்திற்கு மின்சாரம் கொண்டுவர முடியவில்லை என்றுதான் சொல்லி இருக்கிறாரே தவிர, தமிழ்நாட்டிற்கு மின்சாரம் கொடுத்து, நாம் எடுக்க முடியாத சூழ்நிலையிலே இருப்பதாக எந்த இடத்திலேயும் அவர் குறிப்பிடவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே மின்சார வாரியம் மற்றும் நாம் நம்முடைய கடமைகளை முறையாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம். ஆந்திர மாநிலத்திலே சில குறைகள் இருக்கின்றன. அவை குறித்து அந்த மாநில முதலமைச்சரோடும் நான் பேசி இருக்கிறேன்; அந்த மாநில மின்வாரியத்தின் தலைவரோடும் பேசி இருக்கிறேன். அவர்களும் 3 மாத காலத்திலே அந்த மாநிலத்திலே கெப்பாசிட்டர்களை உடனடியாக நிறுவுவதாக வாக்குறுதி தந்து இருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் அந்தப் பிரச்சினை போக்கப்படுமானால், ஆந்திர மாநிலம் வழியாக வரக்கூடிய மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையின் விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டு இருக்கின்ற 1996-97 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின் மீதும், 1998-99 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மீதும்--இவற்றை முன்வைத்து முதல்வர் ஆற்றிய உரைக் குறிப்பின் மீதும்-- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். மாநில அரசின் இந்த பட்ஜெட்டின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்த பட்ஜெட்டை எப்படிப் பார்ப்பது, எந்தக் கோணத்திலே உரசிப் பார்க்க வேண்டும் என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய முதல் ஆண்டு கடந்த 2 ஆம் தேதியோடு முடிந்துவிட்டது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தப் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருந்தால், பல்வேறு விஷயங்களைப் பற்றி பரிசீலித்திருக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும். இப்போதுகூட மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் டிராப்ட்டை இந்தப் பேரவையின் முன்வைத்து விவாதிப்பது பொருத்தமானது என்று நான் கருதுகிறேன், வலியுறுத்துகிறேன். இன்றைக்கு இந்த பட்ஜெட்டை ஏதோ தமிழ்நாட்டின் தனித்த, துண்டிக்கப்பட்ட ஒரு பட்ஜெட்டாக நான் பார்க்கவில்லை. இந்தியாவினுடைய அரசியல் பொருளாதார சமூக வாழ்வில் பல்வேறு பிரதிபலிப்புகள் இந்த பட்ஜெட்டில் இருக்கும் என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும்.

முற்பகல் 11-15

ஆனாலும் இந்த பட்ஜெட்டில் நான் பார்க்க விரும்புவது, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய மைய நோக்கங்களைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் உரிய நடைமுறைகள் இந்த பட்ஜெட்டில் உருவாக்கப்பட்டு இருக்கிறதா என்பதைப் பொருத்திப் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய மையமான நோக்கங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்தீர்களேயானால் பொருளாதார வளர்ச்சி தூண்டிவிடப்பட வேண்டும்; அதேபோல வறுமை ஒழிக்கப்பட வேண்டும்; முக்கியத் துறைகளில் தன்னிறைவு ஏற்படவேண்டும்; சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் பொதுவான மைய நோக்கங்களை வரையறுத்திருக்கிறது.

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

இந்த லட்சிய நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையில் பட்ஜெட்டில் திட்டங்கள் பொருத்தமாக உருவாக்கப்படுவதுதான் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நோக்கித் தமிழ்நாட்டை அழைத்துச் செல்வதாக நாம் பொருள் கொள்ள முடியும். துரதிருஷ்டவசமாக, நம்முடைய பட்ஜெட்டைப் பார்ப்போமேயானால் இருக்கிற நிறைகுறைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த பட்ஜெட்டில் பெரிய அளவில் Revenue Deficit வந்திருப்பது குறித்தும் அதை ஏன் தவிர்க்க முடியவில்லை என்கிற விவரங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் பொதுவாக ரெவின்யூ இவ்வளவு பற்றாக்குறையாக வருவது என்பது சில நெருக்கடிகளை அரசாங்கத்திற்குத் தோற்றுவிக்கும் என்பதை நமக்கு நடைமுறை அனுபவமும் நிதிக் கோட்பாடுகளும் தெரிவிக்கின்றன. ஏறத்தாழ 3008 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை ஒரு மாநில அரசு பற்றாக்குறை பட்ஜெட்டாக விட்டுவிட முடியாது. அதை ஈடுகட்ட வேண்டும். பல்வேறு வழிமுறைகளிலும் அது ஈடு கட்டப்படக்கூடும். ஆனாலும் ரெவின்யூ இவ்வளவு தூரம் பற்றாக்குறையாக இருக்கிற இந்த நிலைமையிலே நம்முடைய திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறபோது நமக்கு ஏற்படுகிற பிரச்சினையே நிதி எங்கிருந்து பெறுவது என்பதுதான். இந்த நிதியை கடனாகத்தான் பெற முடியும். நம்முடைய மாநில நிதிநிலை என்பது கடனை நம்பிய நிதிநிலையாக அமைந்து விட்டது ஒரு துரதிருஷ்டம்தான். இந்த நிலையிலிருந்து இந்த பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்களை நாம் பரிசீலிக்கின்றபோது பட்ஜெட்டில் Revenue Deficit இல்லாமலேயே Revenue surplus வந்துவிடுவதாலேயே ஒரு நல்ல பட்ஜெட் என்றும் சொல்லிவிட முடியாது. திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்கிற அளவுக்கு மூலதனக் கணக்கிலும் சமநிலைப்பட்டு அது சேமிப்பாக இருக்குமென்றால் அது ஒரு நல்ல பட்ஜெட்டாக இருந்திருக்கும். ஆனால், அதற்குரிய நிலை இன்றைய இந்தியாவிலும், தமிழகத்திலும் இல்லை. மத்திய அரசினுடைய இடைக்கால பட்ஜெட்டிலே நாம் பார்க்கிறோம். மத்திய அரசினுடைய இடைக்கால பட்ஜெட்டிலே நிதிப் பற்றாக்குறை 6.1 சதம். ஏறத்தாழ வருடந்தோறும் 68,000 கோடி ரூபாயை வட்டியாக மட்டும் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இந்திய அரசியல் நிலையில், மத்திய நிதிநிலையில் ஒரு நிர்ப்பந்தக் கடன்



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

சூழ்நிலைமையை நாம் பார்க்கிறோம். அதே நிலைமைதான் தமிழ்நாட்டிலும் பிரதிபலிக்கிறது. சிக்கலும் நெருக்கடியும் நிறைந்த இந்தச் சூழலில் இந்த பட்ஜெட் பிரசவிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது அது பல்வேறு இயல்பான நெருக்கடிகளை வெளிப்படுத்தியிருக்கிறது. இந்தப் பற்றாக்குறையான நிதிநிலையிலேயிருந்து ஓர் உபரியான நிதிச் சூழ்நிலையைக் கொண்டுவருவதற்குரிய பல்வேறு விஷயங்களைப் பற்றி நாம் பரிசீலிப்பதற்கு முன்னால், இதே சட்டமன்றப் பேரவையில் 1952ஆம் ஆண்டு, முதல் பட்ஜெட் போடப்பட்டபோது வெறும் 65 கோடியே 23 இலட்சம் ரூபாய்க்குத்தான் போடப்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு 18,000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடப்படுகிறது. அன்றைக்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை வெறும் 86 கோடி ரூபாய்தான். ஆனால் இன்றைக்கு 25,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தோற்றத்திலே பார்த்தால் அதிகமாகத் தெரிந்தாலும்கூட உள்ளடக்கத்திலே பார்த்தால் பணத்தின் மதிப்பு அரிக்கப்பட்டுவிட்டது. erode ஆகிவிட்டது. ஒரு ரூபாயின் மதிப்பு என்பது ஏறத்தாழ சுருங்கி, அந்த ஒரு ரூபாயைக் கொண்டு மார்க்கெட்டிலே பொருளை வாங்குகிறபோதுதான் அதன் மதிப்பு வெளிப்படுகிறது. அப்படிப் பார்க்கிறபோது 1960-லே ஒரு ரூபாயின் மதிப்பு 100 காசுகள். ஆனால் இன்றைக்கு அதனுடைய மதிப்பு 0.61 காசுகள்தான். அந்த அளவுக்கு அது அரிக்கப்பட்டிருக்கிறது. பண வீக்கத்திலே அரிக்கப்பட்டுவிட்டது. எனவே இந்த நிலைமையில் நமது பட்ஜெட்டின் ஒதுக்கீடுகள் அதிகமானாலும்கூட நடைமுறையிலே அது சில சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-20

இருந்தாலும் நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இவ்வளவு சிக்கல்களிலும் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள், எதிர்பார்க்காத பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். பல்வேறு சலுகைகளும், பல்வேறு புதுப்புதுத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பஸ் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. நான் நேரம் கருதி பட்டியலைப் படித்துச் சொல்ல விரும்பவில்லை.

இவ்வளவு சலுகைகள் கொடுக்கப்பட்டதற்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருவோணம் இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதுதான் என்னுடைய கருத்து. உண்மையிலேயே ஜனநாயகத்தில், ஜனநாயகக் கட்டமைப்பில் வழி நடத்துகிற அல்லது வழிநடக்கிற தலைவருக்கு உரிய தகுதியே ஜனநாயக நிர்ப்பந்தங்களுக்கு பணிவதுதான். எவர் ஒருவருக்கு ஜனநாயக நிர்ப்பந்தங்களுக்கு பணியத் தெரிகிறதோ அவருக்குத்தான் தலைமை தாங்கத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மக்களுடைய தீர்ப்பில் அதிருப்தி இருக்கிறது. மக்கள் சில அதிருப்திகளை வாக்கு வடிவத்தில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அவற்றை முறைப்படுத்தி, உள்ளும் புறமும், இந்த ஆட்சியை தலைமை தாங்குகிற கட்சிக்கு உள்ளும் சரி, இந்த ஆட்சியை வழி நடத்துகிற அரசு இயந்திரங்களிலும் சரி, வேறு பல வடிவங்களிலேயும் எந்தக் குறைபாடுகள் அதிருப்தியை வெளிப்படுத்தின என்பதைக் கண்டறிகிற உங்கள் முயற்சி வாழ்த்துதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). வேறு பிரச்சினைகள் இல்லை. இந்த ஆர்வமுள்ள Leadership, இந்த ஆர்வமுள்ள தலைமை நிச்சயம் இதை வெற்றிகரமாகச் சந்திக்கும், சமாளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நான் இங்கே இன்னொரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு விஷயத்தில் எனது மாறுபாடான கருத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். "பொது மக்களுக்கு உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால், போன்ற அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளிப்பது" என்பது சரிதான். அதை நான் மறுக்கவில்லை. இதற்கு முன்னுரிமை அளிக்காமல் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மையிலேயே ஒரு 7'O Clock Blade மாதிரி கூர்மையானவர் என்பதை நான் அறிவேன். (சிரிப்பு). அவ்வளவு கூர்மையான, நுட்பமான அறிவாற்றல் படைத்தவர். இந்த இடத்தில் அவர் அதிகாரிகளை மட்டும் நம்பி விட்டுவிட்டார்களோ என்று கருதுகிறேன். தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பின் அஸ்திவாரமே நீண்டகாலக்





கண்ணோட்டத்தோடு கூடிய திட்டங்கள் தான். நீண்ட காலம் பலன் அளிக்கிற, நீண்ட கால கண்ணோட்டத்தோடுகூடிய திட்டங்கள்தான் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பின் அடித்தளத்தை வலுப்படுத்தும். அடித்தளம் வலுவில்லாமல் மேல்கட்டுமானங்களை மட்டும் வலுப்படுத்த முயற்சிப்பது பயன் அளிக்காது என்பதால் அவற்றையும் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, கிராமப்புற மக்கள், ஏழை மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள், பிழைக்கிறார்கள். பிழைத்தபடி சிறுகச் சிறுக செத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் அப்படிப் பிழைத்து சிறுகச் சிறுக செத்துக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தால்தான் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை, வறுமையை ஒழிப்பதை, சமூகப் பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்துவதை உறுதிப்படுத்தும் என்பதால் வேலைவாய்ப்பு அளிக்கிற திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும். அதற்கு இந்த நீண்ட காலக் கண்ணோட்டத்திலான திட்டங்கள் அவசியம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள். கிராமத்தில் அவர்களுக்கு உழத் தெரியும்; ஆனால் அவர்களுக்கு விவசாயம் செய்ய நிலமில்லை. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இன்னும் செம்மைப்படுத்தவேண்டும். பினாமி நிலங்கள் எங்கிருந்தாலும் அவற்றைக் கையகப்படுத்தி, வேலை செய்யத் தெரிந்த, உழத் தெரிந்தவனுக்கு, விவசாயத் தொழிலாளிக்கு கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பு அளிக்கிற, உணவு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு அளிக்கிற முறையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குகிற உத்தரவாதத்தை உருவாக்க வேண்டும். அதன்மூலம்தான் கிராமப்புற வேலையின்மையை நாம் போக்க முடியும்.

அதைப்போலவே, பொருளாதார வளர்ச்சி. இதனுடைய பொருள் என்ன? அந்நிய முதலீடுகள் வந்து விடுவதாலோ, உள்நாட்டில் தொழில்கள் அதிகம் வளர்ந்து விடுவதாலோ, கடைத் தெருக்களில் பொருட்களைக் குவித்து விடுவதாலோ, பொருளாதார வளர்ச்சி என்கிற அடையாள வெளிப்பாடு வந்துவிடாது. பொருளாதார

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

வளர்ச்சி என்பதன் அடையாளம், கடைகளிலே இருக்கிற பொருட்களை வாங்குகிற சக்தி, பிரஜைகளுக்கு வேண்டும். வாங்குகிற சக்தி பிரஜைகளுக்கு இல்லாமல் இருந்தால், கடைகளில் பொருட்கள் குவிந்து என்ன பயன்? பிரயோஜனம் இல்லை. எனவேதான், ஒரு சிறந்த பொருளாதார அமைப்பு என்பது, வளருகிற கூறுகொண்ட பொருளாதார அமைப்பு என்பது, இந்த மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களின் வாங்கும் சக்தியைக் கூட்டுகிற ஆற்றலுள்ள பட்ஜெட்டாக அமைந்தால்தான், பொருளாதார வளர்ச்சிக் கூறுகளை உள்ளடக்கியதாக அமையும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

அதேபோல் அந்நிய முதலீடு, தாராளமயம். இதைப்பற்றி நான் சொன்னால்கூட, எப்போதுமே, கம்யூனிஸ்டுகளுக்கு இதை எதிர்ப்பதே தொழிலாகப் போய்விட்டது என்று சிலர்கூட சங்கடப்படக்கூடும். ஆனால் நான் இங்கே குறிப்பிட விரும்புவது, தாய்லாந்தினுடைய துணைப் பிரதமர், இதே சென்னை நகரத்தில்தான் குறிப்பிட்டார்கள். "தாராளமய பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில், தாய்லாந்தும், தென்கிழக்கு ஆசிய நாடுகளும் செய்த தவறை இந்தியாவும் செய்துவிட வேண்டாம்; மிதமிஞ்சிய அந்நிய முதலீடே எங்கள் நெருக்கடிக்குக் காரணம்" என்று தாய்லாந்தினுடைய துணைப் பிரதமர், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்பட்ட துயரம் நிறைந்த அனுபவங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம்? அந்நிய முதலீடு அதிகரித்துவிடுமானால், அது தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு எந்தளவிற்கு பங்களிப்பு செலுத்துகிறது என்பதைக் கவனிக்காமல் நாம் முடிவு செய்ய முடியாது. எனவே, இதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்திலே ஒரு விவரம் வந்திருக்கிறது. இந்துஸ்தான் காப்பர் நிறுவனம்.-- தமிழ்நாட்டிலும்கூட நாம் சிந்திக்க வேண்டும். பொதுத்துறை பற்றி நமக்கு ஒரு நல்ல கண்ணோட்டம் இல்லை என்றால், சிக்கல் ஏற்படும். பொருளாதாரத்தில் சிக்கல் ஏற்படும்.-- இந்துஸ்தான் காப்பர் நிறுவனம், அரசுக்குச் சொந்தமான நிறுவனம். அந்த நிறுவனத்திற்கு 1995-96-ல் 93.74 கோடி லாபம். 1996-97-ல்



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

129.58 கோடி நஷ்டம். ஒரே வருடத்தில் 129 கோடியே 58 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் தெரியுமா? நம் பேரவை உறுப்பினர்களும் தமிழ்நாடும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மத்திய அரசினுடைய தாமிர இறக்குமதிக் கொள்கையின் காரணமாக, சுங்க வரியைக் குறைத்ததன் விளைவாக அந்நிய தாமிரம் இந்தியாவினுடைய சந்தையைக் கைப்பற்றிக் கொள்ளவும், இந்தியாவினுடைய தாமிர விற்பனை பின்னுக்குத் தள்ளப்பட்டு, சொந்தக் காலை முறித்து, அந்நிய நாட்டிலேயிருந்து ஊன்றுகோலை இறக்குமதி செய்கிற முட்டாள்தனத்தைப் போல், வெளிநாட்டுத் தொழில், இந்தியாவைக் கைப்பற்றுகிற வாய்ப்பு அளிக்கின்ற தாராளமயக் கொள்கை, இந்தியாவைக் காப்பாற்றுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். வேறுபல விவரங்களுக்குள்ளே போவதற்கு முன்னாலே, நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, அக்கறை மிகுந்த கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெறும் மாமூல் கவனத்திற்கு அல்ல. ஒரு சிறப்பான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். டான்சம், தமிழ்நாட்டின் அரசு நிறுவனம். டான்சம் அரசுப் பணிகளுக்கு இதுவரை சிமெண்ட் சப்ளை செய்து கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு இந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள் தெரியுமா? டான்சம் நிறுவனத்தை படுகொலை செய்வதற்குத் தீர்மானித்து விட்டார்கள். டான்சம் படுகொலை செய்யப்பட்டுவிடக்கூடும் என்ற அச்சத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசுத் தேவைகளுக்கு டான்சம் என்ற அரசு நிறுவனத்திலிருந்து இதுவரை பெற்று வந்த சிமெண்டை, நீ ஓப்பன் மார்க்கெட்டில் போட்டியிட்டுக்கொள் என்று சொல்லிவிட்டால் என்ன பொருள் தெரியுமா? மல்யுத்த மைதானத்தில் வலிமை நிறைந்த பிணம் தின்னிக் கழுகுகள் எலும்பு இடுக்குகளில் தங்களுடைய அலகைவிட்டு, தோண்டி சதையை இழுப்பதைப் போல, பொதுத் துறையை சூறையாடுவதற்கு, தமிழ்நாட்டில், தனியார் துறையை அனுமதிக்க வாய்ப்பு அளிக்கிற கொடுமை இந்தக் கொடுமை. இது சரியல்ல. எனவேதான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கும் 15 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது, கடந்த முறை சொன்னார்கள். ஏன் அதற்கு இந்த நிலை? அதற்குக் காரணம் கடந்த காலத்தில் அரசாங்கம் தன் தேவைக்கு, மார்க்கெட் விலையைக் காட்டிலும், குறைந்த விலைக்கு சிமெண்ட்டை வாங்கிக்

கொண்டிருந்தது. இப்போது வேறு மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தனியார் முதலீட்டாளர்கள் அரசாங்க அதிகாரிகளை ஊடுருவி, செல்வாக்கு செலுத்தி, அமைச்சர்கள் கையெழுத்திடுகிற அளவுக்கு தனியார் துறையை ஊக்குவிக்கிற, குறிப்பு எழுதுகிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நிர்வாக ரீதியான முடிவு எடுக்காமல், அரசியல் முடிவு எடுத்து, டான்சம் நிறுவனத்திலிருந்துதான் அரசு நிறுவனங்கள் சிமெண்ட்டை வாங்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்தகைய நிலையை நாம் உண்மையிலேயே மாற்ற வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் புதிய தொழிற்சாலைகள். தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும். பல முயற்சிகள் அதற்கு மேற்கொள்ளப்படுகின்றன. அதேநேரத்தில், மூடிய ஆலைகள் திறக்கப்படுவதில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மூடிய ஆலைகளைப் பொறுத்தவரையிலும் உண்மையிலேயே--தொழிலாளர்கள், மூடிய ஆலைகளினாலே--பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துவிட்டார்கள். நாம் தொழிற் சாலைகளைத் திறந்து கொண்டிருக்கிற அதே வேகத்திலேயே புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு திட்டமிடுகிற அதே நேரத்திலேயே, இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படுவதையும் கண்காணிப்பதற்கு நடைமுறையில் நிர்வாக உத்தரவாதத்தை உருவாக்க வேண்டும். நிர்வாகத்தில் அத்தகைய நடைமுறை உத்தரவாதத்தை உருவாக்கவில்லையென்றால்-- திறக்கிற தொழிற்சாலைகள் திறந்தபடி, மூடுகிற தொழிற்சாலைகள் மூடுகிறபடி இருக்கிற வாய்ப்பு-- விபத்து ஏற்பட்டுவிடும் என்பதால் அவற்றைக் கண்காணிப்பதற்கு உரிய உத்தரவாதங்கள் வேண்டும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

இந்த பட்ஜெட்டில் சில முயற்சிகளை எடுத்து பெண்ணுக்கு நல்ல அலங்காரம் செய்திருக்கிறார்கள் கலைஞர் அவர்கள். சீவிச் சீவி சிங்காரித்து, பூவை எல்லாம் வைத்திருக்கிறார்கள். பொட்டு





மட்டும் வைக்க மறந்துவிட்டார். நெற்றிப் பொட்டு இல்லாமல் இருக்கக்கூடாது அல்லவா? தமிழகத்தின் அடி மண்ணே விவசாயிகள்தான். தமிழகத்தின் அடிமண்ணாய் நிற்கின்ற அந்த விவசாயிகளின் கவலை ரேகைகள் கலைஞரின் பார்வையில் தப்பியது ஏனென்று எனக்குத் தெரியவில்லை. அது உண்மையிலேயே கவனிக்கப்படவேண்டும். ஏனென்றால் விவசாயிகள், குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டார்கள். பயிர்கள் அழிந்தன. பல நெருக்கடிக்கு ஆட்பட்டார்கள். இந்தியாவிலேயே கட்டுப்படியற்ற ஒரு தொழில் இருக்குமானால் அது விவசாயம் தான். போடுகின்ற மூட்டுவழிச் செலவைக்கூட ஈடுகட்ட முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விவசாயிகள். எனவே மாண்புமிகு கலைஞர் அவர்களே, உங்களை நான் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது பயிர்க் கடனை ரத்து செய்யுங்கள். பயிர்க் கடனை ரத்து செய்கின்ற அறிவிப்பை வெளியிடுங்கள். அதேபோல் அவர்களின் நில வரியை ரத்து செய்கின்ற அறிவிப்பை வெளியிடுங்கள். அதுமட்டுமல்லாது விவசாயிகளுக்கு உண்மையிலேயே என்ன குறை என்பதைக் கண்டறிவதற்கு அவர்களின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் தேவைகளை அறிந்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தம் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னதான் கலைஞருக்கு நெஞ்சில் ஈர உணர்ச்சிகள் அதிகமாக இருந்து, தமிழ்நாட்டிற்காகத் திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டாலும், அரசியல் நிலையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மப்பும் மந்தாரமுமான அரசியல் வானத்தில் மழை வருமா, இடி, மின்னல் ஏற்படுமா என்றெல்லாம் பலர் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். ஓர் அமைச்சரவை என்பது 'கலெக்டிவ்' வடிவம்; கூட்டுப் பொறுப்புதான். ஓர் அமைச்சரவை என்பதே கூட்டுப் பொறுப்புதான். நான் கேட்க விரும்புகிறேன். ராஜ்ய சபாவிலே விவாதம் நடந்தபோது, பிரணாப் முகர்ஜி காங்கிரஸ் தரப்பிலிருந்து பிரச்சினையைக் கிளப்பிக் கேட்கிறபோது, 356-ஐப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படாது என்று அவையிலே உறுதிமொழி அளித்தவர் வாஜ்பாய். நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

பிரதமர் வாஜ்பாய் மேலவையிலேயே 356-ஐப் பயன்படுத்தமாட்டோம் என்று அறிவித்திருக்கிறாரே. தமிழகத்திற்கு வந்திருக்கிற தம்பித்துரை, வாழப் பாடுகிற வாழப்பாடியார்-- தான் வாழ அவர் எப்போதுமே பாடுவார். ஆகவே அவர் வாழப்பாடியார், பாடிக் கொண்டிருக்கிறார். அந்த வாழப்பாடியாரும் சரி-- அதேபோல் ரங்கராஜன் குமாரமங்கலம், ஒரே இரவில் திடீரென்று சிந்தித்து காங்கிரஸ் கொள்கை தவறு என்று புரிந்து கொண்டு, திடீரென்று பி.ஜே.பி.க்குப் போய்விட்ட கொள்கை சிகாமணி ரங்கராஜன் குமாரமங்கலம், இவர்கள் எல்லாம் சொல்கிறார்கள் இங்கே வந்து. இது கலைக்கப்படும் என்று. பகிரங்கமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பேரவையிலே என்ன சொல்கிறார்கள் அமைச்சர் பெருமக்கள். அரசியல் சாசனத்தின் மீது உறுதி ஏற்றுக்கொண்டு சொல்கிறார்கள். பிரதமர் கலைக்க மாட்டோம் என்று அறிவித்ததற்குப் பின்னர் கலைப்பதற்குரிய சூழ்நிலையை தமிழ்நாட்டில் உருவாக்குவோம் என்று சொல்கிறார்கள் என்றால், மாநில அரசு உஷார் தன்மையோடு இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதே தமிழ்நாட்டில் "ஜாதிக் கலவரத்தைத் தூண்டிவிட்ட குற்றவாளி ஜெயலலிதா" என்று பல அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. தென் மாவட்டங்களில் பல இடங்களில் ஜாதிக் கலவரத்தைத் தூண்டிவிட்டதன் நோக்கமே, இந்தச் சமூக நல்லிணக்கம் சிதைக்கப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தினுடைய கூர்முனை மழுங்கடிக்கப்பட வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் ஜாதிக் கலவரங்கள் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்டன. இப்போது பகிரங்கமாக மத்திய அமைச்சர்களே சொல்லியிருக்கிறார்கள். 356-ஐப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைத் தோற்றுவிக்கிற மாதிரி போராட்டம் நடத்துவோம் என்று அறிவிக்கிறார்கள் என்றால், கூட்டுப் பொறுப்பிற்கு தலைமையேற்றிருக்கிற வாஜ்பாய் என்ன சொல்கிறார்? வாஜ்பாய் சொல்வதை முதலமைச்சர்கூட-- நிதானமாக அணுகக் கூடியவர். அவர்கூட-- ஒருவேளை நம்பலாம். நான் நம்பவில்லை. ஏனென்றால் இந்தியாவின் துரதிருஷ்டம்தான் பி.ஜே.பி., இந்திய வரலாற்றில் அழிக்கமுடியாத கறைதான் பி.ஜே.பி., மத்தியிலே பி.ஜே.பி. அதிகாரத்தைக் கைப்பற்றியதாகும். என்ன சொல்லிற்று? பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதுதானே அதற்கு--கலவரத்தின் முதல் தீக்கங்கு. முதல் தீக்கங்கு எங்கிருந்து வந்தது? பாபர் மசூதி இடிக்கப்பட்டபோதுதான். பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்னால் நாடாளுமன்றத்தில் உறுதிமொழி கொடுத்தார்கள். பி.ஜே.பி.



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

இடிக்கமாட்டோம் என்று கூறியது. அது மக்கள் மன்றத்தில். அடுத்தது, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் உறுதிமொழி கொடுத்தார்கள், இடிக்க மாட்டோம் என்று. அடுத்தது, உச்சநீதி மன்றத்திற்கே எழுத்துபூர்வமாக உறுதிமொழி கொடுத்தார்கள், இடிக்க மாட்டோம் என்று. பாபர் மசூதியை இடிக்க மாட்டோம் என்று நாடாளுமன்றத்தில், உச்சநீதிமன்றத்தில், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் உறுதிமொழி கொடுத்துவிட்டு பின்பு தரைமட்டமாக இடித்தெறிந்தார்களே, இவர்களின் வார்த்தையை நம்ப முடியுமா? நம்ப முடியாது. ஆகவே, உஷார் தன்மையோடுதான் இருக்க வேண்டும் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

ஆனால் ஒன்று. அந்தக் காலத்தில்--இது வேதம் நிறைந்த நாடு-- வேத நல்லறங்களைப் போதித்த வேத முனிபுங்கவர்கள் வாழ்ந்த நாடு இந்தியா. இமய மலையினுடைய பனி மடிப்புகளில் நின்று தவம் இருந்த பெரியோர்கள் வாழ்ந்த நாடு. இவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள் என்றால், சிம்மாசனங்களைத் துறந்துவிட்டு வனத்திற்குப் போனார்கள், நல்லறம் நாடி தவம் இருப்பதற்காக. காவிக் கொடி பிடித்தவர்கள், காவி உடை அணிந்த முனிவர்கள் சிம்மாசனம் வேண்டாம், பட்டம் வேண்டாம், பவிசு வேண்டாம், பணம் வேண்டாம், பதவி வேண்டாம் என்று சர்வத்தையும் துறந்து வனத்திற்குப் போனார்கள். ஆனால், இன்று என்ன நடக்கிறது தெரியுமா? வனத்தைத் துறந்துவிட்டு, நாடாளுமன்றத்திற்கு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். அன்றைய சந்நியாசிகளும், காவிக்கொடி பிடித்தவர்களும், ஜனங்களைத் துறந்து, சிம்மாசனங்களைத் துறந்து வனத்திற்குப் போனார்கள். இன்று, 32 சந்நியாசிகளோ என்னமோ எம்.பி.-க்களாகப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்களாம். இவர்கள் எல்லாம் உண்மையிலேயே தவம் செய்வதற்காகவா நாடாளுமன்றம் போனார்கள். தவம் இருக்க வேண்டுமானால் பனி மடிப்பிற்கு, கைலாயத்திற்குப் போய் இருக்கவேண்டும். எனவே, இவர்களின் நோக்கம் ரொம்பவும் நுட்பமானது, அபாயகரமானது. அதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டம் திருத்தப்படும் என்று 'நேஷனல் அஜெண்டாவிலே' சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம், திருத்தப்படாத

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

வேதபுத்தகம் என்று நான் சொல்லவில்லை. எப்படித் திருத்தப்பட வேண்டும்? வலதுசாரி நோக்கிலா? இடதுசாரி நோக்கிலா? அரசியல் சாசனம் இன்று சமூகக்கட்டமைப்பின் தேவைக்குப் பொருத்தமாகத் திருத்தப்பட வேண்டும். ஆனால் சமூகச் சக்கரத்தைப் பின் இழுக்கும் முறையில் திருத்த நாம் ஒப்புக்கொள்ள முடியாது. எப்படி இருக்கிறார்கள் என்பதற்கு நான் எவிடென்சோடு குறிப்பிட விரும்புகிறேன். சுவாமி நிரஞ்சன் தீப் என்று காசியில் மிக முக்கியமான சந்நியாசி ஒருவர் இருக்கிறார். வாஜ்பாயிலிருந்து பி.ஜே.பி.யின் பெருமக்கள் முழுவதும் மண்டியிட்டு தொழத்தக்க, மதிக்கிற சந்நியாசி. அவர் சொல்கிறார்; அவர் சொன்னதை தங்கள் அனுமதியோடு நான் படிக்கிறேன் "பிராமணர்களை யாரும் கேள்வி கேட்க முடியாத உயர் பதவிகளை உறுதி செய்யும் ஜாதி அமைப்பை அங்கீகரிக்கும் முறையில் அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும்". சொன்னவர் சுவாமி நிரஞ்சன் தீப். இன்னொன்று, ஆச்சார்யா தர்மேந்திரா, அவர் சொல்கிறார். "வருணாஸ்ரம, இந்து பண்பு நெறிகளின் அடிப்படையில் ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபை ஒன்றை நிறுவ வேண்டும்." இதைச் சொன்னவர் ஆச்சார்யா தர்மேந்திரா. இவர்கள் தர்மசபை, அறவழிகாட்டும் ஆன்றோர் சபை என்ற போர்வைக்குள்ளே நின்று கொண்டு, இத்தகைய புரப்போசல்களைச் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல. தற்போதைய அரசியல் சட்டம் இந்துத்துவத்திற்கு எந்த அளவிற்கு எதிராக இருக்கிறது என்பதை ஆராய்ந்து 67 பக்கம் கொண்ட ஒரு குறிப்பை சுவாமி முக்தானந்தம் ஆச்சார்ய வாமதேவும் தயாரித்து இன்று பி.ஜே.பி.-க்கு சுற்றுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த 67 பக்க குறிப்பின் அடிப்படையில், வருணாஸ்ரம அடிப்படையில், இந்துத்துவ அடிப்படையில் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைப்பதற்காக, மாற்றியமைப்பதற்காக மகாத்மா காந்தியடிகள் உயிரை விலையாகக் கொடுத்துப் பெற்ற மதச்சார்பற்ற இந்தியாவை சிதைக்க அரசியல் சாசனத்தை மாற்ற, இந்த பி.ஜே.பி. முயற்சிக்கப் போகிறது. ஒரு அபாயகரமான அறிவிப்பை நான் இந்தநேரத்திலே உங்களுடைய சிந்தனைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல், பி.ஜே.பி.யினுடைய இந்தக் கருத்தோட்டத்தோடு, இவர்கள் இந்தியாவை அணுகினால், உண்மையிலேயே சிக்கல் ஏற்படும். இவற்றை மாற்றுவதற்கு, ஒவ்வொரு மட்டத்திலேயும் தமிழ்நாட்டைத் தயார்ப்படுத்த வேண்டிய அவசியம்-தேர்தலில் ஆட்சி இருக்கலாம், இல்லாமல் போகலாம்-தமிழ்நாட்டு மக்களை அதற்குத் தகுந்தபடி தயார்ப்படுத்த



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துகொள்ள விரும்புகிறேன். அதோடு சில முக்கிய பிரச்சினைகள். ஏனென்றால் நேரம் ஆகிவிடப் போகிறது. நேரம் ஆகிவிட்டால்....

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான பிரச்சினையைப் பற்றிப் பேசிவிட்டேன். சில குறிப்பான இரண்டொரு பிரச்சினைகளை நான் சொல்லிவிடுகிறேன். மாதவரம்-- அநேகமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இதயத்திலே இருக்கிற ஒரு விஷயம்தான். முதல்வர் அவர்கள் போன பட்ஜெட்டின்போதே நமக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள் இந்தப் பேரவையில். தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் அவர்களை 25% பின்சம்பளத்தோடு மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு தீர்ப்பு வந்ததே, நான் உண்மையிலேயே இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; தங்களைத் தவிர வேறு யார் இருந்திருந்தாலும் இந்தக் கற்சிலை உயிர் பெற்றிருக்காது என்பதை நான் அறிவேன். இராமனுடைய காலடிபட்டு அகலிகை உயிர் பெற்றது உண்மையோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அகலிகை போல் கல்லாய்க் கிடந்த மாதவரம் தொழிலாளர்களுடைய வேலைக்கு உயிர் கொடுத்தது உங்கள் பார்வை என்பதை நான் உள்ளூர உணர்ந்து கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த மாதவரம் தொழிலாளர்களிடம் நீங்கள் கேட்டுக்கொண்டபடி, பின் சம்பளம் வேண்டாம் என்பதை நான் அவர்களோடு பேசி, முதலமைச்சர் அவர்கள் இதில் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்றால் அந்த அக்கறைக்குத் தலைவணங்குவதற்காகவாவது நாம் அதை விட்டுவிட வேண்டும் என்று வேண்டுகோள் விட்டேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு சர்வீஸ் தொடர்ச்சி என்றால் அதிகாரிகள் சில நேரங்களில் மிகத் தவறாகவே ட்ரைவ் செய்கிறார்கள். அந்த அதிகாரிகள் தவறாக வியாக்யானப்படுத்தி விடுவார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது சர்வீஸ் தொடர்ச்சி என்பதற்கு சட்ட ரீதியான சாராம்சமே, அவன் டிஸ்மிஸ் செய்யப்படாமல் தொடர்ந்து வேலையில் இருந்திருந்தால் இந்த நேரம் அவன் என்ன சம்பளம் வாங்குவானோ, அந்தச்

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

சம்பளத்தை refixation செய்ய வேண்டும். refixation செய்து தீர்மானிக்க வேண்டிய ஒன்றுதான் அது. பின்சம்பளமே இல்லை. அதற்குத் தாங்கள் தங்கள் பதிலுரையில் அருள்கூர்ந்து உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை மறந்துவிட்டேன். தனியார் பஸ். நான் உங்களுக்குச் சுமை கொடுப்பதை விரும்புவதே இல்லை. லேபர் மானியத்தில் பேச வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது. மூன்று அமைச்சர்கள் வந்து சொன்னார்கள். முதலாளிகள் கேட்கவில்லை. அவர்கள் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, ஏதோ ஒன்றைச் சிந்தித்துக் கொண்டு இருப்பார்கள் போல் தெரிகிறது. வேறு ஒன்றும் இல்லை. நாம் எத்தனையோ கொத்தடிமை போன்ற மற்ற விஷயங்களை எல்லாம் சொல்கிறோம். இந்த விஷயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால், சர்க்கார் சொன்னதைக் கேட்கவில்லை முதலாளிகள். தொழிலாளர்கள் சொல்வது என்ன? அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லா விஷயமும் முடிந்து விட்டது. தயவுசெய்து நான் மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். இந்தத் தனியார் துறைத் தொழிலாளிகளைச் சூறையாடுவதற்கு முதலாளிகளுக்கு ஆதரவாக இதே பேரவையில் பல்வேறு நிர்ப்பந்தங்களைக் கொடுக்கிற சக்திகளை நான் அறிவேன். அவர்கள் எங்கெங்கு சிபாரிசு பிடிக்க முடியுமோ, அவ்வளவு சிபாரிசு பிடிக்கிறார்கள். கையறு நிலையில் தொழிலாளிகள் தெருக்களில் நிற்கிறார்கள். அவர்களுக்கு நாம் வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். சர்க்கார் சொல்வதைக் கேட்க மறுத்துவிட்டார்கள். ஈரோட்டில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்கிறேன். மிக முக்கியமான சிலர் தொழிலாளிக்கு எதிராகத் தலையிடுகிறார்கள். அவசியமே இல்லை அதற்கு. அங்கே ஒன்றே ஒன்று. அந்தத் தொழிலாளி பஸ் டெப்போவில் ஸ்டிரைக் செய்திருக்கிறான். வேறு ஆளை வைத்து ஓட்டாதே நீ என்று சொல்லும்போது அதில் போலீஸ் தலையிடாமல் தடுத்துவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடும். தொழிலாளர்களின் ரைட்ஸை நாம் பறிக்கக்கூடாது. வருகிற 15ஆம் தேதிகூட அவர்கள் வேறு வழியே இல்லை என்று நிறுத்துகிற முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நிறைவாக, தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 6] [திரு. கே. சுப்பராயன்]

திண்டுக்கல்லிலே ஒரு பெரிய கொலை நடந்திருக்கிறது. இந்தக் கொலையைப் பற்றி நான் இப்போது விரிவாகச் சொல்லவில்லை. அந்தக் கொலையைச் செய்தது சாராய வியாபாரி. சாராய வியாபாரி பட்டப் பகலில் பகிரங்கமாகக் கொலை செய்தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் தேர்தலுக்குப் பின்னர் முதலமைச்சராகப் பதவி ஏற்ற அதே தினத்தில் 5 குழந்தைகளைக் கொன்று ஆற்று மணலில் புதைத்துவிட்டான் அந்தக் கொலைகாரன். அந்தக் கொலைகாரன் சரண்டர் ஆகிவிட்டான். நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இதேமாதிரி ஒரு விபரீதம் காரைக்குடியில் நடந்துவிடக்கூடும் என்பதால் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரைக்குடியில் எங்கள் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர் பி. எல். இராமச்சந்திரன், கள்ளச்சாராயப் பேர்வழிகளுக்கு எதிராக ஒரு ரிப்போர்ட் கொடுத்தார். அந்த ரிப்போர்ட்டைக் கொடுக்கிறபோது அங்கே இருக்கிற இன்ஸ்பெக்டர் அந்தச் சாராய வியாபாரிக்கு ஆதரவாக எங்கள் கட்சிக்காரன் மீது பிரிவு 307-ன்கீழ் வழக்குப் போட்டுவிட்டார்கள். ரௌடிகளைத் தூண்டிவிட்டு அவர்கள் வந்து அட்டாக் செய்கிறார்கள். பகிரங்கமாக வந்து கட்சி அலுவலகத்தையே அட்டாக் செய்துவிட்டார்கள். எனவே நான் இந்தப் பேரவையில் மிகுந்த அச்சத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சாராய வியாபாரி மீதும், அவருக்குச் சாதகமாக இருக்கிற இன்ஸ்பெக்டர் முருகன் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எங்கள் மாவட்டச் செயலாளர்கூட திண்டுக்கல்லில் ஏற்பட்ட கதிக்கு ஆளாகி விடுவாரோ என்ற அச்சத்தால் இங்கே நான் அந்த விஷயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் சக்தியை மேம்படுத்துவதற்கு ஒரு கூட்டம். மாநில அரசு இயங்குகிறதா, இயங்க அனுமதித்திருக்கிறார்களா அல்லது போட்டி மாநில அரசை நடத்துகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அது போஸ்ட்போன் செய்யப்பட்டுவிட்டது என்பதை நான் அறிவேன். ஆனால் 8-ஆம் தேதி ரங்கராஜன் குமாரமங்கலம், மத்திய மின்சார அமைச்சர்--நீங்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்- மின்சார மேம்பாடு குறித்து ஆராய்வதற்காக 8-ஆம் தேதி தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியிலே ஒரு கூட்டம் போட்டிருக்கிறார். 39 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதி

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 6

அனுப்பியிருக்கிறார். நாங்கள் என்ன ஜனப்பிரதிநிதிகள் இல்லையா? தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களே இவர்கள் அழைக்கப்படவில்லை. இவர்களை அந்தக் கூட்டத்திற்கு அழைக்காமல் நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் மட்டும் அங்கே அழைக்கப்பட்டிருக்கிறார். அது நடந்திருந்தால் அவர் போயிருந்தால் அந்தப் பிரச்சினை குறித்துகூட நான் பேசியிருப்பேன். அப்படி ஒரு கூட்டத்தை நடத்தும்போது மாநில எம்.எல்.ஏ.க்களை அழைக்காமல் அந்தக் கூட்டத்தை அவர்கள் நடத்துவது இந்த மாநில அரசுக்கு எதிராக ஒரு போர்ப் பிரகடனத்தை திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் செய்திருக்கிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன். மாநில அரசுக்கு எதிராக....

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள். இப்போது நேரம் 11-15 ஆகிவிட்டது. அவ்வளவுதான்.

**திரு. கே. சுப்பராயன்:** 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன். நிர்வாகப் பிரச்சினைகளில் லஞ்ச ஊழல் அதிகம். இந்த மாநிலத்தில் மேல் மட்டத்தில் எந்தவிதமான ஊழலும் இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் சொன்னதை நான் வழிமொழிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள், நிர்வாகத் துறைகளில் ஊழல், அதாவது நிர்வாக இயந்திரத்தில் ஊழல் ஒரு மாதிரி மண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஊழல் மண்டியிருப்பதை மாற்றினால்தான் மாநில அரசின் நோக்கம் நிறைவேறும். அதற்கு புகார்ப் பெட்டி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி ஒரு புதுக்கவிதைக்காரன் எழுதுகிறான். அரசாங்கத்தைப் பற்றி எழுதுகிறபோது "அலுவலகக் கதவைத் திறந்தேன், கிரிச்சிட்டது, ஆயில் போட்டேன் சத்தம் இல்லை" என்று எழுதுகிறான். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இப்படி இருக்குமானால் எப்படிப் பொருந்தும். எனவே, அரசு அலுவலகத்தை ஒழுங்கமைப்பதற்கு பகிரங்க புகார்ப் பெட்டி வைத்து, எல்லா அரசு அலுவலகத்திலும் புகார்ப் பெட்டி வைத்து, அந்தப் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



*1998 ஏப்ரல் 6]*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலாக, நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். பஸ் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. சமையல் எண்ணெய்களுக்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் ரகுநாத காவேரி, நாராயண காவேரி மற்றும் சங்கரத்தேவன் கால்வாய் ஆகிய கால்வாய்களைச் சீரமைக்க 7½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அதை இந்த ஆண்டே எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 லட்சம் ரூபாய் என்று ஒதுக்குவதை இப்போது 30 லட்சம் ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறீர்கள். அதை இன்னும் 50 லட்சம் ரூபாயாக உயர்த்தி ஒதுக்க வேண்டுமென்று இங்கே எல்லோரும் கேட்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இந்த ஆண்டு நல்ல விளைச்சல் வந்திருக்கிறது. 75 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி இன்று 94 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது.

இதற்குமேல் மற்றப் பிரச்சினைகளுக்கு வருகின்றபோது அரிசனங்களுக்கு 2 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 832 வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகவும், இந்த ஆண்டு 60 ஆயிரம் வீடுகள் கட்டப்போவதாகவும் அறிவித்திருக்கிறீர்கள். அவர்களுக்காக நம்முடைய அரசு ஆண்டுதோறும் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த வீடுகளை எங்கே கட்டுகிறார்கள்? எப்படிக் கட்டுகிறார்கள்? நம்முடைய அரிசன மக்களுக்குப் போதுமான அளவுக்கு அதைக் கட்டுகிறார்களா என்றால் திட்டமிட்டு அதை செயற்படுத்தவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கிராமப்புறங்களில் அரிசனங்களுக்காக கட்டப்படுகின்ற வீடுகள் உடனே உடைந்து விழுந்து விடக்கூடிய அளவிற்கு மிக மோசமான நிலையில் பலயிடங்களில் இருக்கின்றன என்பதை இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்தில் பார்க்க வேண்டும் தான் கான்கிரீட் வீடுகளாக, கூரைகளுக்கு எல்லாம் போட்டு கட்டப்பட்டது. அதிலே ஒரு குறைபாடு என்னவென்றால் கான்கிரீட் வீடுகளுக்கு மேல் தட்டு ஓடு போடுகின்ற திட்டம் நம்முடைய என்ஜினியர்களுக்கு ஏன் வரவில்லை என்பதை நாம் பார்க்க வேண்டும். இன்று கட்டப்படுகின்ற கான்கிரீட் வீடுகள்கூட ஒழுகுகின்றன. மேலே தட்டு ஓடு போடுகின்ற ஒரு முறையைச் செய்யாத காரணத்தால் கான்கிரீட் வீடுகள்கூட ஒழுகுகின்றன.

ஆந்திர மாநிலத்திற்கு நான் சென்றபோது சிலயிடங்களில் இதுபோன்ற வீடுகளைப் பார்த்தேன். அங்கே எல்லாம் என்ன செய்கிறார்கள் என்றால் 27 ஆயிரம் ரூபாய்கூட கொடுப்பது இல்லை. வெறும் 10 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அந்த வீட்டுக்காரர் அதாவது யார் அதைப் பயன்படுத்துகிறார்களோ அவர்கள் கையில் பணத்தைக் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அந்த வீடுகளை உருவாக்குகின்ற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் இது ஒரு கான்ட்ராக்ட் தொழிலாகப் போய்விட்டது.

வீட்டுகாரர்களுக்கும், கான்ட்ராக்ட்காரர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருப்பதன் காரணமாக இந்த வீடுகளெல்லாம் இன்று மிக மோசமான ஒரு சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த முறையை மாற்றி யார் யாருக்கு வீடு வேண்டுமோ அவர்கள் பட்டா வைத்திருந்தால், பட்டாயிருக்கிற இடத்தில் அவர்களையே வீடு கட்டச் சொல்லி........

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு, கட்டாமல் இருந்த வீடுகளைக் கட்டுவதற்கு முயற்சித்து,





பலயிடங்களுக்கு நானும் நேரில் சென்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப்போல, வந்த புகார்களையெல்லாம் பார்வையிட்டு, அவைகள் சீர் செய்யப்படுகின்றன. இப்பொழுதும் நான் குறிப்பிடுகிறேன். தெளிவாகவே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட தவறுகள் ஏதாவது இருக்குமானால், அதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டினால், தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது; செய்து தரும்.

இன்னொன்று. அதிலே தட்டோடு போடவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இப்பொழுது கட்டுகிற வீடுகளுக்குத் தட்டோடு போட வேண்டிய அவசியமேயில்லை. காரணம், சாய்வுக் கூரை அமைக்கப்படுகிறது. அதற்காகத்தான், தட்டோடுச் செலவைக் குறைப்பதற்காகத்தான் அதன் மேல் கூரை சாய்வுக் கூரையாக அமைக்கப்படுகிறது. எனவே, என்ஜினியர்கள் அல்ல; பொது மக்களும் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட வரவேற்பு இருக்கிறது. தட்டோடு போட வேண்டுமென்றால் இன்னும் கூடுதலாக ஐந்தாறு ஆயிரம் ரூபாய் அதிலே அதிகமாக செலவழியும். அவ்வாறு செய்தால் இருக்கிற நிதி நெருக்கடியில் வீடுகளுடைய எண்ணிக்கைதான் குறையும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சாய்வுக் கூரைகளாகப் போட்ட வீட்டிலேதான் ஒழுகுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நான் நேரடியாகப் பார்த்துத்தான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசிலிருந்து 29 சதவீதம் நமக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல், இந்த வி.டி.ஐ.எஸ். திட்டத்தில் 10,500 கோடி ரூபாய் மொத்தம் வருவாய் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையிலே நான் பார்த்தேன். 10,050 கோடி ரூபாய் என்றுதான் பத்திரிகையிலே பார்த்தேன். நேற்று நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களைப் பார்த்துக் கேட்ட நேரத்தில், 10,050 கோடி ரூபாய்தான் என்று சொன்னார்கள். ஆகவே, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், 10,500 கோடி ரூபாய் என்று இருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, இதன் மூலமாக நமக்கு வந்த ரூபாய்கள் எல்லாம் அடிஷனலாக இந்த பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறதா அல்லது புதிதாக வர இருக்கிறதா, அப்படி வந்தால் அதற்கெல்லாம் என்ன திட்டம்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 6

இருக்கிறதென்பதை நம்முடைய முதலமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, உள்ளாட்சியைப் பொறுத்தவரையில், இன்று உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏராளமாக அதிகாரங்கள் கொடுத்திருக்கிறோம் என்பது ஓரளவு உண்மைதான் என்றாலும்கூட, அவர்களுக்கு முறையான பயிற்சி இல்லாததன் காரணமாகவும், நம்முடைய உள்ளாட்சித் துறை அதிகாரிகள் அவர்களுக்குப் போதிய உற்சாகம், ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்ற காரணத்தினாலேயும், பலயிடங்களில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நான் இப்பொழுது பஞ்சாயத்தினுடைய தலைவர்களையெல்லாம் பார்த்து ஒரு கூட்டம் போட்டு அவர்களிடம் கேட்ட நேரத்தில், என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கெனவே வீ.ஏ.ஓ. என்று சொல்லக்கூடிய, வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் அதிகாரிகள் கிராமங்களில் வரி வசூல் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்த முறையெல்லாம் எடுக்கப்பட்டு, வெறும் 500 ரூபாய் சம்பளத்தில் ஒரு பஞ்சாயத்துக் கிளார்க்கை நியமித்திருக்கிறார்கள். அவர்கள்தான் வரி வசூல் செய்யவேண்டுமென்று சொன்னால், அவர்கள் 29 வகையான கணக்குகள் எழுத வேண்டிய ஒரு கட்டாய நிலையில் இருப்பதால் வரி வசூல் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். வரி வசூல் இல்லை என்று சொன்னால், மேச்சிங் கிராண்ட் வராது. ஆகவே, மறுபடியும், வீ.ஏ.ஓ., தலையாரி, மக்கள் நலப் பணியாளர்கள் இவர்களையெல்லாம் இந்த வரி வசூலுக்கு பொறுப்பாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, பஞ்சாயத்துத் தலைவர்கள் இன்னொரு கோரிக்கையை வைத்தார்கள். இப்பொழுது மே மாதம் நாமெல்லாம் ரேஷன் புதிதாக கார்டு கொடுக்கப் போகிறோம். ரேஷன் கார்டு கொடுக்கும்பொழுது, வீட்டு வரி ரசீதைக் காட்டுங்கள், வீட்டு வரி ரசீது கொண்டு வருபவர்களுக்குத்தான் ரேஷன் கார்டு என்று சொன்னால் பழைய பாக்கியெல்லாம் வசூல் ஆகிவிடும். இதை நம்முடைய சட்டமன்றத்திலே சொல்லுங்கள் என்று நம்முடைய பஞ்சாயத்துத் தலைவர்கள் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள்.

இன்னொரு கோரிக்கை. ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாவட்டப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லாமல் இருப்பதால் மிகப் பெரிய பிரச்சினைகளாகி நம்முடைய கிராமங்களில், நகரங்களில் எந்தவிதமான காரியங்களும்



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

நடைபெறவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு ஓர் ஆலோசனையாக-அதாவது நிர்வாக அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதைத் தடுத்து, கூட்டுப்பொறுப்பில் செயல்பட, வேலைகளை அனுமதிப்பதற்கும், முடிந்த வேலைகளுக்குப் பணம் பட்டுவாடா செய்வதற்கும் தலைவர்களின் அனுமதியைப் பெறுகின்ற வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா சாலைகளுக்கும், தேசிய நெடுஞ்சாலைகளைப் போல நம்பர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்று பல குளறுபடிகள் நடக்கின்றன. சென்ற ஆண்டு போட்ட ரோட்டையே இந்த ஆண்டு அளந்து பில் வாங்கிய பிறகு இந்த ஆண்டும் அதே ரோட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நேஷனல் ஹைவேஸ் ரோடுகளுக்கு கொடுக்கப்படுகின்ற நம்பர் போல், மற்ற ரோடுகளுக்கும், மாவட்ட ரோடுகளுக்கும், மாநில ரோடுகளுக்கும், பஞ்சாயத்து ரோடுகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கும் தனித்தனியாக நம்பர் சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, ஒப்பந்தப் புள்ளி வழங்குவதில் ஏற்படும் குறைபாடுகளை நீக்க இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமுன்வடிவு கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கிறேன். இன்று ஒப்பந்தப் புள்ளி என்பது ஒரு மிகப் பெரிய மோசடியாக நடந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசாங்கம் சிங்கிள் டெண்டர் என்ற முறையில் கொடுத்து, அதாவது அபவ் ரேட், ஒரு கோடி ரூபாய் டெண்டர் என்று சொன்னால், ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கு டெண்டர் போட்டு வேலை செய்தார்கள். அதில் என்னென்ன மோசடிகள் எல்லாம் நடந்தன என்பதை நாமெல்லாம் மிக நன்றாக அறிவோம். நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் பிராந்திக் கடையில் நடப்பதை மிகத் தெளிவாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிராந்திக் கடைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதேதான் இப்போது டெண்டரிலும் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த முறையில் கொஞ்சம் கவனமாகப் பார்த்து, போலி காண்ட்ராக்டர்களை ஒழித்துக் கட்டியாக வேண்டும்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 6

நம்முடைய மாண்புமிகு முன்னாள் மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள்கூட, அவர் தொகுதியில் நபார்டு மூலம் போடப்படுகின்ற ரோடுகளை எல்லாம் பார்த்து மிக வேதனையோடு, இன்று முதலமைச்சர் அவர்களை நேரில் பார்த்து கோரிக்கைகளை எல்லாம் வைக்கப்போகிறேன் என்று சொன்னார்கள். இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், கருங்கல் அடிக்கவேண்டிய இடத்தில் வெள்ளைக் கல் அடிக்கிறார்கள். கருங்கல் என்பது ஸ்டிராங்காக, காஸ்ட்லியாக இருக்கும். கருப்புக் கல்லுக்குப் பதிலாக வெள்ளைக் கல் அடிக்கிறார்கள். அது உடனே மாவாகிப் போய்விடும். கிராவல் அடிப்பதற்குப் பதிலாக செம்மண்ணை அடிக்கிறார்கள்; மணல் அடிப்பதற்குப் பதிலாக புழுதி மண்ணை அடிக்கிறார்கள் என்று மிகுந்த வேதனையோடு அவர் சொன்னார். இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, திறமையானவர்களை, தகுதியான நபர்களை மட்டும் ஒப்பந்தக்காரர்களை, தேர்ந்தெடுத்து போலியான ஆட்களையெல்லாம் விலக்கி வைத்து ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

அடுத்து தகவல் பெறும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்படும் என்று 1997-98ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே சொன்னார்கள். இப்போது இந்த பட்ஜெட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்ததைப்போல, இந்த ஆண்டும் சீக்கிரமே கொண்டுவரப்படும் என்று. அறிவிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டை நீங்கள் படித்துப் பார்த்தால், போன வருடம் என்னென்ன சொல்லியிருந்தீர்களோ அதில் பல பகுதிகள் அப்படி அப்படியே திரும்பத் திரும்ப வருகின்றன. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கொஞ்சம் கவனமாகப் பார்த்து ஏன் சென்ற ஆண்டிலேயே செய்யவில்லை என்பதற்கு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே ரொம்ப சிரமப்பட்டு வேலை செய்கிறார். எல்லா ஊர்களுக்கும் ஓடி ஓடி வேலை செய்கிறார். நான் பாராட்டுகிறேன். ஆனால், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் ஏமாற்றுவது மாதிரி வேறு யாரும் ஏமாற்ற முடியாது. என்னுடைய பகுதியிலே, பரமக்குடியில் இரண்டு திட்டங்கள் உள்ளன. ஒன்று கொளுந்துரை ஸ்கீம். அமைச்சர் அவர்கள் சென்ற வாரத்தில்



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அங்கே வந்தார்கள். அமைச்சர் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் தண்ணீரைத் திறந்துவிட்டார்கள். அமைச்சர் போன மறுநாள் வரை தண்ணீர் போனது. அதோடு நிறுத்திவிட்டார்கள். அங்கே எங்களுடைய ஒன்றியத்தைச் சேர்ந்த......

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருமுறை அவர்கள் இதுபோன்று வெளியே சொல்லி, பத்திரிகையிலே செய்தி வந்து, அவர்களிடத்தில் திரும்பவும் நான் கேட்டு, மறுபடியும் அதற்காக ஒருமுறை அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறேன். அப்போதும் தெரிவித்திருக்கிறார். இது பிரமாதமாக இருக்கிறது, நீங்கள் வந்து போனதற்குப் பிறகு தொடர்ந்து நடக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதுபற்றி இதுவரை என்னிடத்தில் எதுவும் சொல்லவில்லை. இது பெரிய மோசடி. அமைச்சர் வந்தால் தண்ணீர் கொடுப்பது, இல்லையென்றால் இல்லையென்பது. இதைவிட மோசடி வேறு இருக்க முடியாது. அது எந்த இடத்தில், எப்போது என்று இதுவரை அவர் என்னிடத்தில் குறித்துக் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன். இப்போது கொடுத்தாலும்கூட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். பொத்தாம் பொதுவாகப் பேசுவது நல்லதல்ல. மந்திரியை ஏமாற்றுகிறார்கள் என்றால் அந்தப்பொறுப்பை நான் ஏற்பதற்குத் தகுதியற்றவன் ஆகிறேன். இது நியாயமா? எதிர்க்கட்சித் தலைவர் இப்படிக் குறிப்பிடலாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னேனே, பரமக்குடிக்குப் பக்கத்திலே கொளுந்துறை ஸ்கீம் என்று ஒரு ஸ்கீம். அமைச்சர் நாளைக்கு வருகிறார் என்றவுடன் தண்ணீரை எல்லாக் கிராமங்களுக்கும் திறந்துவிட்டிருக்கிறார்கள். 40 கிராமங்களுக்குத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தினுடைய சேர்மன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவர் மந்திரியிடமே சொல்லியிருக்கிறார். நீங்கள் போனவுடனே இதை நிறுத்தி விடுவார்கள் என்று சொல்லியிருக்கிறார். அந்தமாதிரி செய்தால் உடனே எனக்குத் தந்தி கொடுங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

[1998 ஏப்ரல் 6

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது, மந்திரி போன பிறகு தண்ணீர் நின்றுவிட்டது என்று சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படியொரு புகார் இருந்தால் உடனடியாக ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை என்று கேட்கிறார்கள். நீங்கள் அதற்குப் பதில் சொல்வதை விட்டுவிட்டு, யாரோ ஒரு பெண்மணி சொன்னதாக இங்கே சொன்னால் என்ன அர்த்தம்? நீங்கள் ஒரு எதிர்க்கட்சித் தலைவர், உங்கள் அந்தஸ்து அந்தப் பெண்மணிக்கு வராது. நீங்கள் உடனே அமைச்சரிடம் சொல்ல வேண்டியதுதானே?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ சொல்கிறேன். தயவுசெய்து உடனே அந்தக் கிராமங்களுக்கெல்லாம் தண்ணீர் விடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அது இல்லை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நபார்டு வங்கியிலேயிருந்து வந்து பார்த்துவிட்டு அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் நபார்டு திட்டம் மூலம் சாலைகள் சிறப்பாகப் போடப்பட்டு, பணிகள் நடைபெற்றுள்ளன என்று சர்டிஃபிகேட்டே கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. ஒரு சாலைக்கு ஒரு குறிப்பிட்ட ஜல்லிக்குப் பதிலாக வேறு ஜல்லியைப் போட்டிருந்த போது அதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியவுடன் அதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற பொதுவான குற்றச்சாட்டுக்களைச் சொல்வதைவிட்டு விடுங்கள். குறிப்பாக, நான் அமைச்சராக இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை நடத்தியும், அவர்களிடமே நீங்களே சென்று பார்த்துவிடுங்கள், எந்தப் பகுதியில் இதுபோன்ற தவறுகள் நடக்கின்றன என்பதை உடனே சுட்டிக்காட்டுங்கள் என்றும் சொல்லியிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், mechanisation of roads என்ற அடிப்படையிலே இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப்பிறகு இயந்திரத்தை



1998 ஏப்ரல் 6] [டாக்டர் க. பொன்முடி]

வைத்து சாலைகளைப்போடுகிற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, நபார்டு திட்டத்தைப் பொறுத்தவரையில் அது சிறப்பாக நடைபெறுகிற காரணத்தால்தான் தமிழகத்திற்கு மட்டும் அது அதிகக் கடன்களைக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சாம்பல்குளம், உடையகுல நத்தம்ரோடு என்று சொல்லக்கூடிய அபிராம ரோட்டிலே நபார்டு திட்டத்தில் இதுமாதிரி வெள்ளைக்கல் அடித்திருக்கிறார்கள். நான்கூட அங்கே இருக்கிற அதிகாரிகளைப் பார்த்து, சட்டமன்றத்திலே இதைப்பற்றிப் பேசப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். திரு. ப. சிதம்பரம் அவர்கள்கூட நேரிடையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே பார்த்துச் சொல்கிறேன் என்று என்னிடம் சொன்னார்கள். ஆகவே பொறுப்போடு நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் குறுக்கிட விரும்பவில்லை. ஒரு கருத்தை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் அமைச்சருடைய அந்தஸ்திலேயுள்ள எதிர்க்கட்சித் தலைவர். நீங்களே முன்னாள் மத்திய அமைச்சர் சொல்ல வேண்டும் என்கிறீர்கள். அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பற்றி நீங்கள் என்ன சொன்னீர்கள்? அவர் மிகச் சிறப்பாக நல்ல முறையில் வேலை பார்க்கிறார் என்று சொன்னீர்கள். அவர் போய் அப்படி வேலை பார்த்து, இரண்டாம் நாள் தண்ணீர் நின்று போய்விட்டது என்று சொன்னால், அவர் வேலை பார்த்ததிலே அர்த்தமேயில்லை. அதுதான் அவருடைய வருத்தம். அதனாலே இப்படிப்பட்ட குறைகள் வரும்போது நீங்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சரிடம், தொடர்புடைய அமைச்சரிடம் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லி, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நீங்கள் பேசுவது நியாயம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டையெல்லாம் நான் சொல்லுவது, நம்முடைய அமைச்சர்கள்மீது குறை சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய.....

[*1998 ஏப்ரல் 6*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள்மீது குறை சொல்வதாக இல்லை. அதிகாரிகள், அமைச்சர்களை ஏமாற்றுகிறார்கள் என்றால் அதை அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது உங்களுடைய கடமை; உங்களுடைய உரிமையும்கூட.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நான் அதைச் செய்ய......

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான நோக்கத்தோடு ஒன்றும் குறுக்கிடவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது Right to Information Act இந்த அவையிலே நிறைவேற்றப்படாததுபோல் பேசினார்கள். உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அது நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதற்கான விதிமுறைகள் இந்த ஆண்டு வகுக்கப்பட்டுவிடும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். நிறைவேற்றி ஒரு வருடம் ஆயிற்றே; விதிமுறைகள் போடுவதற்கு ஒரு வருடம் வேண்டுமா என்பதைத்தான் நான் கேட்டேன்.

கிருஷ்ணா தண்ணீரைப் பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்தார்கள். 512 கோடி ரூபாய் இதுவரை நாம் கொடுத்திருக்கிறோம். திரு. சந்திரபாபுநாயுடு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்தான். எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அவர் ஒட்டு போட்டு, ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிற திரு. வாஜ்பாயே என்ன சொல்கிறார் என்றால், ** என்று கேட்டிருக்கிறார். ஆகவே தயவு செய்து 512 கோடி ரூபாயும் உண்மையிலேயே அந்த கிருஷ்ணா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** பற்றிப் பேச வேண்டாம். உங்களுடைய தரத்திற்கு அதைப் பேசவேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*1998 ஏப்ரல் 6*]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கு நாம் 512 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். அதை முறையாக, அந்தப் பணத்தைக் கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருவதற்காகத்தான் செலவழிக்கிறார்களா என்பதைத் தயவுசெய்து பார்க்க வேண்டும். ஏனென்றால் எனக்குச் சில தகவல்கள் எல்லாம் வந்திருக்கின்றன ** என்று சொல்லி ஒருவர் எனக்கு எழுதியே கொடுத்திருக்கிறார். ஆகவே, தயவுசெய்து அதை நீங்கள்.....

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இன்னொரு மாநிலம் தொடர்புடைய பிரச்சினை. நாம் கொடுத்த பணத்தை அவர்கள் சரியாகச் செலவு செய்கிறார்களா என்று கேட்டார்கள். அதைக் கண்காணிப்பதற்கு இரண்டு மாநிலங்களினுடைய பொறியாளர்களும் சேர்ந்து Joint Liasioning Meeting எல்லாம் நடத்துகிறார்கள். அவர்களெல்லாம் கண்காணிக்கிறார்கள். எனவே, வேறு காரியங்களுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற செய்தி வருமானால் அது சரியாக இருக்காது. இன்னும் சொல்லப் போனால், தமிழகத்துடன் ஆந்திர அரசு நட்புறவு முறையில், நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எடுக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். அப்படியே இருக்கலாம். ஏனென்றால் நாம் 512 கோடி ரூபாய் கொடுத்துள்ளதால் நமக்கு வரவேண்டிய தண்ணீர் வருகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டியது நம்முடைய கடமை. எனவே அது தயவுசெய்து அவைக்குறிப்பிலே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கொடுக்கின்ற பணத்தை அவர்கள் செலவு செய்தார்களா என்று அங்கே போய் அந்த வேலைகளைப் பார்ப்பதற்கு. சரியாகச் செய்கிறார்களா அல்லது வேலை நடைபெறுகிறதா என்று பார்ப்பதற்கெல்லாம் நமக்கு உரிமை இருக்கிறது. அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நான் இதில் எதிர்க்கட்சித் தலைவரோடு ஒத்துப் போகிறேன். ஆனால். நாம் கொடுக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு அவர்கள் ஏரியாவில். அவர்களுடைய பாசனத்திற்குச் செலவு செய்கிறார்களா என்று ஆந்திர அரசு மீது குறிப்பிட்டு குற்றச்சாட்டைச் சொல்வது சரியாக இருக்காது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதுபற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுக்க வேண்டுமானால் அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. அடுத்து. உலக வங்கியிலிருந்து இதுவரை கடனாக. மூன்று ஆண்டுகளாக 537.26 கோடி ரூபாய் வாங்கியிருக்கிறோம். Asian Development Bank-லிருந்து 61.865 கோடி ரூபாய். Europeon Economic Community-யிலிருந்து 12.93 கோடி ரூபாய். Overseas Economic Co-operation Fund-லிருந்து 244.09 கோடி ரூபாய். CD International Development Agency-லிருந்து 4.85 கோடி ரூபாய். International Fund for Agricultural Development-லிருந்து 6.94 கோடி ரூபாய். டானிடா மூலம் 27.77 கோடி ரூபாய். ஆக மொத்தம் இதுவரை மூன்று ஆண்டுகளாக 2122.61 கோடி ரூபாயை நம்முடைய அரசு கடனாக வாங்கியிருக்கிறது. இதுபற்றி எனக்கு ஒரு தகவல் வந்தது. அது என்னவென்றால். இதில் 60 சதவிகிதம்தான் நாம் பயன்படுத்தியிருக்கிறோம். இன்னும் 40 சதவிகிதம் இதுவரை நமக்கு கிடைக்கப்பெறவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. இதிலே எனக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால். உலக வங்கியில் நாம் கடன் வாங்கிவிட்டால். அந்தக் கடனை நாம் பயன்படுத்தாவிட்டால்கூட Commitment fees என்று இருக்குமே. அதை நம்முடைய அரசின் தலையில் போட்டு அது வந்து கொண்டேயிருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு ஓர் உதாரணம் சொல்லவேண்டுமானால். எங்கள் ஊரில்** அந்தக் காலங்களில் வங்கிகள் கிடையாது. விவசாயிகள் ** பணத்தைக்கொண்டு போய் கொடுத்து வைப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

31'N98 N98•43.2



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அவர்கள் அதைத் துணியிலே முடிந்து பெயரைப் போட்டு வைப்பார்கள். அதை அப்படியே வைத்துவிடுகிறேன் என்று சொல்லி வைத்துவிடுவார்கள். ஒரு மாதம் கழித்துத் திரும்பி வந்து எனக்கு அதைக் கொடுங்கள் என்று கேட்டால். அந்தப் பணத்திலிருந்து கொடுக்கவில்லை. உங்களுக்கு வட்டியைத் தருகிறேன் என்று சொல்லி ** நம்முடைய விவசாயிகளை ஏமாற்றுவார்கள். **என்று வேண்டாம். வட்டிக்கடைக்காரர் என்று வைத்துக் கொள்ளலாம். ** என்பதை எடுத்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை முதலில் உங்களிடம் அனுப்புகிறேன். நீங்களே எதையெதை எடுக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதை எடுத்துவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 40 சதவிகிதம் நம்முடைய பணம் அங்கே இருக்குமானால், அதில் நாம் பயன்படுத்தாமல் உள்ள பணம் அங்கே இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உலக வங்கி போன்ற பல்வேறு நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு கல்வித் துறையிலே. பல்தொழில் பயிலகங்கள் போன்ற அமைப்புக்கு ஒவ்வொரு குறிப்பிட்ட திட்டங்களுக்குத்தான் நிதி வழங்கப்படுகிறது. இந்த நிதிகூட. முதல்கட்டத்திலே அவ்வளவும் தருவதில்லை. ஆறு மாதம் அல்லது ஓராண்டுக்கு எவ்வளவு பணியை நிறைவேற்றியிருக்கிறோம் என்று பார்த்து தான் ஆண்டுதோறும் தரப்படுகிறது. எனவே. பணம் தருவதேகூட ஏறத்தாழ பணி முடிகிற கட்டத்திலேதான் அந்தக் கடன் முழுவதும் வழங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. இதற்கிடையே மத்திய அரசுகூட ஒரு கருவியாக இருந்து முறைப்படுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் [illegible]க்கிணங்க அகற்றப்பெற்றது.

24854.

[1998 ஏப்ரல் 6

*பிற்பகல் 12-10*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2 மில்லியன் 44 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாகக் கணக்குச் சொல்கிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் தரிசு நிலங்களைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஈரோடு தொடங்கி புதுக்கோட்டை, திண்டுக்கல், திருநெல்வேலி வரை உள்ள இடைப்பட்ட இடங்களில் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்தினுடைய மேற்கு, கிழக்குப் பகுதிகளிலே உள்ள பகுதிகள் நீர்நிலை வசதிகளுடன் பாசனப் பகுதிகளாக உள்ளன. மேற்குறிப்பிட்ட இடைப்பட்ட பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை செம்மைப்படுத்தி விவசாயத்திற்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். இது நம்முடைய கடமை. இதற்கு ஒரு குழு அமைத்து மரம் வளர்த்தல், தோட்டக் கலை விவசாயம், கால்நடை வளர்ப்பு, வறட்சி தாங்கும் பயிர்கள் வளர்ப்பு போன்ற ஒருங்கிணைந்த திட்டத்தினைத் தயாரித்து செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இனி இந்த நிலங்கள், பயிரிடப்படாத நிலங்களாக இருக்கக்கூடாது. விஞ்ஞானம் வளர்ந்துள்ள காலத்தில் இந்த நிலங்களில் பயிரிடுவதற்கு ஒருங்கிணைந்த திட்டத்தினைத் தீட்டிச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்தில் மீன் ஒரு சிறந்த உணவு. நமக்கு நீண்ட கடற்கரை இருந்தாலும்கூட உள்நாட்டு மீன் உற்பத்தி என்பது மிகக் குறைவு. சைனா, பின்லாந்து, தாய்லாந்து போன்ற நாடுகள் உள்நாட்டு மீன் உற்பத்தியாலேயே வெற்றி பெற்றிருக்கின்றன. நம்முடைய நாட்டிலே தண்ணீர் குறைவாக இருந்தாலும்கூட, உள்நாட்டு மீன் வளர்ப்பு என்பதை ஊக்கப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை என்பது மிகப் பெரிய ஒன்றாகும். இந்த நாட்டில் விவசாயம், கைத்தறி, அதற்கடுத்து கால்நடை வருகிறது. சென்ற மழையில் கிட்டத்தட்ட 10,000 ஆடுகளுக்கு மேலே செத்துவிட்டதாகப் பரவலாக கூறியிருக்கிறார்கள். அரசுகூட 1 கோடி ரூபாய் அதற்கு நிவாரணமாக அளித்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது முறையாக வழங்கப்படுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆடு வளர்க்காதவர்கள் எல்லாம் ஆட்டு லோன் கேட்பார்கள். இந்தக் கால்நடைகளை வைத்து இழந்தவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால் எங்களுக்குப் பணம்



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கொடுக்காவிட்டாலும்கூட, இந்தக் கால்நடைகள் இதுபோன்ற நோய்களால் இனிமேல் பாதிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் ஏதாவது செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். ராணிப்பேட்டையில் கால்நடை வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு நிலையம் ஒன்றிருப்பதாகவும் அது சரிவர செயல்படவில்லை என்றும் சொல்கிறார்கள். இதையெல்லாம் கொஞ்சம் ஒழுங்காகப் பார்த்து, இது நல்ல தொழிலாக, சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு நம்முடைய கால்நடைத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, அதற்கான ஊக்கத்தினை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையிலுள்ள ஆட்டோக்கள். மீட்டர்களுக்கு சூடு வைத்து 40% கூடுதலாகக் கட்டணம் பெறுகிறார்கள் ஆட்டோக்காரர்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. நேற்றுகூட பெண்கள் ஆட்டோ ஸ்டேண்ட் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் பெண் ஆட்டோ ஓட்டுநர்களெல்லாம் பேட்டி கொடுத்தார்கள். நாங்களெல்லாம் சூடு வைத்த மீட்டர்களை வைக்க மாட்டோம் என்று ஒப்பனாகச் சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். சென்னையிலே மீன் வண்டி என்று ஆயிரக்கணக்கில் வண்டிகள் இருக்கின்றன. வண்டிக்கும் லைசென்ஸ் கிடையாது; டிரைவருக்கும் லைசென்ஸ் கிடையாது. இந்த வண்டியை எப்படித் தயார் செய்கிறார்கள் என்றால், இரவு நேரங்களில் திருடிய வண்டிகளிலேயிருந்து இந்த வண்டியைத் தயார் செய்வதாக பரவலாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து தினமலர் பத்திரிகையில் நேற்றைய முன்தினம் தெளிவான, சிறப்பான கட்டுரை ஒன்று வந்திருக்கிறது. 60 கிலோமீட்டர் ஸ்பீடில் அவர்கள் செல்கிறார்கள். அதையும் கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம். மின்சாரத் துறை அமைச்சர் பொறுமையானவர். எவ்வளவோ நாம் குறைவாக, கடுமையாகப் பேசினாலும்கூட, பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கிற ஒரு நல்ல அமைச்சர். பாவம், அவருக்கு அதிகத் தொல்லை கொடுத்துவிடக் கூடாது. ஆனால், ரங்கராஜன் குமாரமங்கலம் இருக்கிறாரே, அவர் *உண்மைக்கு புறம்பானதைத் தவிர வேறு எதுவும் சொல்லமாட்டார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 6

பிற்பகல் 12-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இருவரும் உட்காருங்கள். மத்திய அமைச்சர் உண்மைகளைப் பேசுவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லட்டும். பழமொழியாக * என்று சொன்னால், அது வேறு மாதிரியாகப் போய்விடும். அது வேண்டாம். ஆகையினாலே, அவர் உண்மை பேசுவதில்லை என்று சொல்லுங்கள், நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் உண்மைக்குப் புறம்பாகவே பேசக்கூடியவர் என்பதை நான் மிக நன்றாகவே அறிவேன். ஏனென்றால், எங்கள் கட்சியிலே அவர் ரொம்ப நாட்கள் இருந்தார். அவர் திடீரென்று திருச்சியிலே வந்து, Show cause power project- 20 வரப் போகிறது, இந்தியாவிலே, தமிழ்நாட்டிலே கடலூரிலும், திருச்சியிலும் உடனே வரப்போகிறது என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய அமைச்சருக்கு ஏதாவது அது பற்றித் தெரியுமா, அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு தூரம் *உண்மைக்குப் புறம்பானது பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றுகின்ற அளவிற்கு ஒரு மத்திய அமைச்சர் இருக்கக் கூடாது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். தயவுசெய்து நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனே அவரைப் பார்த்துப் பேசி, Show cause power project என்றால் என்ன என்பதைக் கேட்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இதுமாதிரியான *உண்மைக்கு மாறான செய்திகள் வரக்கூடாது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1989-லே முதலமைச்சராக இருந்தபோது, வடசென்னை ப்ராஜெக்ட்டிலே ஏகப்பட்ட தகராறுகள் வந்தன. தனியார் ஒருவர் ஐந்தாயிரம் ஏக்கருக்கும் மேலே நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தார். வல்லபாய் பட்டேல் அவர்கள், எப்படி மிகத் திறமையாக இந்த நாட்டிலே இருந்த குட்டி ராஜாக்களையெல்லாம் ஒழித்துக்கட்டி, இந்தியாவை உருவாக்கினார்களோ, அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் ஒரே நாளில் அகற்றி, அந்த இடத்தை அரசுக்கு மீட்டுக் கொடுத்தார்கள். இன்றைக்கு வடசென்னையிலுள்ள அந்த மின்சார நிலையம் பத்தாயிரம் மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கக்கூடிய அளவிற்கு சிறந்ததொரு இடத்தைப் பெற்றிருக்கிறது. இப்பொழுது அது 800 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை உருவாக்கித் தந்த முதலமைச்சர் அவர்கள், இந்த ஐந்து தனியார்களுக்கு, அதுவும் கேஸ், டீசல் போன்று தயாரிக்கக்கூடிய அவர்களுக்கு ஒரே ஆண்டில் லைசென்ஸ் கொடுத்து, கையெழுத்து வாங்கியிருந்தால்--இந்த ஓராண்டுக் காலத்திற்குள் இந்த ஐந்து பேரும் 485 மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கக்கூடிய சூழ்நிலையில்--இந்தப் பிரச்சினையே இப்போது வந்திருக்காது. ஆகவே, அன்றைய முதலமைச்சருக்கும், இன்றைய முதலமைச்சருக்கும் உள்ள வேறுபாட்டை நான் மிகவும் வருத்தத்தோடு இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். ரா-மெட்டீரியல்ஸ்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாநில முதலமைச்சருடைய தவறு அல்ல. அவர் அப்படியேதான் இருக்கிறார். அப்பொழுது இருந்த முதலமைச்சர் அப்படியேதான் இருக்கிறார். ஆனால், மத்திய அரசுதான் நமக்குத் தரவேண்டிய நாப்தா, திரவ எரிபொருள் இருக்கிறதே, அதைத் தருவதற்கு தாமதத்தை ஏற்படுத்திவிட்டது. நாம் 20 இடங்களுக்குக் கேட்டோம். அவர்கள், இறுதியாக ஐந்து இடங்களுக்குத்தான் தந்தார்கள். ஆகவே, தவறு நம்முடையது அல்ல. மத்திய அரசின், அன்று இருந்த மத்திய அரசினுடைய காலதாமதம்தான் காரணம்.

[1998 ஏப்ரல் 6

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். அன்றைக்கிருந்த அரசாங்கத்திலே, அரசாங்க சட்டப் பல்கலைக் கழகத்திற்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அரை மணி நேரத்திற்குள் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் அரை மணி நேரமா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12-30 மணிக்குள் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு மாத்திரம் பழைய மந்திரி திரு. பொம்மை அவர்கள் கையெழுத்து போட்டார்கள். கையெழுத்து வாங்குவதற்கு எத்தனை தடவை போனீர்கள்? அதேமாதிரி மெட்ராஸ் என்பதை சென்னை என்று மாற்றினோமே; கையெழுத்துப் போட்டாரே திரு. இந்திரஜித் குப்தா. அந்த வேலைகளை மாத்திரம் சரியாகப் பார்க்கிறீர்கள். இந்த மின்சாரத்திலே மாத்திரம், ஏன் நீங்கள் கவனம் எடுத்து, டெல்லிக்குச் சென்று, நாப்தா வாங்கியே கொடுத்தாக வேண்டும் என்று நீங்கள் கட்டாயப்படுத்தியிருந்தால் நிச்சயம் கொடுத்திருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே ஆறு முறை நேரடியாகச் சென்று மத்திய அமைச்சரைக் கேட்டேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்கு முறை இந்தியப் பிரதமரைச் சந்தித்து இதுகுறித்து வற்புறுத்தினார்கள். ஆனால், அப்பொழுது 12,000 மெகாவாட் நாப்தாவிலே நமக்கு 200 மெகாவாட்தான் கொடுக்க முடியும், இப்பொழுது எங்களால் முழுவதையும் கொடுக்க முடியாது



1998 ஏப்ரல் 6] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள்கூட ஓ.சி.எல். மூலமாக உங்களுக்குக் கொடுக்க முடியுமா என்று பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குள்ளாக ஆட்சி போய்விட்டது.

பிற்பகல் 12-20

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில், நெய்வேலி மின்திட்டம் என்பது, மத்திய அரசுக்குச் சொந்தமான மின்திட்டம். அங்கே 500 மெகாவாட் மின்சாரம், யாருக்கும் வழங்கப்படாமல், கொடுக்கப்படாமல், சேமிப்பாக இருக்கிறது என்ற ஒரு தகவலைச் சொன்னார்கள். தயவுசெய்து, அது என்ன என்று பார்த்து அந்த 500 மெகாவாட் மின்சாரத்தைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்வாரியத்தை, எல்லா இடங்களிலும், கல்கத்தா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய எல்லா இடங்களிலும், ஜெனரேஷனாகவும், டிஸ்ட்ரிபியூஷனாகவும் இரண்டாகப் பிரித்து விட்டார்கள். தமிழ்நாட்டிலே மட்டும் அது ஒன்றாகவே இருக்கிறது. இது மின்சார உற்பத்திக்கு ஓர் இடைஞ்சல் என்று நான் கருதுகிறேன். ஆகவே இதை இரண்டாகப் பிரித்து, 'ஜெனரேஷன்'-ஆகவும், 'டிஸ்ட்ரிபியூஷன்'-ஆகவும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை நம்முடைய திரு. சுப்பராயன் அவர்களும் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். ஏனென்றால், கல்கத்தாவிலே, திரு. கோயங்கா அவர்கள் மின்சாரத்தை பிரைவேட்டாக, கல்கத்தா நகருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மும்பையில், டாட்டா கொடுத்துக் கொண்டிருக்கிறார். சென்னையில், ஏன் ஒரு பிர்லாவை அழைத்து, தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். திரு. சுப்பராயன் எதிர்க்கமாட்டார்; காரணம், கல்கத்தாவிலே, கோயங்கா கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தனியாருக்குக் கொடுத்து.....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்கத்தாவிலே, விநியோகம் மட்டும்தான் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஜெனரேஷன் தனியாருக்குக் கொடுக்கப்பட்டதாக இல்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரேஷனைத் தனியாருக்குக் கொடுக்கச் சொல்லவில்லை. இரண்டாகப் பிரித்து, ஜெனரேஷன் வேறு, டிஸ்ட்ரிபியூஷன் வேறு என்று பிரித்தால், இன்னும் கொஞ்சம் திறமையாக ஜெனரேஷனை உண்டாக்குவதற்கு, அந்த அதிகாரிகள் மற்றும் இன்சினியர்கள் முயற்சி செய்வார்கள் என்பதற்காக நான் கூறுகிறேன். மின்சாரம் தயாரிக்கக்கூடிய குறுகியகால 488 திட்டங்களை, மிக விரைவில், ஒரு மாதம் அல்லது 2 மாத காலத்திற்குள்ளாகவே செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஒகேனக்கல் நீர் மின்சார நிலையத்தில், காமராஜர் காலத்தில் திட்டம்போட்டு, 2 மாநிலங்களும் சேர்ந்து செய்யப்பட்ட அந்தத் திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். அதையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பின்னி அண்ட் கம்பெனி பிரச்சினையை நல்லமுறையில் பேசித் தீர்த்துவிட்டீர்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் மட்டும் என்ன பாவம் செய்தது? நான்கூட சென்ற தடவை பேசியபோது, மலேசியாவிலிருந்து ஒரு தொழிலதிபரை அழைத்து வருகிறேன் என்று நம்முடைய முதலமைச்சரிடம் சொன்னேன். அவரும் அழைத்து வாருங்கள் என்று சொன்னார். "தவிடு விற்கப்போனால், காற்றுவருகிறது; உப்பு விற்கப்போனால், மழை பெய்கிறது" என்று சொல்வார்கள். மலேசியாவிலிருந்து அவர் வருகிற நேரத்தில், மலேசியாவினுடைய பணம் வீழ்ச்சி அடைந்து விட்டது. அங்கே 18 ரூபாயாக இருந்தது. இப்போது 10 ரூபாயாக, 8 ரூபாயாக ஆகிவிட்டது. ஆகவே, என்னால் முடியவில்லை என்று சொல்லிவிட்டார். எனவே, தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்தை வெகுவிரைவில் திறக்க வேண்டும். ஏராளமான பேர்கள் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள். நான்கூட ஒரு செய்தி கேள்விப்பட்டேன்; டாட்டா நிறுவனம், சென்னையில் ஓர் இடம் பார்த்திருப்பதாகக் கேள்விப்பட்டு, அதுகுறித்து நான்கூட ஒரு 'ஃபேக்ஸ்' செய்தி அனுப்பியிருக்கிறேன். எங்களுடைய முதலமைச்சர் அவர்களை நீங்கள் வந்து பாருங்கள்; இப்போதுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் உள்ள இடம், அருமையான இடம்; உங்களுக்கு வாய்ப்பான





இடம் என்று அதில் கொடுத்திருக்கிறேன். அந்த 'ஃபேக்ஸ் மெசேஜ்'-இன் நகலை, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கணினி, கல்வித் துறையில் பயன்படுத்தக் கூடிய கணினிகளுக்கெல்லாம் வரியில்லை என்று சொன்னீர்கள். இப்போது கணினிகள் என்பது, உலகத்திலேயே, இந்தியாவிலேதான் சிறந்தமுறையில் தயாராகின்றன என்று உலகமே வியந்து கொண்டிருக்கிற ஒரு நல்ல சூழ்நிலையிலே, நம்முடைய பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே இந்தக் கணினி துறையை உருவாக்கி, அதை ஒரு நல்ல தொழிலாக நாடு முழுவதும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலமாக, ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

அடுத்ததாக, இந்த ஆண்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டு. சுதந்திரத்திற்காகப் போராடியவர்களுக்கு நாம் 'பென்ஷன்' வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதிலே, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், ஒருவருக்கு 'சர்டிஃபிகேட்' கொடுத்திருக்கிறார். இந்தமாதிரி கொடுக்கப்படுகிற குடும்பங்களுக்காவது தயவுசெய்து நீங்கள் 'பென்ஷன்' வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அடுத்து, நம்முடைய தலைவர் காமராஜர் அவர்களும் ஒருவருக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு, நீங்கள் கொடுப்பதெல்லாம், பேரவைத் தலைவர் மூலமாகத்தான் கொடுக்க வேண்டும். முதலமைச்சர் எதிரில் இருக்கிறார் என்பதற்காக, நேரடியாகக் கொடுக்கக்கூடாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகவே, முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.

அதேமாதிரி, நம்முடைய தலைவர் காமராஜர் அவர்கள் ஒருவருக்கு சர்டிஃபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கும் பென்ஷன் வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். பிறகு நமது குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பதற்காகப் போராடிய 174 தியாகிகளுக்கும் பென்ஷன் வழங்க வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-25*

பிறகு நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அவர் அறநிலையத் துறையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றாலும்கூட நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலில் 24-10-1996 அன்று குடமுழுக்கு நடந்தது. குடமுழுக்குச் செய்வதில் 2 முறைகள் இருக்கின்றன. ஒன்று உபயதாரர்களிடமிருந்து பணத்தை வாங்கிப்போட்டு குடமுழுக்குச் செய்யவேண்டும். அதற்கு ரசீது போடக் கூடாது. அப்படி இல்லாத இடங்களில் டிக்கெட் போட்டு குடமுழுக்குச் செய்யவேண்டும். இந்த நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில் என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் இருக்கும் மக்கள் அனைவரும் வணங்கக்கூடிய, தெய்வமாக இருக்கின்ற, மக்கள் அங்கே சென்று வரம் கேட்கக்கூடிய தெய்வமாக இருக்கின்ற, ஒரு நல்ல கோவில். அங்கே உபயதாரர்கள் அதாவது Donor Scheme என்று இருக்கிறது. அந்த Donar Scheme என்பதன் கீழ் 15 இலட்ச ரூபாய்ச் செலவில் 2, 3 பேர் குடமுழுக்குச் செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பெர்மிஷனும் கொடுத்து விட்டார்கள். ஆனால் அங்கேயிருக்கிற அறநிலையத் துறை அதிகாரி இ.ஓ. ஒரு கோடி ரூபாய்க்கு ரசீது அடித்திருக்கிறார். ரசீது அடித்து ஊரெல்லாம் வசூல் பண்ணி அந்தப் பணத்தையெல்லாம் வைத்து தருமபுரி மாவட்டம், பெங்களூர் நகரம் போன்ற இடங்களில் நிறைய சொத்துக்கள் வாங்கி இருக்கிறார். அதை நம்முடைய அரசு கண்டுபிடித்து அவரை சஸ்பெண்ட் பண்ணியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுக்கள். ஆனால் இப்போது அவர் Voluntary Retirement-ல் போவதற்கு அமைச்சர் அவர்களை அணுகிக் கொண்டிருப்பதாக ஒரு தகவல். தயவுசெய்து நீங்கள் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக இதுவரை எதுவும் வரவில்லை. ஏற்கெனவே வந்த புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் இதுபோன்ற தவறு செய்தவர்கள் அரசை அணுகி எந்த நன்மையும் பெறமுடியாது என்பதை அரசு உறுதி செய்கிறது.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு இடம். இதுமாதிரி 16 இடங்களில் ஊழல் நடந்திருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. ஆகவே எல்லாக் கோவில்களிலேயும் இந்த Donor Scheme-ல் டிக்கெட் போட்டார்களா என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அந்த அதிகாரிக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 14-3-1997 அன்று Elementary Schools அதாவது தொடக்கப் பள்ளிகளில் அரிசன ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தினால் பி.டி., பி.எட். ஆசிரியர்களைப் போடலாம் என்ற உத்தரவைப் போட்டார்கள். அதை நம்முடைய கல்வித் துறையினர் என்ன செய்துவிட்டார்கள் என்றால் கணிதம், தமிழ், அறிவியல் படித்தவர்களுக்கு மட்டும்தான் eligible, மற்றவர்களுக்கு இல்லை என்று சொன்னதன் காரணமாக அவர்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். தயவுசெய்து எல்லாத் துறைகளிலேயும் அதாவது வரலாறு போன்ற மற்றத் துறைகளிலேயும் படித்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அந்த வழக்கை அவர்கள் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் என்ற நிலையில் நடுநிலைப் பள்ளிவரையில் அதாவது 8-வது வகுப்பு வரையில் அவர்கள் பாடம் எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களிடத்தில் எடுக்கக்கூடாது என்று ஏற்கெனவே நீதிமன்றத்தில் தடையாணை இருக்கிறது. எனவே அந்தத் தடையை விலக்கிக் கொண்டு அல்லது விலக்கும்படி கேட்டுக்கொண்டு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கின்றபோது 8-வது வகுப்பு வரையில் பாடம் நடத்த வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால், அறிவியல் துறையில், கணிதத் துறையில் அப்படி இடைநிலை ஆசிரியர்களால் நடத்த முடியாத பாடத்தை நடத்தக்கூடிய வாய்ப்பு அவர்கள் மூலமாகக் கிடைக்கிறது என்ற ஒரு அடிப்படையான காரணத்தையும் சேர்த்து ஏற்கெனவே உள்ள தடையை ஆதிதிராவிடர்களுக்காக விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை

ஆசிரியர்களாக எடுக்கின்றபோது தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம். இது மாணவர்களுடைய நன்மைக்காக. அதிலும் வரலாறு படித்தவர்களோ வேறு பாடம் படித்தவர்களோ வருவார்களேயானால் அவர்கள் பாடம் நடத்துவதாலே மாணவர்கட்கு அதிகப் பயன் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே. 2, 3 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் எண்ணெய்க்கு வரியை எடுத்ததைப் போல தவிட்டிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கும் பருத்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கும் வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மசாலாப் பொடிகளுக்கு வரிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொப்பரைத் தேங்காய்க்கு 2 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதம் வரி என்று இருப்பதை அறவே நீக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வெண்ணெய்க்கு வரி உள்ளது. வெண்ணெய் என்பது கிட்டத்தட்ட edible oil மாதிரிதான். அதற்கும் வரியை நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறுவர் பூங்கா. அது இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறது. அதற்கு 20% வரி போட்டிருக்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் சிறுவர் பூங்கா என்பது தமிழகத்தில் புதிதாக வந்திருக்கிற நல்ல முறை. ஆகவே, அதற்கு ஒரு 5 ஆண்டுக் காலத்திற்கு வரி விலக்கு அளிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பத்தி 182, 183-ல் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிப்பதற்காக ஒரு குழு போடுவதாகச் சொல்லியிருந்தார்கள். இது மிகவும் முக்கியமான குழு. இதுவரை போட்டதாகத் தெரியவில்லை. இந்த பட்ஜெட்டில் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, அதையும் நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

சில கோரிக்கைகளை மட்டும் சொல்லி, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.





மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்கப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றப் பேரவை நிருபர்களுக்கு, பாராளுமன்ற நிருபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதிய விகிதங்கள் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு இதுவரையில் பல கார்ப்பரேஷன்களாக இருந்தவற்றை. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் என்று அறிவித்ததால்; அதில் பணிபுரியும் தொழிலாளர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பரமக்குடி ஆற்றிலே தண்ணீர் 20 அடி ஆழம் இருக்கிறது. அதிலேயிருந்துதான் அந்தப் பகுதி முழுவதும் உள்ள மக்கள் தண்ணீர் எடுக்கிறார்கள். அந்த ஆற்றிலே ஏராளமாக மணல் எடுக்கப்படுவதன் காரணமாக, அங்கிருக்கும் ஒரு மேல்நிலைப் பள்ளிகூடம் கூட ஆற்றுக்குள் விழக்கூடிய அபாயத்தில் இருக்கிறது. எனவே, அங்கு மணல் எடுக்கின்ற கொடுமையை தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அக்காள் பொன்னம்மாள் அவர்கள் ஆண்டாண்டுக் காலமாக சிறுமலை அருவித் திட்டம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து, அந்தத் திட்டம் வயபிளாக இருந்தாலும் சரி, வயபிளாக இல்லாவிட்டாலும் சரி, முதலமைச்சர் அவர்கள் சிறுமலை அருவித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்கள் கேட்கின்ற அரசு பெண்கள் கல்லூரியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் கல்லூரி கொடுப்பது ஒன்றும் கஷ்டம் இல்லை. ஒரே ஒரு பெண் உறுப்பினர் கடந்த 40 ஆண்டுக்காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறார். எனவே, அவருடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிட்டா நூலுக்கு இரண்டு சதவிகித வரி இருக்கிறது. கைத்தறி நெசவாளர் நலன் கருதி அதை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 6

அடுத்து, வேலூரில் ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாகும். அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில நெடுஞ்சாலைகளாக, சாயல்குடி,- சிவகங்கை, வழி-முதுகுளத்தூர், பரமக்குடி, இளையான்குடி; பார்த்திபனூர் முதல் விருதுநகர், வழி- திருச்சுழி, அரசக்கோட்டை, தேவிபுரம், திருமயம், போன்ற சாலைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மகாராஜபுரம் சமுத்திரம், காட்டாற்றின் குறுக்கே ஒரு நீரேற்று நிலையம் அமைக்க வேண்டுமென்று பல தடவைகள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பேசி இருக்கிறார். அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இது குறித்து சொல்லிவிட்டார்கள். தஞ்சையில் இந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக அந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பதோடு, வரி விலக்கு போன்ற சலுகைகளையும் அமலாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தருமபுரி, சேலம், விழுப்புரம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த 220 "IFAD" திட்ட மேற்பார்வையாளர்கள் பணி நிரந்தரம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டுகளாக டெம்பரவரியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையையும் உங்கள்முன் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, வடசென்னை அனல் மின் நிலையத்தில் பணியாற்றிய 358 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது தர்மமல்ல. அவர்களுக்கு வேலை கொடுத்த பிறகு, வீட்டுக்குப் போகும்படி சொல்வது எந்தவகையிலும் நியாயம் இல்லை. எனவே, அவர்களுக்கும் வேலை கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கடைசியாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளையதினம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பாரதப் பிரதமரைச் சந்திக்க இருக்கிறார்கள். இங்கே நீதித் துறையிலே ஒரு மிகப்பெரிய கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து பாரதப் பிரதமரிடம் நேரில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்த செய்தியை நான் படிக்கிறேன்.

"All India Lawyers' Union has expressed its anguish over the move to transfer the Chief Justices of Karnataka, Madras, Punjab & Haryana and Kerala High Courts to other Courts. In a resolution, the AILU said the transfer of 4 Chief Justices was certainly not in public interest and would undermine a healthy judicial system and no compelling reasons seem to exist for their transfer. The resolution said, the Chief Justice of the Madras High Court took over only in July 1997 and several cases of great public importance such as the Constitution of Special Courts, had been heard by the Bench headed by the Chief Justice and the judgement was awaited. If the proposed transfer was effected, those cases would have to be re-heard. The AILU resolved to represent to the President, the Prime Minister, the Chief Justice of India and to the companion Judges of the Supreme Court, against the proposed transfer" என்று ஒரு பத்திரிகையிலே வந்திருக்கிறது. தயவு செய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரை அணுகி, நம்முடைய சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களை மாற்றாமல் இருந்து இங்கே நடக்கின்ற இந்த ஊழல் வழக்குகளையெல்லாம் செம்மையாக நடத்தி வெற்றி பெறுவதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்க வேண்டும், துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ** என்று குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தைப் பற்றிப் பேசியதை அவரே திரும்பப் பெற்றுவிட்டதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 6

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து அரிய உரைகளை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அவர்கள் பாராட்டிய அந்த உரைகளை மேலும் ஊக்கத்தோடு பணியாற்றுவதற்குத் தரப்பட்ட வலுவேற்றக்கூடிய மாத்திரைகள் என்று எண்ணிக்கொண்டும், கேலியோ அல்லது கிண்டலோ செய்து எதிர்த்து ஆற்றிய உரைகளைத் திருத்திக்கொள்வதற்கு தரப்பட்ட வாய்ப்பு என்றும் எடுத்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய இரண்டு ஐயப்பாடுகளுக்கு நான் விடையளிக்க விரும்புகிறேன். வெளிநாட்டுக் கடன்களை அரசு பெறுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டு கடன்களைப் பொறுத்தவரையில் அதை மத்திய அரசு பெற்று மாநில அரசுகளுக்குக் கூடுதல் மத்திய திட்ட உதவியாக 70 சதவிகிதம் கடன், 30 சதவிகிதம் மானியம் என்ற விகிதத்திலே அளிக்கின்றது. இந்தக் கடன்களின் மீதான 'Commitment charges' இவைகளை மத்திய அரசுதான் செலுத்தி வருகிறது என்ற விளக்கத்தை நான் அவருக்கு அளிக்க விரும்புகிறேன். இன்னொன்றும், கூறினார்கள். வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க குழு போடுவதாக சென்ற நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டீர்கள், அந்தக் குழு என்னவாயிற்று? ஏன் இன்னும் நியமிக்கவில்லை என்று கேட்டார்கள். கடந்த ஆண்டிலே நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்தது, வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க குழு அமைக்கப்படும் என்று அல்ல, ஒரு 'செல்' 'Cell' அமைக்கப்படும் என்றுதான் கூறி இருந்தேன், ஒரு பிரிவு அமைக்கப்படும் என்றுதான் கூறியிருந்தேன். அது அமைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சருடைய அலுவலகத்திலேயே மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஓய்வு பெற்ற அதிகாரி, Officer on Special Duty என்ற அந்தப் பொறுப்பில் திரு. வெங்கடசுப்ரமணியம், ரிடையர்டு ஐ.ஏ.எஸ்.அவர்கள் அந்தப் பணியை இப்போது ஆற்றி வருகின்றார் என்ற விளக்கத்தை அவருக்குத்தர விரும்புகிறேன். இன்னொன்று, கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட "Right to Information Act" தகவல் தெரிந்துகொள்கின்ற அந்தச் சட்டம் என்னவாயிற்று என்று



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

கேட்டார்கள். சட்ட அமைச்சர் அதற்கான பதிலைச் சொன்னார்கள். விதிமுறைகளை உருவாக்குவதற்கு ஏன் இவ்வளவு தாமதம் என்று அடுத்த வினா எழுப்பினார்கள். இந்த "Right to Information Act" என்ற தகவல் பெறுகின்ற இந்தச் சட்டம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாக இயற்றப்பட்டிருக்கிறது. அதனால், இந்தச் சட்டத்திற்கான விதிமுறைகளை உருவாக்குவதற்கு எந்த முன்மாதிரிகளும் நமக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. எனவேதான், அந்த விதிமுறைகளை உருவாக்குவதற்கு காலதாமதம் ஆயிற்று. இப்போது அந்த விதிமுறைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, இறுதி வடிவம் பெறுகின்ற சூழ்நிலை அமைந்துவிட்டது. எனவே, அந்த விதிமுறைகள் விரைவிலே வெளியிடப்படும் என்பதையும் நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள சிறப்பு அம்சங்களை இங்கே உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி, தோழமைக் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவற்றை ஒருமுறை நானும் தொகுத்து வழங்கினால் நினைவிலே பதிவதற்கு ஏற்றதாக அமையும் என்பதற்காக அதனை உங்கள் முன்னிலையிலே வைக்க விரும்புகிறேன்.

அரசு அலுவலகங்களிலே பொதுமக்களுக்கு உதவி செய்யும் தகவல் வழங்குகின்ற மையங்கள்; 10 புதிய வட்டங்கள் இந்த ஆண்டில் ஏற்படுத்தப்படும் என்ற செய்தி; இது மேலும் பல கோரிக்கைகள் அடங்கிய செய்தியாக அமைந்திருக்கிறது. அவைகளும் உரிய நேரத்திலே, உரிய முறையிலே கவனிக்கப்படும் என்ற அறிவிப்போடு இதைத் தெரிவிக்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு இந்த ஆண்டு 75 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு; நமக்கு நாமே திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் என்பது ரூபாய் 30 இலட்சமாக உயர்வு; அதிகம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பேசப் பேசத்தான், முடியுமா முடியாதா என்பதைச் சிந்தித்துச் சொல்ல இயலும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் 385 வளர்ச்சி வட்டாரங்களுக்கு விரிவாக்கம்; குடிநீர்த் திட்டங்கள் பல கோடி ரூபாய்ச் செலவிலே, பல இடங்களிலே நிறைவேற்றப்படுகின்ற நிலையையொட்டி, குறிப்பாக, சிறப்பாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து கடையநல்லூர் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; அவிநாசி, அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்; நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை இந்த ஆண்டு உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற செய்தி;

கோவை, மதுரை, திருநெல்வேலி, மாநகராட்சிகளிலும், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர், ஈரோடு, கரூர் நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை வசதிகளை அளிக்கும் திட்டம் 269 கோடி ரூபாய்ச் செலவிலே வரும் ஆண்டிலே தொடங்கப்படும் என்ற செய்தி;

பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி, அடையாறு ஆகிய நீர் வழிகளை மேம்படுத்தும் திட்டம்; 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் பணிகள்;

நியாய விலைக் கடைகள் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் சென்று பார்க்க ஆணை;

20 கோடி ரூபாய்ச் செலவில் காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டம்;

100 மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கண்ணாடி இழை கட்டுமரங்கள் மானிய விலையிலே வழங்கப்படும் திட்டம்;

538 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும் என்ற அறிவிப்பு;

சென்னையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக மற்றும் நிதி மையம்;

அக்டோபரில் தொடங்கும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் கார்கள் தயாரித்து வழங்கும் ஹூண்டாய், தொழிற்சாலையினுடைய பணியின் முன்னேற்றம்;

தமிழ்நாட்டில் கணினி மென்பொருட்கள், கணினி இயந்திரங்கள் தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கும் திட்டங்கள். மேலும் கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள்;



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

அடுத்த ஆண்டுக்குள் தொடக்கப் பள்ளிகளே இல்லாத கிராமங்களே தமிழ்நாட்டிலே இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்;

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப் புத்தகம்;

வரும் ஆண்டிலேயிருந்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் 'ஒற்றைச் சாளர முறை';

திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்கள் அரசுடைமை. வசனகர்த்தா இளங்கோவன் குடும்ப நல நிதி 2 இலட்சம் ரூபாய்; தியாகச் செம்மல் ஜமதக்னி நூலுக்கு-பொதுவுடைமை நூலுக்கு--5 இலட்சம் ரூபாய் நிதி;

வரும் ஆண்டுக்குள் 1408 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம்;

சத்துணவுச் சிறார்களுக்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்குகின்ற திட்டம்;

மூவலூர் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு;

கேளம்பாக்கம் அருகில் பெண் தொழில் முனைவோர்களுக்கு உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா; ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் 200 ரூபாயிலிருந்து, 4, 5 மாதங்களுக்கு முன்புதான் 300 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இப்போது 400 ரூபாயாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ள செய்தி; ஆதி திராவிடர்களுக்கு தொழில் நடத்த கடன் வழங்க தாட்கோ மூலம் வங்கிக்கு நிகராக ஓர் ஏற்பாடு;

பிற்பகல் 12-45

நெசவாளர் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து நல்ல முடிவு காண ஒரு குழு அமைப்பு;

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு நல வாரியம்;

நெசவாளர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற நலிந்த பிரிவினருக்கான ஓய்வூதியம் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்வு;

ஆஸ்பெஸ்டாஸ் தகடு, முதல்கட்டமாக சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி மற்றும் நெல்லையில் ஓலைக் குடிசைகளுக்கு மாற்றாக ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்த வீடுகள்;

சமத்துவபுரத்திற்கு 17.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சுதந்திரப் பொன்விழாவையொட்டி, 20 சதவிகித இட ஒதுக்கீடு போராட்டத்திலே உயிர்நீத்த சமூக நீதிக் காவலர்களுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகை; எவ்வளவு என்பதை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம், இன்னும் அதிகம் சேர்த்து இறுதியிலே அறிவிக்க இருக்கின்றேன். 30 இலட்ச ரூபாய்ச் செலவிலே தியாகிகள் மணி மண்டபம்; 50 இலட்ச ரூபாய்ச் செலவிலே தியாகி விஸ்வநாத தாஸ் இல்லம்; 50 இலட்ச ரூபாய்ச் செலவிலே பூலித்தேவன் நினைவுச் சின்னம்; 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம்; 15.50 இலட்ச ரூபாய்ச் செலவில் ஜீவா நினைவிடம்; 7.40 இலட்ச ரூபாய்ச் செலவில் நேதாஜிக்கு சிலை; அம்பேத்கர் மணி மண்டபம் தொடக்கம்; 84.94 இலட்ச ரூபாய் செலவில் 5 ஆண்டுகளாகப் பாழடைந்து கிடந்த வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு;

அரசு அலுவலர்களுக்கு 1-1-1996-லிருந்து மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதம், நகர ஈட்டுப்படி, இரட்டிப்பு வீட்டு வாடகைப்படி, மாநில அரசு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 40 விழுக்காடு ஊதிய உயர்வு; அலுவலர்-ஆசிரியர் ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகள் இருப்பின் அதைத் தீர்க்க ஒரு நபர் குழு. சென்னை மாநகரத்தை ஏ1 நகரமாக மாற்ற மத்திய அரசுக்குக் கோரிக்கை; உயிருக்குத் துணிந்து பணியாற்றும் காவலர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு விருது, பதவி உயர்வு, பொற்கிழி;

தேங்காய், கொப்பரை, பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப்பொருள்கள், மசாலாப் பொடி, ஐஸ்கிரீம், பட்டாணி மாவு போன்றவைகளுக்கு வரிக் குறைப்பு; சமையலுக்குப் பயன்படும் எண்ணெய்கள், காசினிக் கீரை, கணினி மென்பொருள்,



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகம் போன்றவற்றிற்கு முழுக்க வரி விலக்கு; இன்னும் சிலவற்றைச் சேர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுக்கு எல்லாம், என்னுடைய பேச்சின் இறுதிப் பகுதியிலே அவற்றைப் பற்றி விளக்குவேன். இவற்றையும், இவற்றிற்கு மேலாக வேறுபல நல்வாழ்வுத் திட்டங்களையும், தொலைநோக்குத் திட்டங்களையும் உள்ளடக்கித்தான் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது பெண்ணுக்கு எல்லா அலங்காரமும் செய்து பொட்டு வைக்க மறந்துவிட்டார், விட்டுவிட்டார் முதல்வர் என்று சொன்னார்கள். ஒருவேளை அது முஸ்லிம் பெண்ணாக இருக்குமோ என்று திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எண்ணக்கூடும். பொட்டு எவ்வளவு வைக்கப்பட்டது. பொட்டு ஒரு சீராகத்தான் வைக்கப்பட வேண்டும், நெற்றி முழுவதும் பொட்டு வைத்துவிட முடியாது. அப்படி வைத்தால் அது பொட்டாக இருக்காது. பொட்டு வைப்பதற்கும் துட்டு வேண்டியிருக்கிறது இப்போது இந்த அரசுக்கு என்பதை உணர வேண்டும். அதுபற்றியும் என் பேச்சின் இறுதியில் நான் கூற இருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை பற்றி ஆற்றிய உரை, அதிலே குறிப்பிட்ட சில செய்திகளைப் பற்றி விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். அவர்களும் கேட்டார்கள், இந்தப் பற்றாக்குறை பற்றி பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்கள்கூட ஐயப்பாடுகளை எழுப்பி இவைகளையெல்லாம் எப்படிச் சீர் செய்யப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அதிக அளவிற்குப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்றுகூட குறிப்பிட்டார்கள். நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 1989-90ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை மதிப்பீட்டுக் கணக்கில் 147.67 கோடி ரூபாயாக இருந்தது. பிறகு அது இறுதிக் கணக்கில், அந்த ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டுக் கணக்கில் பிளஸ் 9.39 கோடி ரூபாயாக ஆயிற்று. 1990-91 ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை மதிப்பீடு, நிகரப் பற்றாக்குறை 349.36 கோடியாக இருந்தது. பிறகு அது கணக்கில் ஒரு கோடி ரூபாய் பிளஸ் என்று ஆயிற்று. 1991-92-ல் இந்த நிகரப் பற்றாக்குறையினுடைய மதிப்பீடு 577.41 கோடி ரூபாயாக இருந்தது.

பிறகு கணக்கில் 577 கோடி அதிகமாகாமல் குற்றைந்து மைனஸ் 239.75 கோடி என்று ஆயிற்று. 1992-93-ல் 217.62 கோடி என்ற நிகரப் பற்றாக்குறையாக மதிப்பீட்டிலே இருந்து, பிறகு கணக்கிலே அது குறைந்து 34.23 கோடி என்று ஆயிற்று. 1993-94-ல் மதிப்பீட்டில் நிகரப் பற்றாக்குறை 359.95 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில் மைனஸ் 125.45 கோடி என்று ஆயிற்று. 1995-96-ல் நிகரப் பற்றாக்குறை ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் என்று மதிப்பீட்டிலே இருந்து, பிறகு கணக்கிலேகூட பிளஸ் 116.45 கோடி என்று ஆயிற்று. 1996-97-ல் இந்த ஆட்சி பொறுப்பேற்ற காலகட்டத்தில் நிகரப் பற்றாக்குறை 334.89 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில் பிளஸ் 15.91 கோடி என்று ஆயிற்று. 1997-98-ல், கடந்த நிதிநிலை அறிக்கையில் நிகரப் பற்றாக்குறை 498.38 கோடி என்று இருந்து திருத்த மதிப்பீட்டில் அது மைனஸ் 3.31 கோடி என்ற அளவிற்குக் குறைந்தது. இப்பொழுது, 1998-99-ல் நிகரப் பற்றாக்குறை 876.67 கோடி என்று இருக்கிறது. இந்த நிகரப் பற்றாக்குறை நாம் விதிக்க இருக்கின்ற வரிகளின் காரணமாக ஒரு 340 கோடி ரூபாய் குறைந்து, இறுதிப் பற்றாக்குறையாக 536 கோடி இருக்கும் என்று நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன், இந்த அறிக்கையில்.

இந்த அறிக்கை பற்றி நம்முடைய திரு. சொக்கர் அவர்கள் நிதிநிலை அறிக்கை எப்படி அமைய வேண்டும் என்ற அரிச்சுவடியிலே ஆரம்பித்து, நேரம் இல்லாத காரணத்தால் எண்ணெய் வரையிலே செல்லாமல், அவர்கள் தன்னுடைய ஓர் அரிய உரையை ஆற்றி இருக்கின்றார். அவர் உரையாற்றும்போது, நான் நினைத்துக் கொண்டேன். திரு. சுப்பராயன் சொன்னதைப்போல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் நிதிநிலை அறிக்கையைப்பற்றி--யாரும் தவறாகக் கருதிக்கொள்ளக்கூடாது-- அவ்வளவு முழுமையாகத் தெரிவதற்கு நியாயமில்லை. ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே, அவர்களுடைய கவலை எல்லாம், ஊருக்குத் திரும்பியதும் தொகுதியைப் பற்றி பேசினாயா, பாலத்தைப் பற்றி பேசினாயா, வாய்க்காலைப் பற்றி பேசினாயா என்ற இந்தக் கேள்விகளுக்குத்தான் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக அதைப்பற்றிப் பேசுகிறார்கள். இருந்தாலும் பொதுவாகப் பேசுகின்ற ஒரு நிலை இல்லை.

நம்முடைய ஜனநாயகத்திலே ஏற்பட்டுள்ள கோளாறு என்னவென்றால், நாடாளுமன்றம் எதற்காக இருக்கிறது, சட்டமன்றம்





எதற்காக இருக்கிறது என்பதை, தேர்ந்தெடுக்கப்படுகிற நாமும் உணர்ந்துகொள்வது இல்லை, நம்மைத் தேர்ந்தெடுக்கின்ற மக்களும் உணர்ந்துகொள்வது இல்லை. சட்டமன்றம் என்பது மக்களுடைய நல்வாழ்வுக்காக, திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, பணத்தை ஒதுக்குவதற்கு அனுமதி கொடுக்கின்ற, அதற்கான சட்டங்களை இயற்றக்கூடிய மன்றம்தான் சட்டமன்றம். அதைப்போலவே, அகில இந்திய அளவிலே, இதைப்போன்ற சட்டங்களை நிறைவேற்றவும், திட்டங்களை உருவாக்குவதற்கும் இருக்கின்ற மன்றம்தான் நாடாளுமன்றம். ஆங்காங்குள்ள மக்களுடைய குறைகளை அறியவும், அவைகளை நிறைவேற்றி வைக்கவும், திட்டங்களை நிறைவேற்றவும் பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்கள், மக்களுடைய பிரதிநிதிகளாகிய இவர்கள் பாடுபட வேண்டும். ஆனால், இப்பொழுது நிலைமை எப்படி ஆகியிருக்கிறது என்றால், உள்ளாட்சிமன்றத் தலைவர் செய்கிற தவறு எல்லாம் எம்.எல்.ஏ.-மீதுதான்; எம்.எல்.ஏ. செய்கிற தவறு எல்லாம் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்களே, அவர்கள் மீதுதான் என்கின்ற அளவிற்கு மக்கள் ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொரு செயலையும் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எம்.பி.-ஆக இருந்தால் என்ன, எம்.எல்.ஏ.-ஆக இருந்தால் என்ன, பஞ்சாயத்துத் தலைவராக இருந்தால் என்ன, உறுப்பினராக இருந்தால் என்ன, ஒன்றியத் தலைவராக இருந்தால் என்ன என்ற பாகுபாடு செய்து பார்க்காமல், எல்லோரையும் சமமாகக் கருதி--அந்தப் பக்குவம் வந்து இருக்கிறது நம்முடைய மக்களுக்கு--எல்லோரையும் சமமாகக் கருதுகின்ற பக்குவம் வந்து இருக்கின்ற காரணத்தால், இந்தக் கேள்விகளையே கேட்கிறார்கள். எனவே, அதிலேதான் நாம் அதிகக் கவனம் செலுத்தி, இந்த மன்றத்திலே பேசும்போதெல்லாம் எங்கள் ஊருக்கு ஒரு காவல் நிலையம் கொடுங்கள், எங்கள் ஊருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் கொடுங்கள், அந்த வட்டத்தை மட்டும் பிரித்தீர்களே, எங்கள் வட்டத்தைப் பிரித்துக்கொடுங்கள் என்பது போன்ற இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுகின்ற அளவுக்குத்தான் நிலைமை இந்த மன்றத்திலே இருக்கிறது.

பிற்பகல் 12-55

நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்கின்றேன். நிதிநிலையைப் பற்றி, வேறு பல துறைகளைப் பற்றி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து

கொள்ள வேண்டிய விஷயங்கள், என்னையும் சேர்த்து, மாண்புமிகு அமைச்சர்களையும் சேர்த்து, நிறைய இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள், அதை உணர்ந்தவர்கள் அவ்வப்போது யார் யார் ஆர்வத்தோடு விரும்புகிறார்களோ அவர்களுக்கு அத்தகைய வகுப்புக்களை நடத்தலாம், நடத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி நடத்துகின்ற நேரத்திலே, அதற்கான ஆசிரியர்களாக முன் வரிசையிலேயே சிலபேர் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். நான் ஒருவரைச் சொல்லி, ஒருவரைச் சொல்லாவிட்டால், நம்மை ஆசிரியர் பதவிக்கு உயர்த்தமாட்டாரா என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. எனவே, அவர்களெல்லாம் அந்தப் பணியைச் செய்கின்ற வகையிலே நம்முடைய சொக்கர் அவர்கள் பேசிய நேரத்திலே, நான் அப்படித்தான் எண்ணிக் கொண்டேன். ஏற்கெனவே இந்தத் திட்டம் இருக்கிறது. இருந்தாலும், அதைச் செயல்படுத்துவதற்கான ஒரு ஊக்கத்தை அவர்களுடைய பேச்சு இன்றைக்கு ஏற்படுத்தியது என்று நான் கூற விரும்புகின்றேன்.

இந்தப் பற்றாக்குறையை எப்படியெல்லாம் நீங்கள் நிறைவு செய்வீர்கள் என்கின்ற ஆதங்கத்தோடு, ஒரு எதிர்ப்பு உணர்வோடு அல்ல, நம்முடைய தம்பி திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டார்கள். அவரேகூட இன்னின்ன வழிகளில் நீங்கள் நிறைவு செய்யலாம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். வரவேண்டிய பல நிலுவைகளையெல்லாம் நாம் வசூலிக்க வேண்டியதிருக்கிறது. விற்பனை வரியிலே மாத்திரம், தடையுத்தரவுக்கு உட்படாத, வசூலிக்கத்தக்க விற்பனை வரித் தொகை 331 கோடி ரூபாய் நிலுவையிலுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், ஐ.எம்.எஃப்.எல். இருக்கிறதே, இந்தியாவிலே தயாரிக்கின்ற வெளிநாட்டு மது. 1981 ஆம் ஆண்டிலேயிருந்து அந்த அதிபர்கள் 12-2-1989 முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய். ஐ.எம்.எஃப்.எல். அதிபர்கள் இருக்கிறார்களே, உற்பத்தியாளர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க





நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1989-லே ஆட்சியிலே இருந்தபோது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் அந்த நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே, அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து, உச்சநீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கேயும், உச்சநீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றதே தவிர, அதற்கு இடைக்காலத் தடையாணை பெறப்படவில்லை. எல்லோருக்கும் தெரியும். இடைக்காலத் தடையாணை பெறப்படாவிட்டால் அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால், அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னருடைய ஆட்சி அமைந்த நேரத்தில் மாண்புமிகு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆளுநராக இருந்தார்கள். அவர்கள் அந்த வரியை வசூல் செய்வதைத் தள்ளிப் போட்டார்கள். அதற்கு அவர்கள் கோப்பிலே எழுதிய காரணம், 'உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகவே, இப்போது வசூலிக்க வேண்டாம் என்று திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் எழுதிவிட்டார்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அப்படி எழுதிவிட்டார்கள். எழுதிவிட்ட பிறகு, தடை கிடையாதே என்று எடுத்துச் சொல்லியும்கூட, அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல், எப்படியோ வழக்கு இருக்கிறது, வழக்கு முடியட்டும் என்று அவர்கள் எழுதிவிட்டார்கள்.

அதன் பிறகு, 1991-ஆம் ஆண்டு புதிய ஆட்சி வந்தது. அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய தலைமையிலே புதிய ஆட்சி அமைந்தது. அப்படி அமைந்தபோது கவர்னர் அவர்களால் இதை வசூலிக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்ட அந்தக் கோப்பு, உடனடியாக முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நிதியமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 31-7-1991-ல் கையெழுத்திட்டு அந்தக் கோப்பினை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தார்கள். முதலமைச்சர் அந்தக் கோப்பைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம், 4 மாதங்கள் 19 நாட்கள் கழித்து அதிலே கையெழுத்திட்டார்கள். 57 கோடி ரூபாய் வசூல் ஆகவேண்டிய ஒரு கோப்பில் நாவலர் நெடுஞ்செழியன், நிதியமைச்சர் அவர்கள் உடனடியாகக் கையெழுத்திட்டு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பியதற்குக் காரணம் கவர்னர் இப்படிச் சொல்லியிருக்கிறார், நீங்கள் என்ன

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

சொல்கிறீர்கள் என்று ஒரு Information அவருக்கு அனுப்புகிறார். ஆனால் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், ஒரு வருடம், 4 மாதம், 19 நாள் கழித்து, எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்காமல் அந்தக் கோப்பிலே கையெழுத்து போடுகிறார். ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால், அந்த விற்பனை வரி 57 கோடி ரூபாய் வசூல் ஆகாமலே இருந்துவிடுகிறது.

பிற்பகல் 1-00

இப்போது மீண்டும் 1996-ல் நாம் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தக் கோப்பு எங்கெங்கோ சுற்றி, கடைசியாக வேறு வழியில்லாமல் என்னிடத்தில் வந்து சேர்ந்தது. நான் உடனடியாக அந்த நிலுவை வரியை வசூலிக்க வேண்டுமென்று ஆணையிட்டேன். ஏனென்றால், உச்ச நீதிமன்றத்தினுடைய தடையில்லை; வசூலிப்பதற்குத் தடை இல்லாதபோது வசூலித்தால் என்ன என்று 57 கோடி ரூபாயை வசூலிக்க ஆணை பிறப்பித்தேன். ஆணை பிறப்பித்தபிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்துவிட்டது. அந்த வரியை வசூலிக்கலாம், உற்பத்தியாளர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்று வந்துவிட்டது. ஆனால், உற்பத்தியாளர்கள் தற்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து City civil court-ல் ஒரு தடையாணையைப் பெற்று இருக்கிறார்கள். அதை எதிர்த்து நாம் வழக்காடிக் கொண்டிருக்கிறோம். திருநாவுக்கரசு சொன்னதற்காக சொல்கிறேன்: எப்படி 57 கோடி ரூபாய் எவ்வளவு காலமாக வசூலிக்கப்படாமலேயே கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆனால், இந்த அரசு அவைகளை எல்லாம் தள்ளிப் போடாமல், அந்த நிலுவைகளையெல்லாம் நிச்சயமாக வசூலித்து, இந்தப் பற்றாக்குறையை நிச்சயமாகச் சரிக்கட்டும் என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கின்றேன்.

இன்னொன்றை திருநாவுக்கரசு அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். 1995-96-ல், 35 சதவிகிதமாக இருந்த பொதுவான பணிகளின் செலவு இந்த 1998-99-ல், 46 சதவிகிதமாக உயர்ந்து விட்டது என்று கூறினார். சொல்லும்போதே அவர்கள், 'செலவு' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் இந்தச் சதவிகிதத்தை செலவினங்களிலே பார்க்கக் கூடாது. எப்போதும் வருவாய்க் கணக்கிலே மொத்த செலவினத்திலே இந்த சதவிகிதம் பார்க்க



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

வேண்டும். ஆனால், அவர்கள் வருவாய்க் கணக்கிலே இந்த ரூபாய் 15 ஆயிரம் கோடியிலேயே பார்த்து விட்டார்கள். செலவான ரூபாய் 18 ஆயிரம் கோடியிலேதான் சதவிகிதம், எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதுதான்; யார் யாருக்கு எவ்வளவு சதவிகிதம் செலவு செய்கிறோம் என்று பிரித்துப் பார்க்க முடியும். அப்படிப் பார்க்காமல் திருநாவுக்கரசு அவர்கள் வருவாய்க் கணக்கிலே மொத்த வருவாயிலிருந்து சதவிகிதக் கணக்கைப் பார்த்திருக்கிறார்கள். அதனால் இந்த அளவிற்கு அதிகமாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. உண்மையிலே பார்க்க வேண்டுமென்றால், 1995-96-ல் பொதுவான பணிகளுக்கு ஒதுக்கீடு 31.24 சதவிகிதம், 1997-98-ல் ஒதுக்கீடு 4686.64 கோடி ரூபாய், 31.46 சதவிகிதம், 1998-99-ல் ஒதுக்கீடு 6937.9 கோடி ரூபாய், 38.44 சதவிகிதம். எனவே, பொதுவான பணிகளில் செலவினம் மொத்த வருவாய்ச் செலவில் 38.44 சதவிகிதம்தான். அவர் கூறியதுபோல், 46 சதவிகிதம் அல்ல. இருந்தாலும்கூட, அதிகரித்து இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன்; அதை மறுக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கான ஓய்வூதியத் தொகைக்கு மாத்திரம் 1,153 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசு, வங்கி இவைகளுக்கான கடன்களுக்கு வட்டி கொடுப்பதற்குத் தொகை 722 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மேலும், அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதத்தை 1-1-1996 என்று கணக்கிட்டு மாற்றி அமைப்பதால் ஏற்படும் நிலுவைத் தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கூடுதல் தொகையும் இந்தக் கணக்கின்கீழ் செலவு அதிகரிப்பதற்கான காரணம் ஆகும் என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். வெளியிலே அந்தக் குற்றச்சாட்டு ஏடுகளில் வந்திருக்கிறது. அதற்கு நான் பதில் சொல்லியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தவறான கருத்து, இந்த அரசைப் பற்றி வந்துவிடும். தவறான கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக, டாக்டர் கிருஷ்ணசாமி அதைச் சொல்லியிருக்க மாட்டார். ஒரு ஆர்வத்தின் காரணமாக, ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் செய்ய வேண்டும் என்ற உணர்வின் காரணமாக அவர் சொன்ன அந்தப் புள்ளிவிவரம், இந்த நிதிநிலை அறிக்கையில் 2.9 சதவிகிதம் மாத்திரமே ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. குறைந்தபட்சம் அவர்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு நான் அவருக்குத் தருகின்ற விளக்கம், ஆதிதிராவிட மக்களுக்கும் தருகின்ற விளக்கம் நம் வரவு-செலவுத் திட்டத்திலே, செலவினங்களில் அதிகமான செலவுகள் அரசு அலுவலர்கள். அவர்களுடைய சம்பளம் மற்றும் பணியாளர்கள் தொடர்பாக ஏற்படும் ஏனைய செலவுகள் என்பதை மறந்துவிடக்கூடாது. அரசு அலுவலர்கள் என்று கூறும்போது, அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அலுவலர்களும் அதிலே இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

பிற்பகல் 1-05

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே அரசு அலுவலர்களுடைய ஊதியத்திற்கு ஒதுக்கீடு 10,300 கோடி ரூபாயாகும். மேலும், நிதிநிலை அறிக்கையிலே வட்டி, கடன் போன்ற செலவினங்களுக்காக சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு மானியம் மற்றும் ஏனைய மானியங்களுக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது. இந்த மானியங்களால், ஆதி திராவிடர்களும் மற்றும் பழங்குடி மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும்தான் பயன்பெறுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, தனியாக 2.9 சதவிகிதம்தான், ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்று இல்லாமல், பொதுவாக ஒதுக்கப்படுகிற நிதி எல்லாம், செலவிடப்படுகிற நிதி எல்லாம் அவர்களுக்கும் சேர்த்துத்தான் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

இதைத்தவிர, மின்சாரம், நீர்ப்பாசனம், சாலைப் போக்குவரத்து போன்ற பல துறைகளில் செலவிடப்படும் செலவினங்களை ஆதிதிராவிடர்களுக்கு என்று பிரித்துக் காட்ட இயலாது. அதையும் சேர்த்துத்தான் செலவு செய்கின்றோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், நமக்கு நாமே திட்டமானாலும், சமத்துவபுரம் திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் போன்ற பல ஊரக வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள் போன்றவைகளில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களும் பயன் பெறுகிறார்கள். ஆதி திராவிடர்களுக்கு மாத்திரமே பயன் அளிக்கும் வகையில், செயல்படுத்துகிற திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாத்திரம்தான், நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. மொத்தத்திலே



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

செலவழிக்கப்படுகிற தொகையில், ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கும், அவை நிச்சயமாகப் போய்ச் சேருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், கடந்த ஆளுநர் உரையில் பேசும்போது ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். இப்போது எனக்குள்ள ஒரு சிறிய சங்கடம் என்னவென்றால் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதான கட்சித் தலைவர்கள் எல்லாம் நான் பதில் உரையாற்றுகின்ற நாளிலேயே பேசுவதால், அதற்குரிய பதில்களை, விளக்கங்களை உடனடியாகப் பெற்று, அவையிலே அறிவிக்க முடியவில்லை. எனவே, அடுத்த தடவையாவது, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் போன்ற தலைவர்கள் எல்லாம் ஆற்றுகின்ற உரைகளை முதல் நாளே அமைத்து, நான் பதில் சொல்லுகின்ற நாள் என்று தனியாக விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், அவர்களுடைய கேள்விகளுக்கு, அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு, எடுத்துக்காட்டுகிற குறைகளுக்கு உடனடியாக அவையிலே விளக்கம் அளிக்க முடியாமல் போய்விடும் என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. அவர்கள் சொன்னார்கள். ஒரு காசோலையினுடைய பட்டியலை, ஒரு தாளிலே ஒட்டப்பட்ட காசோலைகளை எல்லாம் எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். நானே அதைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தேன். மேல்மலையனூர் ஒன்றியம், வெள்ள நிவாரணம் வழங்கியதில், காசோலைகள் திருத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டு அது. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள பெருவளூர் கிராம விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்ட காசோலைகள், வங்கியிலே போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது என்றும், அதனால் விவசாயிகள் சிரமப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டார்கள். இதில் உண்மை என்னவென்றால், 1996-லே ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணங்கள் வழங்க விழுப்புரம் மாவட்டத்திற்கு 8.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 8.49 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, மொத்தம் 1,86,136 விவசாயிகள் பயன் அடைந்து இருக்கிறார்கள். மேல்மலையனூர் ஒன்றிய வேளாண் வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். ராமச்சந்திரன், அரசின்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

நிதி ஒதுக்கீட்டிற்கு மிகையாக, நிலம் இல்லாதவர்களுக்கும், தகுதியில்லாதவர்களுக்கும், பட்டாப் புத்தகத்தில் பெயர் இல்லாதவர்களுக்கும், காசோலைகளை வழங்கி, முறைகேடுகள் செய்துள்ளதாகப் புகார்கள் வந்ததைத் தொடர்ந்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், 54,20,907 ரூபாய் மதிப்புள்ள 6,508 காசோலைகள் நிவாரணம் பெறுவதற்குத் தகுதியே இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த முறைகேடுகளுக்குக் காரணமான வேளாண்மை வளர்ச்சி அலுவலர் ராமச்சந்திரன், 31-3-1997 அன்றைக்கே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். சென்ற ஆண்டிலேயே அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். அதற்குப் பிறகு, இந்தக் குற்றச் சாட்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர்கள் அதை இங்கே வெளியிட்டதற்காக நன்றி. அதன்காரணமாக நடைபெற்ற ஒரு குற்றத்தை உணர்ந்து, அதற்கு எடுக்கப்பட்ட தண்டனையையும் புரிந்துகொள்ள முடிந்தது. அங்கேயே பல பிரச்சினைகள், ரூ.3000 அங்கே வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் ஹைகோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். அந்த ஹைகோர்ட்டினுடைய உத்தரவை அரசு செயல்படுத்துவதாகவும் வாக்குறுதி வழங்கியிருக்கிற விவரத்தை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-10

குறிப்பாக, இந்த மோசடி நிதி நிறுவனங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. பொதுமக்களால் வைப்பீடு - டெபாசிட்- செய்யப்படும் தொகைக்கு மிக அதிகமான அளவிலான வட்டி விகிதம் அளிப்பதாகவும், கவர்ச்சிகரமான பரிசுகளை அளிப்பதாகவும் விளம்பரம் செய்து, அதன்மூலம் பெரும்தொகையை வைப்பீடாகப் பெற்றுக்கொண்டு விளம்பரப்படுத்தியவாறு வைப்பீட்டாளர்களின் முதலீட்டையும், அதற்கான வட்டித் தொகையையும் அவர்களுக்கு திருப்பித் தராமல் நிதி நிறுவனங்களை மூடிவிட்டு அந்த அதிபர்கள் தலைமறைவாகிவிட்டார்கள். இதையெல்லாம் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்தத் தகவல்களையெல்லாம் முற்றாக அறிந்து உடனடியாகச் செயல்படத் தொடங்கி அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டு, தனி நீதிபதிகளைக் கொண்டு, தனி நீதிமன்றங்களைக் கொண்டு அவர்களையெல்லாம் விசாரித்து, உடனடியாக, இழந்தவர்களுக்கு



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

அவர்கள் இழந்த சொத்துக்களைத் திருப்பித் தரவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு சிறப்பு நீதிமன்றம் 19-1-1998 முதல் செயல்படத் தொடங்கியிருக்கின்றது. மேற்சொன்ன சட்டம் தொடர்பான பிற மாவட்டங்களிலுள்ள எல்லா வழக்குகளையும் சென்னையிலே இயங்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய 14-2-1998 அன்று அனைத்து மாவட்ட நீதிபதிகளையும் உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, வழக்குகள் மாற்றப்பட்டு உடனடியாக சிறப்பு நீதிமன்றம் தன்னுடைய விசாரணையைத் தொடங்கும் என்றும், தவறு செய்தவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இந்த மாமன்றத்திற்கு நான் உறுதி கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில குற்றச்சாட்டுகளை, போகிற போக்கில்-- சில விஷயங்களை வேடிக்கையாகவும், அதேநேரத்தில் இப்படியும் இருக்குமா என்று வியப்படையக்கூடிய வகையிலே நம்முடைய தாமரைக்கனி அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்வது உண்டு. இந்த குண்டுவெடிப்பு சம்பந்தமாக, அன்றைக்கு விவாதம் வந்தபோது அவர்கள் சொன்னார்கள், ஆயிஷா என்ற அந்தப் பெண் ரூ. 10 இலட்சத்தை அவருடைய தாயாரிடத்திலே கொடுத்து வங்கியிலே போட்டிருப்பதாகச் சொன்னார்கள். பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. நானும் உடனடியாக அதுபற்றி விசாரிக்கப்படும் என்று சொன்னேன். உடனடியாக காவல் துறைக்கு ஆணையிட்டு அதை விசாரிக்கச் சொன்னேன். அவர்கள் தந்துள்ள தகவலின்படி மம்சாபுரத்திலேயுள்ள யூ.கோ. வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை வங்கி ஆகியவற்றில் விசாரிக்கப்பட்டபோது, சங்கீதா பேரில் கணக்கு எதுவும் இல்லை என்றும், அவர்கள் பெற்றோர் பேரிலும் பணம் ஏதும் போடப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. மேலும், திருவில்லிபுத்தூரிலுள்ள 4 வங்கிகளிலும், சிவகாசிப் பகுதியிலே உள்ள 14 வங்கிகளிலும் இதுபற்றி விசாரணை நடத்தப்பட்ட போதிலும், இந்தத் தகவல் சரியானதல்ல என்று தெரிய வந்துள்ளது. சங்கீதாவினுடைய பாட்டனார், தந்தை, பெரியப்பா ஆகியோர் வங்கிகளில் பல்வேறு தேதிகளில் விவசாயத்திற்காகக் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்று மாத்திரம்தான் தெரிய வந்திருக்கின்றது. தாமரைக்கனி அவர்கள் (சிரிப்பு)--இதிலே சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. அவருக்குத் தெரியாமல் தகவல் வந்திருக்கலாம். தாமரைக்கனி இதற்கு மேலும் விவரம் தெரிவித்து, எந்த வங்கியிலே

போட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பையும் சுட்டிக்காட்டுவாரேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்து அந்தத் தொகையும் மீட்கப்படும் என்ற விவரத்தை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே. இன்னொன்றையும் சொன்னார்கள். செண்பகத்தோப்பிலே கோவிந்தசாமி நாடாருக்குச் சொந்தமான ஒரு கிணற்றிலே வெடிபொருட்கள் போடப்பட்டுள்ளன என்ற ஒரு தகவல் இங்கே கூறப்பட்டது. அதையும் காவல்துறையை விட்டு விசாரணை நடத்தச் சொன்னேன். அந்தக் கிணற்றில் வெடிபொருட்கள் எதுவும் இல்லை என்றும். அந்தக் கிணற்றின் சுற்றுப்புறங்கள் எல்லாம் சோதனை செய்யப்பட்டதில் வெடிபொருட்கள் எதுவும் இல்லை என்றும், கிணற்றின் சுற்றுச்சுவர் வலுவற்றதாக இருந்ததால் சுவர் இடிந்து கிணற்றுக்குள்ளே விழுந்ததாகத் தெரிவதாகவும் போலீசார் எனக்கு விவரம் கூறினார்கள். அதனாலே. கிணற்றுக்குள்ளே வெடிகுண்டு இல்லையென்று சொல்லமாட்டேன். எத்தனேயோ கிணறுகளில் வெடிகுண்டு இருந்து கண்டுபிடிக்கப்படுகிறது. அவற்றையெல்லாம் கண்டுபிடிப்பதற்காகத்தான் போலீசார் இன்றைக்கு அயராத முயற்சிகளிலே ஓய்வு இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். எனவே. வெடிகுண்டு கண்டுபிடிப்பதே இன்றைக்கு ஒரு பெரிய குற்றம் என்று அரசியல்வாதிகளால் நாட்டிலே பேசப்படுகிறது. வெடிகுண்டுகளைப் போலீசார் கண்டுபிடித்தார்கள். கேரளா வரையிலும் சென்று அங்கே உள்ளவர்களையெல்லாம் கைது செய்தார்கள். இந்த வெடிகுண்டு தீவிரவாதத்திற்கு யார் யார் காரணமோ அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பின்னப்படுகின்ற சதிவலையை நல்லமுறையிலே ஆராய்ந்து அறிவித்துக்கொண்டிருக்கிற போலீசாரைப் பாராட்டுவதற்குப் பதிலாக. அவர்கள்மீது குறை சொல்லப்படுகிறது. எங்கு பார்த்தாலும் குண்டுகளா என்று கேட்கிறார்கள். எடுக்காவிட்டாலும் குற்றம்; எடுத்தாலும் குற்றம் என்ற நிலையிலே இன்றைக்கு அரசியல் போய்க் கொண்டிருக்கிறது. நான் அதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை. இந்த அவையிலே அதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கின்றோம். ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் பேசினார்கள். அதேபோல. நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். அப்பாவி முஸ்லீம்கள் எல்லாம் இந்த விவகாரத்திலே கைது செய்யப்படுகிறார்கள் என்று





சொன்னார்கள். அப்படி வருகின்ற புகார்கள், குற்றச்சாட்டுகள், உடனடியாகக் கவனிக்கப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள்.

பிற்பகல் 1-15

நம்முடைய நண்பர் அப்துல் சமது அவர்கள்கூட ஓர் உருக்கமான, கடிதத்தை எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அப்பாவிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற செய்தியை அதிலும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். வேறு சில இஸ்லாமியப் பெரியவர்களும் எனக்குத் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் இதைத் தெரிவித்திருக்கின்றார்கள். அன்று மிகுந்த உணர்ச்சியோடு, உருக்கத்தோடு, லத்தீப் அவர்கள் இங்கே பேசினார்கள். அதே உணர்ச்சியும். உருக்கமும் எனக்கும் உண்டு என்பது அவர்களுக்கும் தெரியும், இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். இதுபோன்ற குற்றவாளிகளை. தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்காகக் காவல் துறையினர் ஈடுபடுகிற நேரத்தில் சிலநேரங்களில் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நல்லவர்கள்கூடச் சிக்கி விடுவது உண்டு. விவரம் தெரிவிக்கப்பட்டால், உண்மை உணர்ந்தால், அவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவார்கள். திருச்சி சிறையிலேகூட, அறந்தாங்கி பகுதியைச் சேர்ந்த 5, 6 இளைஞர்கள் அங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அன்று மாலையே உடனடியாக திருச்சி சிறைச்சாலைக்குத் தொடர்புகொண்டு, காவல் துறைக்குத் தொடர்பு கொண்டு, அவர்களை விடுவிக்கச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கின்றேன் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே. அப்பாவிகளைத் துன்புறுத்த வேண்டுமென்பதில்லை. எனக்கு அல்ல, திராவிட இயக்கத்திற்கு, இந்த இயக்கத்தை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கு, பெரியார் வழிவந்து இந்த இயக்கத்தை வழி நடத்திய தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு. அவர் வழி நின்று இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டு இருக்கின்ற எங்களுக்கெல்லாம், சிறுபான்மை சமுதாயத்தின்மீது, இஸ்லாமியர் என்றாலும், கிறிஸ்துவர் என்றாலும், இத்தகைய சிறுபான்மை சமுதாயத்தினர்மீது உள்ள அக்கறையும், அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வமும் யாரும் உணராதவைகள் அல்ல. என்னைப் பொறுத்தவரையிலே, இளமைக் காலத்திலேயே திருவாரூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மகாநாட்டிற்குத் தொண்டர் படைத்

துணைத் தலைவனாக இருந்தவன் நான். தாருல் இஸ்லாம் பத்திரிகையை அன்றைக்குத் தவறாமல் வாங்கிப் படிக்கக் கூடியவன் நான். அறிஞர் அண்ணா அவர்களையும், நம்முடைய பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் நான் முதன்முதலாக திருவாரூர், விஜயபுரத்தில் நடைபெற்ற சிக்கந்தர் விழாவில்தான், ஒரு முஸ்லீம் பெருமகனாருடைய விழாவிலேதான் அவர்களைச் சந்தித்தேன். பேராசிரியரை அழைத்து வந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவனாக இருந்த பேராசிரியரை அண்ணா அவர்கள் அங்கே அறிமுகப்படுத்தி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து ஒரு மாணவனை அழைத்து வந்திருக்கிறேன், எனக்கு முன்பு அவர் பேசுவார் என்று சொல்லி, அவரைப் பேசச் சொன்னார்கள். அந்த சிக்கந்தர் விழாவிலேதான் நான் அண்ணாவைச் சந்தித்தேன், பேராசிரியரைச் சந்தித்தேன். இப்படி இளமைக்காலம் தொட்டு இந்தத் திராவிட இயக்கத்திலே உள்ளவர்களுக்கு, இஸ்லாமிய சமுதாயமானாலும், கிறிஸ்துவ சமுதாயமானாலும், சிறுபான்மை சமுதாயத்தினிடத்திலே ஓர் அன்பு அனுதாபம், ஆதரவு மனப்பான்மை என்றைக்கும் உண்டு. அதற்காக, பெரும்பான்மை சமுதாயமாக இருக்கின்ற இந்து என்று சொல்லப்பட்டாலும், சைவர் என்று சொல்லப்பட்டாலும், வைணவர் என்று சொல்லப்பட்டாலும், முஸ்லீம் அல்லாத மக்களிடத்திலே எங்களுக்குப் பற்று இல்லாமல் போய்விட முடியுமா? முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எப்படி முஸ்லிம் அல்லாதவர்கள் மீது வெறுப்பு ஏற்பட முடியும்? சிலர்கூடக் கேட்டார்கள்; அங்கே போய் கஞ்சி குடிக்கிறாயே நாங்கள் கூப்பிட்டால், கணபதி விழாவிற்குக் கூப்பிட்டால் கொழுக்கட்டை சாப்பிட வருவாயா என்று கேட்டார்கள். கூப்பிட்டுப் பாருங்கள் வருகிறோமா இல்லையா என்று, நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல கொழுக்கட்டையாக இருந்தால் சாப்பிட ஏன் மறுக்கப் போகிறோம்? (மேசையைத் தட்டும் ஒலி) கூப்பிடுவதில்லை. கூப்பிட்டால் வருவாயோ, வரமாட்டாயோ என்று, எங்களை ஒரு பக்கம் தள்ளிவிடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமானாலும், திராவிட இயக்கமானாலும், திராவிடர் கழகமானாலும், நாங்கள் சிறுபான்மைச் சமுதாயப் பிரச்சினைகளிலே இன்றைக்கு மதச்சார்பற்ற அரசு வேண்டும், மதச்சார்பற்ற கொள்கை வேண்டும் என்று சொல்கின்ற இங்கேயிருக்கின்ற யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும், என்ன சொல்கிறோம்? சிறுபான்மையினர், பெரும்பான்மை சமுதாயத்தை மதித்து நடக்க வேண்டும்.





அதேபோல், பெரும்பான்மை சமுதாயத்தினர், சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்து, ஆதரித்து, அனுதாபம் காட்டி நடக்க வேண்டும். இப்படி இருவருமே நடந்துகொண்டால் பிரச்சினையே கிடையாதே. எனவேதான், இந்தக் குண்டுவெடிப்புகள் ஏற்படுவதற்கான மூலக் காரணங்களையெல்லாம் இன்றைக்கு நான் ஆராய்ந்து கொண்டிருக்க விரும்பவில்லை. அதைப்பற்றி ஐ.ஜி. தலைமையில், ஒரு திறமையான ஐ.ஜி. தலைமையிலே வெகு தீவிரமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது; பல குற்றவாளிகள் பிடிபட்டிருக்கின்றார்கள், நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

இதை ஏன் முதலிலேயே செய்யவில்லை என்று கேட்கின்றார்கள். எத்தனையோ காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதே இடத்திலேதான் அண்ணா அவர்கள் நின்றுகொண்டு சொன்னார்கள். சில காரியங்கள் மின்னல் வேகத்திலே நாட்டிலே நடைபெற்று விடுகின்றன. மின்னல் எப்போது தோன்றும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அப்படித் தோன்றிய நிகழ்ச்சிகளை அவை நடைபெற்ற பிறகு இனித்தோன்றாமல் இருப்பதற்காக நாங்கள் சென்று நடவடிக்கை எடுக்கிறோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். கோவையிலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்று இருந்ததால் இந்த அவையிலே விளக்கியிருக்கின்றேன்; மத்தியப் புலன் ஆய்வுக் குழுவின் சார்பாக எங்களுக்குத் தகவல் வந்தது. அதற்கு முன்பே மாநிலப் புலன் ஆய்வுக் குழு இந்தத் தகவலை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. இப்படி வரிசையாக வந்த தகவல்களை எல்லாம் நாங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பியிருக்கின்றோம். கோவை மாவட்டத்திற்கும், கோவை மாநகரத்திற்கும் அனுப்பியிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து, எல்லா மாவட்டங்களிலுமுள்ள போலீஸ் அதிகாரிகள் ஆங்காங்குள்ள குண்டுகளை எல்லாம் சோதித்து, சேகரித்து அதனுடைய கணக்கு விவரங்களை எல்லாம் அனுப்பி, வைத்திருந்தவர்களை எல்லாம் கைது செய்து, அவர்கள் மீதெல்லாம் வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால், கோவைக்குப் பல கடிதங்கள் எழுதியும்கூட, பல தாக்கீதுகள் அனுப்பியும்கூட, தொலைபேசியிலே நானே நேரிலே பேசியும்கூட கோவையிலே உள்ள அதிகாரி தவறிப்போய் அப்படி குண்டு எதுவும் இல்லை என்கின்ற செய்தியை எழுத்துபூர்வமாகத் தருகிறார் என்றால்,

அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா, வேண்டாமா? அங்கேயும் முதலமைச்சரே போய், ஏன் குண்டைத் தேடிப் பார்க்கவில்லை, முதலிலேயே உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது என்று கேட்டால், அது வேண்டும் என்றே அரசியல் நடத்துகின்ற பாங்கே தவிர வேறு அல்ல. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான், நம்முடைய நண்பர் தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்த ஆயிஷா பற்றிய தகவல், மேலும் விவரங்கள் இருந்தால் அவர் அதைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிட்டால், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், ஆயிஷாவை விரைவிலே பிடிப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளிலும் நம்முடைய காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றியது பற்றிய முடிவுகளை, ஒருசில விளக்கங்களை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தால், அளிக்க விரும்புகின்றேன். நான் அரசு அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள், அவர்களுடைய பிரதிநிதிகளை எல்லாம் தனித்தனியாகவும், ஒன்றாகவும் அழைத்து வைத்து, 2 நாள், கிட்டத்தட்ட 8 மணி நேரம் அவர்களோடு பேசி, அவர்கள் ஏற்றுக்கொண்ட வகையிலேதான் இந்த அவையில் நான் அந்த அறிவிப்பை நிதிநிலை அறிக்கையிலே செய்திருக்கிறேன். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கணேசன் அவர்கள் இங்கே பேசும்போது, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுடைய வேதனைகளையும், இந்தநேரத்திலே இவர்களுக்கெல்லாம் இவ்வளவு ஊதிய உயர்வு தருகிறோமே என்கின்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்கள். வெளிப்படுத்திவிட்டு இன்னொன்றைச் சொன்னார்கள். இவ்வளவு ஊதியத்தைப் பெறுகின்ற அரசு அலுவலர்கள் ஒழுங்காகச் செம்மையாகப் பணியாற்ற வேண்டாமா, தவறு செய்கிறார்களே என்று கேட்டுவிட்டு மிக ஜாக்கிரதையாக 'நான் எல்லோரையும் சொல்லவில்லை' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அந்தக் கருத்தோடு ஒத்துப்போகிறேன். ஆனால் ஒன்று. திட்டங்களுக்குச் செலவு குறைவு. அரசு ஊழியர்களுக்கு ஊதியம் அதிகம் என்று யாரும் எண்ணிக்கொள்ளக்கூடாது. திட்டங்களும், அரசு ஊழியர்களும் சேர்ந்துதான் இருக்கிறார்கள்.





என்னுடைய வீட்டுக்கொல்லைப்புறத்திலே ஒரு கிணறு வெட்டுகிறேன் என்றால் அதற்காக நான் 10,000 ரூபாயைச் செலவழிக்கிறேன் என்றால், அந்த 10,000-த்தைத் தூக்கிக்கொண்டு போய் கொல்லையிலே போட்டால் கிணறு வந்துவிடாது. அந்தக் கிணறு தோண்டுவதற்கு ஆள், செங்கலை அடுக்குவதற்கு ஆள், அந்தச் செங்கல் அடுக்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு கிணற்றிலே சகடை போடுவதற்கு ஆள், கயிறு வாங்க ஆள், அதிலே குடத்தைத் தொங்கவிட்டு தண்ணீர் எடுக்க ஆள் என்று இத்தனை ஆட்கள் வேண்டும். அவ்வளவு பேர்களுக்கும் சம்பளம் கொடுத்தால்தான் கிணற்றுக்குள்ளே இருக்கிற தண்ணீர் வெளியே வரும். எனவே, இந்த அரசு ஊழியர்கள், அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் என்பது, ஒரு கிணறு தோண்டுவதற்கு நம்முடைய கொல்லையிலே நாம் முயற்சி எடுக்கும்போது, பணத்தைப் போட்டால் எப்படி கிணறு வந்துவிடாதோ, பணத்தை யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் கிணறு உருவாகுமோ, அதைப்போல அரசு ஊழியர்களுக்குத் தொகையைத் தருகிறோம். அதை, அவர்கள் சில நேரங்களிலே கொஞ்சம் அதிகமாகக் கேட்கிறார்கள். அது அவர்களுடைய உரிமை. மத்தியிலே உள்ள அரசு கொடுப்பதைப்போல எங்களுக்கும் கொடு, என்று ஒரு கோரிக்கையை வைத்து நீண்டநாள் போராடினார்கள். 1989 ஆம் ஆண்டிலே இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, மத்திய அரசைப்போல மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்படத் தொடங்கியது. இந்த அரசு தான், தமிழகத்திலே முதன் முதலாக அந்தப் பணியைச் செய்தது என்பதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதற்குப் பிறகு இப்பொழுது இந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளைச் செயல்படுத்துவதிலும் மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றும் என்ற உறுதிமொழியை இந்த அவையிலே நான் அறிவித்திருந்தேன். அதற்கு ஏற்ப, மத்திய அரசின் ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கும்போது ஒருசில பிரிவுகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு தமிழகத்தில் தற்போது வழங்கப்படும் ஊதியம், மத்திய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட அதிகம் என்பதை மறந்து விடக்கூடாது. அது அவர்களுக்கே தெரியும். சில ஊதியங்கள் மத்திய அரசு வழங்குகின்ற ஊதியத்தை விட மாநில அரசு ஊழியர்களுக்கு அதிகமாக இருக்கிறது. எனவே, மத்திய அரசு அலுவலர் ஊதிய விகிதத்தை அப்படியே நாமும் கடைப்பிடித்தால், அவர்கள் தற்போது பெற்றுக்கொண்டிருக்கிற

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

ஊதியத்தை விடக் குறைவாகப் பெறக்கூடிய நிலைமை ஏற்படும். மத்திய அரசு ஊதியத்தையே தருகிறோம் என்று சொன்னால், இப்போது அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஊதியத்தைவிடக் குறைவாகத்தான் பெறுவார்கள்.

பிற்பகல் 1-25

இன்னும் ஒன்று. மத்திய அரசு ஊதியங்களை மாற்றியமைக்கும் போது ஒருசில பதவிகளுக்கு உயர் அளவு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசில். அதை இங்கே பின்பற்றினால் இங்கே ஏற்கெனவே இருக்கின்ற சமன்பாடு குந்தகப்படும். அதற்கு ஒரு குறை ஏற்பட்டுவிட்டதாக மற்ற அரசு அலுவலர்கள் போர்க்கொடி தூக்குவார்கள். எனவேதான் இவற்றை எல்லாம் குறித்து அலுவலர்களிடமும், ஆசிரியர்களிடமும் அந்தப் பிரதிநிதிகளிடமும் விளக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், ஊதிய விகிதங்களை மாற்றியமைக்கும் போது Scale to Scale, Pay Scale to Pay Scale என்ற அந்த அடிப்படையில் இவை திருத்தியமைக்கப்பட்டன. ஒன்றை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இப்படி மத்திய அரசின் இந்த ஊதிய விகிதங்களை இந்தியாவிலேயே நிறைவேற்றியுள்ள மாநிலங்கள் குஜராத், இராஜஸ்தான், யூ.பி. மூன்றும்தான். அடுத்து, நம்முடைய மாநிலம். இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஊதிய விகிதங்கள், இப்போது மத்திய அரசைப் போல வழங்கப்படவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அதுமாத்திரம் அல்ல. தமிழ்நாட்டில்தான் ஊதிய விகிதங்களில் கூட, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைத் திட்டமும் இங்கே தான் இருக்கிறது. அதுவும் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்ற உறுதியை நான் அந்தப் பிரதிநிதிகளிடம் வழங்கியிருக்கிறேன். எனவே, இதன் காரணமாக, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் இந்த ஊதிய உயர்வால் ஆண்டு ஒன்றுக்கு 1,250 கோடி ரூபாய் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. 1-6-1988 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் முன்பு வழங்கினோம்; அதைப்போல இப்போதும் 1998-லிருந்து வழங்குகிறேன் என்று சொல்லிப் பார்த்தேன். 1988-லிருந்து 1998, 10 ஆண்டுகள். இதையெல்லாம் சொல்லி, வாய்



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

ஜாலம் பேசி ஏமாற்ற வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுடைய உறுதியான பிடிவாதத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய கோரிக்கையின்படி 1-1-1996 முதல், தேதி நிர்ணயிக்கப்பட்டு அந்த ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே -'arrears'- பழைய பாக்கி, அதனால் ஏற்படுகின்ற பாக்கித் தொகை, 1996 என்றால் இந்த 2 ஆண்டுகளில் ஏற்படுகின்ற பாக்கித் தொகை இருக்கிறதே, அது சுமார் 2400 கோடி ரூபாய் ஆகும். அதை உடனடியா.க தரமுடியாது என்று அவர்களிடத்தில் நீண்டநேரம் பேசி அவர்களும் நிலைமையை உணர்ந்து பி.எஃப். வைப்பு நிதியில் 60 சதவீதம், 1440 கோடி ரூபாய் வைப்பு நிதியில் வைப்பது என்றும், 40 சதவீதம், 960 கோடி ரூபாய். அவர்களுக்குக் கொடுப்பது, அதைக் கூட 2 தவணைகளாக இந்த ஆண்டு 20 சதவீதம், 480 கோடி ரூபாய், அடுத்த ஆண்டு 20 சதவீதம், 480 கோடி ரூபாய் என்று கொடுப்பது: எவ்வளவு சாமர்த்தியமாக இந்த நிதிநிலையைக் கையாண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்களே. இதுதான் சாமர்த்தியம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித்தான் செய்ய முடிந்தது. எப்படி அந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள் என்பதற்கான விளக்கத்தை ஒரு சில உதாரணங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அலுவலக உதவியாளர்கள், அவர்களுடைய அடிப்படை ஊதியம் இதுவரை ரூ. 750 முதல் ரூ. 945 என்ற அளவில் இருந்தது. இனிமேல் அந்த அடிப்படை ஊதியம் ரூ. 2550 முதல் ரூ. 3200 என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. அதாவது, ஓர் அலுவலக உதவியாளர் இதுவரை துவக்கத்திலே 2550 ரூபாய் ஒட்டுமொத்தமாக, அகவிலைப்படியும் சேர்த்து ஒட்டுமொத்த ஊதியமாக வாங்கிக்கொண்டிருந்ததற்கு மாறாக, இனி 3222 ரூபாய் ஊதியமாக பெறலாம். ஆயிரம் என்று சொன்ன அதாவது 642 ரூபாய் அதிகமாக பெறலாம். ஆயிரம் என்று சொன்ன உடனே எல்லோரும் ஆஹா என்றார்கள். 642 ரூபாய் அதிகமாகப் பெறலாம். இதுவே அதிகத் தொகை தான், நம்மைப்பொறுத்தவரையில். அவர்களுக்குச் சிறிய தொகையாக இருக்கலாம். கொடுப்பவர்களுக்கு இது பெரிய தொகை. அந்த அலுவலக ஊழியரே உச்ச நிலையில் இதுவரையிலே 3160 ரூபாய் ஒட்டுமொத்தமாக ஊதியம் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 4021 ரூபாய், அதாவது, 861 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். ஃபர்ஸ்ட் கிரேடு கான்ஸ்டபிள் -

முதல் நிலைக் காவலர்களுடைய அடிப்படை ஊதியம் இதுவரை இருந்தது, 950-இலேயிருந்து 1,500 வரையில். இவர்களுக்குத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம், அகவிலைப்படியெல்லாம் சேர்த்துத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம்....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இவர்களுக்குத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் 3050-லிருந்து 4590. முதல் நிலைக் காவலர் ஒருவர் ஆரம்ப நிலையில், இதுவரை அனைத்துப் படிகளையும் சேர்த்துப்பெற்று வந்த 3174 ரூபாய் என்பதற்கு மாறாக, இனி 3852 ரூபாய் ஊதியமாக-அதாவது 678 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

முதல் நிலைக் காவலரே, உச்ச நிலையிலே இதுவரையில் 4915 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 5712 ரூபாய், அதாவது 797 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

இளநிலை உதவியாளர், தட்டச்சர், தொலைபேசி இயக்குபவர், ஓட்டுநர், மகப்பேறு உதவியாளர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்து வந்த அடிப்படை ஊதியம் 975-லேயிருந்து 1660. இவர்களுடைய திருத்திய ஊதிய விகிதம் 3200 முதல் 4900 வரையில். இதுவரை இவர்கள் ஒட்டுமொத்தமாகப் பெற்று வந்தது 3245 ரூபாய். இனி அவர்கள் பெற இருப்பது 4021 ரூபாய். அதிகமாக 776 ரூபாய் பெறுவார்கள்.

தலைமைச் செயலக உதவியாளரின் அடிப்படை ஊதியம் இதுவரை 1100 முதல் 1660 வரை. தற்போது திருத்திய ஊதிய விகிதம் 3625 முதல் 4900. மொத்தமாக இவர்கள் இதுவரை பெற்று வந்த 3617 ரூபாய் என்பதற்குப் பதிலாக, இனி 4501 ரூபாய், அதாவது 884 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

உச்சகட்டம் என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் என்றால், அவர்கள், அதிக சர்வீஸ் - அதிக சர்வீஸ் எடுத்தவர்கள் உச்சகட்ட ஊதியம் பெறுவார்கள். அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டேன்.



அமைச்சுப் பணி உதவியாளர், இடைநிலை ஆசிரியர், வருவாய் ஆய்வாளர், உதவி வேளாண்மை அலுவலர், தலைமைக் காவலர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்து வந்த ஊதியம் 1200 முதல் 2040 வரை. திருத்தப்பட இருக்கும் ஊதிய விகிதம் 4000-த்திலிருந்து 6000 வரை.

அதாவது, இவர்களெல்லாம் ஆரம்ப நிலையில் இதுவரையில் மொத்தமாக மாதம் ஒன்றுக்கு 3964 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 4985 ரூபாய் பெறுவார்கள். முன்பு பெற்றதைவிட 1021 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

இதே பதவியிலே இருப்பவர்களுக்கு உச்சகட்டத்தில் இதுவரை 6676 ரூபாய் பெற்றதற்கு மாறாக 7680 ரூபாய், அதாவது 1004 ரூபாய் மாதம் ஒன்றுக்கு அதிகமாகப் பெறுவார்கள்.

பட்டதாரி ஆசிரியர், ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர், தலைமைச் செயலக முதுநிலைத் தட்டச்சர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்து வந்த ஊதிய விகிதம்1400-லேயிருந்து 2600. தற்போது திருத்தப்பட்ட ஊதிய விகிதம் 5000-த்திலிருந்து 7800. மொத்த ஊதியமாக இவர்கள் மாதம் ஒன்றுக்கு 4613 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக 6350 ரூபாய், அதாவது 1737 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

கிராம உதவியாளர்கள் போன்றவர்கள் ஊதியமும் குறைந்தபட்சம் 40 சதவீதம் ஊதிய உயர்வு என்றவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

உதாரணமாக, கிராம உதவியாளர்கள் ஊதிய விகிதம் தற்போது 600-லேயிருந்து 750 என்பதிலேயிருந்து ரூபாய் 1800 முதல் 2240 என்று மாற்றியமைக்கப்படும். அதாவது, கிராம உதவியாளர்கள் மாநகரத்திலே பணி புரிபவர்கள் கூடுதலாக மாதம் ரூபாய் 397-ம், கிராமத்திலே பணியாற்றுபவர்கள் கூடுதலாக மாதம் 252-ம் பெறுவார்கள்.

பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களான சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், தற்போது ரூபாய் 200 முதல் 400 என்ற ஊதிய விகிதத்தில் இருக்கின்றார்கள். இவர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதமாக ரூபாய் 600 முதல் 1100 வரை வழங்கப்படும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

இதிலேயிருக்கின்ற குறைபாடுகளையெல்லாம்-ஏதாவது இருக்குமேயானால், முரண்பாடுகள், குறைபாடுகள் இருக்குமேயானால், அதற்காக One man Commission என்ற ஒன்று அமைக்கப்படுகிறது. அந்தக் கமிஷன் மூலமாகக் குறைபாடுகளைச் சொல்லி மேலும் திருத்தங்களைச் செய்து கொள்ளலாம் என்ற உறுதியையும் இந்த அவைக்கும், அரசு ஊழியர்களுக்கும் நான் வழங்குகின்றேன்.

பிற்பகல் 1-35

சமூக நீதி. இந்த ஆண்டு சுதந்திரப் பொன் விழா ஆண்டு என்ற காரணத்தினாலும், மொழிக் காவலர்கள், தேசத் தியாகிகள் இவர்களையெல்லாம் கௌரவிப்பதற்காக அவர்களுக்கு ஓய்வூதியத் தொகையை 3 ஆயிரம் என்றும், அவர்களுடைய வாரிசுகளுக்கு 1500 என்றும் ஆக்கியுள்ளதையொட்டி, சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கும், அவர்களுக்குரிய மரியாதையை, சமூக நீதி அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு தரும் என்பதற்கு அடையாளமாகத்தான் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன். 1987-ஆம் ஆண்டு அவர்கள் இந்தப் போராட்டத்திலே அவர்களுடைய உயிரைத் தந்தார்கள். அதற்குப் பிறகு, அவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத காரணத்தினால், அந்தத் தொகை வரவேண்டும் என்பதற்காக வழக்குப் போட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே அறிவிக்கும்போது எனக்கே தகவல் தெரியாது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம். இருந்தாலும், நான் அறிவித்த பிறகு, அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக ஆணை பிறப்பித்து அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, ஒரு கோப்பு வந்தது. அந்தக் கோப்பில் வழக்கு விவரங்கள் எல்லாம் இருந்தன. அவர்களுக்கு வழக்கு போட்டுத்தானா பணம் தர வேண்டும்; அந்த வழக்கை எதிர்த்து இன்னொரு வழக்காடுவதா என்றெல்லாம் கேட்டுவிட்டு, அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று இருப்பதை-- இதுவரையிலே, எனக்குக் கிடைத்த பட்டியலில் 20 பேர்களுடைய பெயர்தான் வந்திருக்கிறது. மற்ற பெயர்களையெல்லாம் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏ.க்கள் ஒன்று, இரண்டு, இரண்டின் எம்.எல்.ஏ.க்களும் இதிலே ஒன்றாக இருந்து (சிரிப்பு) இரண்டும் ஒன்றாக இருந்து அந்தப் பெயர்களையெல்லாம் வழங்க



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, மொழிக் காவலர், தேசத் தியாகிகள் என்ற பட்டியலில் இந்தச் சமூக நீதிக் காவலர்களும் சேர்க்கப்பட்டு அவர்களுடைய குடும்பத்திற்கு 3 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கின்றேன். அதுமாத்திரமல்ல, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்னுயிர் நீத்த தியாகிகளின் வாரிசுகளுக்கு, சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப் போலவும், மொழிப் போர்த் தியாகிகளைப் போலவும், சமநிலையிலே கருதி குடும்ப ஓய்வூதியமாக மாதம் 1500 ரூபாய் வழங்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்ற உறுப்பினர்கள் குறை. (மேசையைத் தட்டும் ஒலி) 1997-98ஆம் ஆண்டில் முதன் முதலாக, தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்கு ரூபாய் 25 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்ட தொகை 58.75 கோடி ரூபாய் ஆகும். நிதிநிலை அறிக்கையின்போது இத்தொகையை பல உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க 25 இலட்சம் ரூபாய், என்பதை தொகுதிக்கு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன். ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையிலே 536 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்குமென்று குறிப்பிட்டிருந்தேன். இவ்வளவு பற்றாக்குறையா, இவ்வளவு பற்றாக்குறையா என்று திருநாவுக்கரசிலிருந்து, சுப்பராயனிலிருந்து, பழனிசாமியிலிருந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து எல்லோரும் இவ்வளவு பெரும் பற்றாக்குறையா என்று அவர்களுடைய கவலையைத் தெரிவித்தார்கள். ஆனால், உங்களுக்கு வேண்டுமென்கிறபோது மாத்திரம் எல்லோரும் சேர்ந்து கைத்தட்டுகிறீர்கள். (சிரிப்பு) இதிலே சென்னைக்கு நான் 36 இலட்சம் கொடுக்கிறேன். நான் 36 கொடுத்தால் முதலமைச்சர் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று ஸ்டாலின் கேட்டார். (சிரிப்பு) ஏற்கெனவே, நாடாளுமன்றத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் தரப்படுகிறது. அஃதன்னியில் நாம் சட்டமன்றம் சார்பாகத் தருகிறோம். இதையெல்லாம் நீங்கள் கூட்டிப் பார்க்க வேண்டும். சென்னைக்கு இவ்வளவு கொடுப்பதால், சென்னைக்கே நாம் தொகையை ஒதுக்கலாமா வேண்டாமா என்கிற எண்ணம் கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும்கூட அதை மன்னித்து (சிரிப்பு) வேறு வழியில்லாத காரணத்தால், நீங்களும் கேட்டுவிட்ட காரணத்தினால் 30 இலட்சம் ரூபாய் என்பதை 35 இலட்சம் ரூபாயாக வழங்குகிறேன் என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) என் நிலைக்கு இறங்கி-- கருணாநிதி நிலைக்கு இறங்கியல்ல, நிதிநிலைக்காக இறங்கி, இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-40*

வரிகளைக் குறைப்பது பற்றியும், வரிகள் விலக்கப்பட்டது பற்றியும் அனைவரும் பேசியிருக்கிறீர்கள். நம்முடைய சி.பி.எம். கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்கள் அதைப் பெரிதும் பாராட்டிவிட்டு, ஏழை எளியவர்களுக்காகச் செய்யப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் பாராட்டிவிட்டு, ஆக்கபூர்வமான பல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அவர்களைப்போலவே இங்கே உரையாற்றிய அத்தனை பேரும் தங்களுடைய தொகுதியினுடைய குறையை, அக்கா போன்றவர்கள் எடுத்துக்காட்டினாலும்கூட, அதேநேரத்திலே அவ்வளவு பேரும் இன்னும் சில வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதிலேயும், குறிப்பாக நிதிநிலை அறிக்கையிலே செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைக்கும் man made fibre and yarn-க்கு விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைக்கப்பட்டது என்றும், அது கடந்த ஆண்டு எதிர்பார்த்ததற்கு மாறாக, வரி வசூல் குறைந்துவிட்ட காரணத்தால் விற்பனை வரி மீண்டும் 8 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்தேன். அதை அறிவித்தவுடனே, நம்முடைய சொக்கர் அவர்கள் அவை முடிந்து செல்கிற நேரத்திலேயே, நீங்கள் சரியாகக் கணக்குப் பார்க்கவில்லை என்று தெரிகிறது, சரியாகப் பாருங்கள் என்று சொன்னார்கள். தொடர்ந்து திரு. சுதர்சனம் எம்.எல்.ஏ. அவர்கள் பேசும்போதும், திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசும்போதும், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஒரு கடிதம் மூலமாக இந்த விவரங்களைத் தெரிவித்துள்ள நிலையிலும், திரு. ஐ. கணேசன் அவர்கள் பேசிய நிலையிலும், மற்றவர்களும் பேசிய நிலையிலும், இதை ஆராய்ந்தபோது, இந்த விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

1997-98 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது இதில் முந்தைய ஆண்டைவிட 50 இலட்சம் ரூபாய் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மாநிலங்களுக்கிடையேயான விற்பனைத் தொகை கணிசமாக



உயர்ந்துள்ளது. இந்தப் பிரிவிலே, அதிகமாக வரி செலுத்தும் நிறுவனமாகிய South India Viscose 1997-98 ஆம் ஆண்டில் பெரும் பகுதி உற்பத்தி மேற்கொள்ளாத காரணத்தால் விற்பனை வரியிலே முழு அளவை எய்தவில்லை என்று அறியப்படுகிறது. மேலும் இந்த ஆண்டு உற்பத்தி தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ள காரணத்தால் இந்தப் பிரிவில் கூடுதல் வரி வருவாய் கிடைக்க வாய்ப்புமுள்ளது. எனவே, முன்னர் இருந்த வரி வருவாய் நிலையை எட்ட இந்த ஆண்டு வாய்ப்பு இருப்பதால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு சதவீத வரியையே மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து அமல் செய்ய இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தேங்காய், கொப்பரை, இதிலே ஒரு குழப்பம். தேங்காய்க்கா, கொப்பரைக்கா? இரண்டுக்குமா? அல்லது கொப்பரைக்கு மாத்திரமா? என்று. ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் அச்சடித்துவிட்டார்கள். அதனாலே தேங்காய்க்கு இல்லையா என்று ஒரு சந்தேகம் வந்தது. எனவே தேங்காய்க்கும் உண்டு; கொப்பரைக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே தேங்காய் என்பதற்குப் பக்கத்திலே 'கமா' இல்லாததாலும், நான் சொன்னபடி ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் இருப்பதாலும் இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மட்டுமா, தேங்காய்க்குப் பொருந்துமா என்ற சந்தேகத்தைப் போக்கும் வகையில், இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மாத்திரமல்லாமல் தேங்காய்க்கும் உண்டு என்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன். மேலும், நிதிநிலை அறிக்கையில் நம் மாநிலத்திலே விற்பனை செய்யும் தேங்காய் மற்றும் கொப்பரைக்குத்தான் வணிக வரி 1 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தது. நமது மாநிலத்திற்குள்ளே மாத்திரம். அதற்குத்தான் ஒரு சதவீதம் என்று குறைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து தேங்காய் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய், கொப்பரை வரி விகிதமும் 2-லிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாநிலத்திற்குள்ளேயும் ஒரு பர்சன்ட்; வெளியிலே விற்றாலும் ஒரு பர்சன்ட். (மேசையைத் தட்டும் ஒலி).

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் இந்த எண்ணெயோடு பருத்தி எண்ணெயும் சேர்த்துக்கொள்ளப்பட

வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஜி. சம்பத், நம்முடைய திரு. சொக்கர், திரு. ராஜ்குமார் மன்றாடியார் போன்றவர்கள் எல்லாம் இதை வலியுறுத்தி எனக்குக் கடிதங்கள்கூட கொடுத்திருக்கின்றார்கள். சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், இதோடு பாமாயிலையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது ஜி.ஓ.-வில் விடுபட்டுப் போய்விட்டதாக எனக்குத் தகவல். பாமாயிலையும் சேர்த்துக்கொள்ளலாம். மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது என்று அறிவித்திருந்தேன். இந்த வரிவிலக்கானது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இதுவரை அளிக்கப்படாத சலுகையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நம்முடைய திரு. தாமரைக்கனி எல்லாம் எதிர்த்து பட்ஜெட் கண்டனக் கூட்டமெல்லாம் நடத்தப்போகிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லவேண்டுமேயானால், சமையல் எண்ணெய்க்கு கர்நாடகாவில் 5 சதவீதம் வரியும், கேரளத்திலும், ஆந்திராவிலும் 9 சதவீத வரியும் தற்போது வசூலிக்கப்படுகிறது. பருத்திக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், அரிசித் தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆகியவற்றுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அந்த இரண்டு எண்ணெய்களுக்கும் முழு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-45*

நிதிநிலை அறிக்கையில் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 1991-ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் வரி கட்டவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குப் பரிந்துரை செய்தவர்கள் திரு. சுதர்சனம், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், திரு. ஞானசேகரன், திரு. ராஜ்குமார் மன்றாடியார், திரு. ஈஸ்வரன் மற்றும் பேராசிரியர் தீரன். இவர்களெல்லாம் பரிந்துரை செய்து பேசியிருக்கிறார்கள்.





ஆனால் கடந்த 1997 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்திருக்கிற ஆணையில், முத்திரைச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 16% வரி செலுத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த 16% வரியைத்தான் நிதிநிலை அறிக்கையில் 11% என்று குறைத்து நான் அறிவித்திருந்தேன், என்றாலும் இந்த மசாலாப் பொடிகளுக்கு வரியைக் குறைக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும், அதன் உற்பத்தியாளர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று, வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 4% என்றும், வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு 2% என்றும் வரி குறைப்பு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சலவைக்குப் பயன்படுத்தப்படும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும், வணிகச் சின்னம்கொண்ட பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும் ஒரே விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது குறித்து பேராசிரியர் தீரன், செங்கை சிவம் இந்த அவையிலே கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையை ஏற்று சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலம் உட்பட, சலவை வெளுப்பானுக்கு Hand made laundary Brightner-க்கு 16% லிருந்து 4% ஆக வரி குறைப்பு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போதுதான் பொட்டு விஷயம் வருகிறது. (சிரிப்பு) நிதிநிலை அறிக்கை வெளிவந்த பிறகு, பொதுவாக விமர்சித்த கட்சித் தலைவர்கள் சிலரும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகள் பிரச்சினை பற்றிச் சொல்லவே இல்லை என்று சொன்னார்கள். எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. இந்த 49 பக்க நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 25 பக்கமாவது விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஒரே ஒரு ஆட்சி, அதை அறிமுகப்படுத்திய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் சொல்லிவிட்டு, அதையெல்லாம் செய்தவர், இதைச் செய்யவில்லையே என்று சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு விவசாயிகள் பற்றி ஒன்றுமே இல்லை, விவசாயிகளைக் கைவிட்டுவிட்டார் என்று எல்லோரும் பேசியது

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல் விலைக்கு மேல் வேறு எந்த மாநிலத்திலும் கொடுக்காத பணம் குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய். அதை போனஸாகக் கொடுக்கக்கூடாது. திரு. ஜகஜீவன்ராம் உணவு அமைச்சராக இருந்தபோது. நான் முதலமைச்சராக இருந்தபோது கேட்டேன். அதிக விலை கொடுக்க வேண்டுமென்று. கொடுப்பதற்கு இடமேயில்லை என்று கண்டிப்பாகச் சொன்னார்.. இல்லை, கட்டாயம் தமிழகத்திற்குக் கொடுத்தே தரவேண்டுமென்று சொன்னபோது. அவர் வேறு வழி சொல்லிக் கொடுத்தார். அந்த வழிதான் 'நீ போனஸாகக் கொடுப்பதை. வண்டிச் சத்தம். வாடகை என்று சொல்லி, கொஞ்சம் அதிகத் தொகையை உயர்த்திக் கொடு. பிரச்சினை வராது' என்று சொன்னார். அப்பொழுது ஆரம்பித்ததுதான் இது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் செலவுத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் நலன் கருதி. நெல்லை கொள்முதல் செய்யும்போது, தரக்கட்டுப்பாடு. 15 ரூபாய் தரக் கட்டுப்பாட்டுக்காக இருந்ததை 5 ரூபாயாக குவிண்டால் ஒன்றுக்கு குறைக்கப்பட்டிருப்பதும் விவசாயிகளுக்காகத்தான்.

நெல்லை கொள்முதல் செய்யும்போது இதுவரை 18% ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. விவசாயிகளுடைய நெல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 20% ஈரப்பதம் இருந்தாலும் கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்க 926 நேரடிக் கொள்முதல் விற்பனை நிலையங்களை இந்த ஆண்டு ஏற்படுத்தினோம். எந்த ஆண்டிலும் இவ்வளவு நிலையங்கள் கிடையாது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

உலக வங்கிநிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் 88 கோடி ரூபாயும், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு 9.85 கோடியும். வரும் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

டிசம்பர் 1996-லே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபொழுது 10,05,166 விவசாயிகள் துயர் துடைக்கும்பொருட்டு, 47 கோடியே 98 லட்சத்து



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

70 ஆயிரம் ரூபாய் விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதும் விவசாயிகளுக்காகத்தான்.

பிற்பகல் 1-50

நவம்பர் 1997-ல் ஏற்பட்ட வெள்ளச் சேதாரங்களுக்காக நிவாரண நிதியாக 58.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

2½ லட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில் குறைந்தபட்ச விலையாக ஒரு டன் கரும்புக்கு ரூ. 660 எனவும், இன்னும் சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரக மானியம், வாகன வாட்கை மானியம் ரூ. 35-ஐயும் கணக்கில் எடுத்துக்கொண்டால் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.695-ம் அதிகபட்சம் ரூ. 880-ம், சராசரியாக ரூ. 765-ம் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்குத்தான் கரும்பு விவசாயிகளுக்கு ஆயிரம் என்று சொன்னீர்களே, ஆயிரம் என்று சொன்னீர்களே என்றால், 5 வருடம் முடியவில்லையே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று சொன்னோம். ஆயிரம் வேண்டுமென்றால் 5 வருடம் முடியட்டும், முடியவிடுங்கள். (சிரிப்பு)

காவிரி டெல்டா பகுதிகளில், குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாக உள்ள காட்டாமணக்குச் செடிகளை அகற்ற, 2,384 ஹெக்டேர் பரப்பில் களைக் கொல்லித் தெளித்து, காய்ந்த இலைகள் அகற்றி எரிக்கப்பட்டது. இதற்காக 102 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. நீண்டகாலம் கிடப்பிலே போடப்பட்டிருந்த காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ. 10 கோடிக்கு மேற்பட்ட செலவிலான பணிகள் நேர்த்தியாக நடைபெற்றன. வருமாண்டிலும் அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடுவதற்கு முன்னர், பணிகள் முடிக்கப்படவுள்ளன. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய 4 மண்டலங்களிலே உள்ள 200 ஏரிகளில் தூர்வார 19.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் 2 ஆண்டுகளாக வறண்டு கிடந்த 22,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெற 7½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலியும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.100-லிருந்து ரூ.150-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சரி, போதாது திரு. பழனிசாமிக்கு இன்னும் என்ன என்று கேட்பார். தெரியும். தெரிந்துதான் இவற்றைச் சொல்ல விரும்புகிறேன், இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையிலே.

கடந்த பருவகாலத்திலே பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திலே கொண்டு அதற்கு ஒரு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி முழுவதும் ரத்து செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இந்த ஆண்டு இழப்பு 43 கோடியே 33 லட்ச ரூபாய். (குறுக்கீடுகள்) இல்லை, இது தமிழ்நாடு முழுவதற்கும். இதனால் இழப்பு 43 கோடியே 33 லட்ச ரூபாய். சில பேர் ஏமாந்து போய் வரி செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் நிலைமை என்ன என்று அக்காள், திருமதி பொன்னம்மாள் கேட்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நில வரியைச் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை பற்று வைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அவர்கள் செலுத்த வேண்டிய நில வரிக்காக ஈடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றைத் தவிர கூட்டுறவு வங்கிக் கடன். எதிர்பார்க்க வேண்டாம். இயலாமையைச் சொல்லப் போகிறேன். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் பெற்ற கடன்கள் மீதான இந்த ஆண்டுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதை அரசும் பரிசீலித்தது. 1994-ஆம் ஆண்டு, கடந்த ஆட்சியிலே, மாநில அரசு 'நபார்டு' வங்கியோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இத்தகைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வழியே இல்லை. அப்படி 1994-ல் ஒப்பந்தம் பண்ணியிருக்கிறார்கள் 'நபார்டு' வங்கியோடு. அப்படி



1998 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

'நபார்டு' வங்கியினுடைய ஒப்பந்தத்தினை மீறி வட்டியை நாம் தள்ளுபடி செய்தால் 'நபார்டு' வங்கி வருமாண்டுகளிலிருந்து எந்த நிதி உதவியும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்காது. அதுதான் ஒப்பந்தத்தின் ஷரத்து. நான் நேற்றைய முன்தினம், இங்கே முதலமைச்சர் அறையில் உட்கார்ந்து கொண்டு 'நபார்டு'-க்கு பலமுறை போன் செய்தேன், அதிகாரிகள் மூலமாக. தலைமைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர், அமைச்சர்களெல்லாம் உட்கார்ந்து கொண்டு, நான், வேளாண்மைத் துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் இவ்வளவு பேர்களும் உட்கார்ந்து கொண்டு, இங்கேயிருந்து பலமுறை போன் செய்து அவர்களைத் தொடர்பு கொண்டபோது, அவர்கள் நிச்சயமாக முடியாது என்று மறுத்துவிட்டார்கள். அதை மீறிச் செய்தால், வட்டியைத் தள்ளுபடி செய்தால், 'நபார்டு' வங்கி, வரும் ஆண்டுகளிலேயிருந்து எந்த நிதி உதவியையும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தராது, இது ஒப்பந்தத்தில் இருக்கிற ஷரத்து. 1994-ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம். இந்த ஆண்டு வட்டியை மாத்திரமாவது தள்ளுபடி செய்ய அனுமதிக்க வேண்டுமென்று வங்கியினுடைய தலைவரோடு, தமிழக அரசினுடைய மூத்த அதிகாரிகளைப் பேசச் சொன்னேன். எனினும், 'நபார்டு' வங்கியினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, வேறு வழியின்றி, தமிழக அரசின் சக்திக்கு ஏற்றவகையில், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றியமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நீண்டகாலக் கடன்களுக்கும் இதுபோன்ற கால நீட்டிப்பு வழங்கப்படும். இதனால், விவசாயிகள் அபராத வட்டியாக சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

இன்னொன்று, அன்றைக்குப்பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து கரும்பை எடுக்காத காலகட்டத்தில், விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பை அரவை செய்வதற்கு, தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூபாய்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 6

ஐந்தாயிரமும், ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஐந்து ரூபாயும் கரும்பு விவசாயிகளிடமிருந்து தற்போது வசூலிக்கப்படுவதாக, நம்முடைய கலசப்பாக்கம் உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் தெரிவித்தார்கள். இதே கோரிக்கை, மேலும் பல விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, இனி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ஐந்தாயிரம் ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாயாகக் குறைத்து, ஒரு யூனிட் மின்சாரத்திற்குத் தற்போது வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் என்பதை ஒரு ரூபாய், இருபத்து ஐந்து காசு என்று குறைத்து வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு) மாதவரம் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி நம்முடைய சுப்பராயன் அவர்கள் கேட்கிறார்கள். பிறகு, தொழிலாளர் மானியத்திலே பேசுவதற்கு பிரச்சினையே இல்லாமல் போய்விடும். எனவே, அப்போது இது பற்றி, தாங்கள் மகிழத்தக்க முடிவை அறிவிக்கின்றேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, வெண்ணெய்க்கு வரியை நீக்க வேண்டுமென்று கேட்டோம். தயவுசெய்து அதையும் நீக்கிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பாலகிருஷ்ணனுக்கும், வெண்ணெய்க்கும் நெருங்கிய தொடர்பு! (சிரிப்பு) அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம்.

## 2. அறிவிப்பு

### காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கக் கிளையின் பொதுக்குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காமன்வெல்த் பாராளுமன்றச் சங்க தமிழ்நாடு கிளையின் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம், இன்று பேரவைக் கூட்டம் முடிந்த பிறகு, சட்டமன்ற மேலவைக் கூட்ட மண்டபத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

*அனைத்துச் சங்க உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து எல்லோரும் வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*110. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு விதிகளை வகுப்பது குறித்து உள் (நீதிமன்றங்கள்-II) துறையின் 10-11-1997-ஆம் நாளிட்ட 1618-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 44/1997) 15(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*111. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1) வ.வ.அ.நி./5/96-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-9-1997 ஆம் நாளிட்ட 6955/எப்.1/96-7 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

V 21, 31/4/98
N98.43
28454

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.